


# ஏலேய்...

பூமணி

# ஏலேய்

## பூமணி

சந்தியா
பதிப்பகம்

52 (ப. எண் 7), முதல் தளம், அஞ்சுகம் நகர், அசோக் நகர்,
சென்னை - 600 083, தமிழ்நாடு, தென் இந்தியா.
E-Mail : piththan@yahoo.com

# உள்ளே


| | |
|---|---|
| முடிவும் முதலும் | 7 |
| முன்னத்தி ஏர் | 10 |
| தோப்பு | 17 |
| நோவு | 22 |
| அதாகப்பட்டது | 31 |
| புதுவாசனை | 39 |
| வேர்களைத் தேடும் விரல்கள் | 42 |
| எழுத்து | 48 |
| திக்குத் தெரியாத காட்டில் | 54 |
| கிட்டத்தில் | 81 |
| ஏலேய் | 100 |

# பதிப்புரை

“என்னை ‘தலித்’ என்று கூறிக்கொள்ள விரும்பவில்லை. அந்த கடன் வாங்கிய ‘பட்டம்’ எனக்குத் தேவையுமில்லை. எழுத்தாளனை இப்படி சிறு கூண்டுக்குள் அடைத்து நிறுத்திவைப்பது இலக்கியத்திற்குச் செய்யும் பெரிய துரோகமாகும். இதுதான் தொடர்ந்து நடக்கிறது.

‘தலித்’ என்ற வார்த்தை இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்பே நான் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களைப்பற்றி எழுதியவன். என்னை இன்ன சாதிக்காரன் என்று சொல்லிக்கொள்வதில் கூச்சமோ தயக்கமோ கிடையாது. அதற்காக நான் வேறு எந்த இனத்தினரைப் பற்றியும் எழுதக்கூடாது என்று தடைவிதிப்பதற்கு எந்தக் கொம்பனுக்கும் உரிமையில்லை. ஏனெனில் அடிப்படையில் நான் ஒரு மனுசன். அழகிரிப் பகடையும் கந்தையா நாயக்கரும் தலையாரித் தேவரும் கருப்பக் கோனாரும் சங்கரலிங்கம் பிள்ளையும் சுப்பையனாசாரியும் எனக்குச் சொந்தக்காரர்கள். அவர்களது வாழ்வியல் அவலங்கள், சந்தோசங்களுடன் எனக்கு அணுக்கமான உறவு உண்டு. அவர்களைப்பற்றி எழுதுவதற்காக நான் ஒவ்வொரு இனத்திலும் உடல்ரீதியாகப் பிறவியெடுக்கமுடியாது.

பிறவியிலேயே நான் ‘தலித்’ என்று கூறுவதற்குப் பின்னால் ஆதிக்கச் சாதி மனப்பான்மை ஒளிந்திருப்பது தெரிகிறது. இலக்கியத்தைச் சாதிபிரித்துப் பார்க்கும் கேவலத்தின் காரணமாகவே இந்த ஆதிக்கமும் ஆணவமும் வெளிப்படுகின்றன.” - என்று கூறும் பூமணி பழகத்தான் பூவைப்போல் மென்மையானவர். படைப்பிலோ தீயைப்போல் உக்கிரமானவர். எந்த சமரசத்திற்கும் உடன் படாதது பூமணியின் பேனா.

புதுமைப்பித்தன், மௌனி, கு. அழகிரிசாமி, கு.ப.ரா. என்பது தமிழ்ச்சிறுகதையின் முதல் தலைமுறை என்றால் வண்ணநிலவன், வண்ணதாசன், நாஞ்சில் நாடன், இராஜேந்திர சோழன் என்று வளரும் தமிழ்ச்சிறுகதையின் இரண்டாம் தலைமுறையில் முக்கியமானவர், நாவல்களுக்காகவே பூமணி அதிகம் பேசப்பட்டாலும். லேபிள் இலக்கியங்கள் வருவதற்கு முன்பே ஆத்மபூர்வமாக தன் படைப்பு முயற்சியில் ஈடுபட்டவர். ஒரு படைப்பாளிக்கே இருக்கவேண்டிய குணமான தன்னை எதிலும் முன்னிலைப்படுத்திக் கொள்ளாத தன்மை பூமணியின் தனித்தன்மை. இலக்கிய ஏடுகளில் தன் நேர்காணல்கள் வருவதைக்கூட நிராகரிக்கும் எளிமை பூமணியின் எளிமை. கி.ரா.வுக்கு நிகராக கரிசல் வாழ்வைக் கலைப்படுத்தியவர். கோமல் சுவாமிநாதன் போன்ற சென்னைவாழ் கலைஞர் 'தண்ணீர் தண்ணீர்' திரைக்கதையில் கரிசல் மொழியை எழுத ஆதாரமாக இருந்தது பூமணியின் 'பிறகு'தான்.பத்மராஜன் என்ற ஒரு அபூர்வமான மலையாளத் திரைப்பட இயக்குனர். அவரின் முதல் திரைப்படம் பெருவழி அம்பலம். கிட்டத்தட்ட பூமணியின் 'வெக்கை'யின் சாயல் கொண்டது.

தொடக்கத்தில் கவிஞர், பிறகு சமூக மாற்றத்திற்காகப் போராடும் அமைப்பில் ஒரு போராளி, அப்புறம் சிறுகதையாளர். அதன்பிறகு, 'பிறகு' நாவலின் மூலம் பேசப்பட்ட படைப்பாளி, பேனா நெப் தயாரிப்பு பற்றிய ஒரு டாக்குமெண்டரி அப்புறம், சில தொலைக்காட்சித் தொடர்கள், 'கருவேலம் பூக்கள்' என்ற திரைப்படத்தின் இயக்குனர் - இப்படி பன்முகத்தன்மைகொண்ட பூமணியின் முதல் கட்டுரைத் தொகுப்பு இது. தொடர்ந்து போலந்துச் சிறுகதைகளைத் தமிழில் தர இருக்கிறார்.

**வண்ணதாசன், வண்ணநிலவன் வரிசையில் பூமணியின் படைப்புகளை வெளியிடுவதில் எமது நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.**

**- சந்தியா நடராஜன்**

# முடிவும் முதலும்

முதல் கதையென்று எதைச் சொல்லுவது. முதலில் மனசுக்குள் எழுதிப் பார்த்ததையா இல்லை தாளில் எழுதி அச்சில் பார்த்ததையா. மனசுக்குள் வண்டலாகப் பதிந்த கதைகள் ரெம்ப இருந்தாலும் வெளியே கசிந்து வாய்க்காலிட்டதைத்தான் முதலாவது என்று சொல்லணும்.

அப்படி வெளிவந்ததுதான் 'அறுப்பு' என்ற கதை. 'எழுத்து' வில் சி.சு.செல்லப்பா வெளியிட்டார். கதை, கவிதை, நாவல் என்று கண்டதைப் படித்த தாக்கம் கனத்து நிதானம் கனியாத பருவத்தில் எழுதியது. படிமங்களில் சஞ்சரித்து இயல்பு கைகூடாத பருவம்.

வாழ்க்கையில் அவனை ரெம்பவும் பாதித்த, பாதிக்கிற விஷயம் சாவுதான். அதன் அதிர்வில் சிதறும் அழுகையும் கண்ணீரும் பிரமிப்பும் பயமும் கோவமும் தாபமும் வெதும்பலும் வேதனையும்... அந்த ஆழ்மனப் பயணத்திற்கு எதுவுமே இணையாகாது.

அதனால்தான் அவன் பலமுறை செத்துப்போயிருக்கிறான். தன்னைப் பிணமாகச் சாத்திவைத்து, கிணற்றில் குப்புற மிதந்து, நெருப்பில் வெந்து நீந்து, நாலுபேர் தோளில் கிடத்தி, புதைத்து மூடி, பிறகு முண்டிவந்த அனுபவங்கள் எராளம்.

பிறகும் ராஜநாராயணன் தட்தட்டென்று அவன் கதவைத் தட்டுவார். புதுமைப்பித்தன் அவனுக்குள் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருப்பார். மௌனி விழுதாகத் தொங்குவார். 'பாச்சி செத்துப் போனாள்' என்று மாதவன் மாய்ந்து மாய்ந்து சொல்லிக் கொண்டிருப்பார். தனிமையில் வண்டிக் குதிரையொண்ணு தரையில் காலுதைத்து ஆவிவிடும் சோகத்தைச் சொல்லி எலியட் உருகுவார். இப்படி சாவுக்கும் அவனுக்கும் எப்போதுமே ஒரு அன்னியோன்னியம் உண்டு.

ஒருநாள் ஏறுவெயில் கசகசப்பில் கிணற்றுக்குக் குளிக்கக் கிளம்பினான். வயல் வரப்பில் தடுமாறி விடாமல் கவனமாக நடந்தான். வாய்க்காலுக்குள் நீர்ச் சிலுசிலுப்பில் நீலப்பூ சிரிக்க நெளிந்தாடும் நீர்முள் செடிகள். அருகில் வந்து தாமதித்து அதுக்குத் தோதாக வாலாட்டி முத்தாய்ப்பு வைத்துவிட்டு வெட்கத்தில் பாய்ந்தோடும் மீன்கள். வளைவிளிம்பைப் பற்றியபடி வேம்பரும்புக் கண்களின் சிலிர்ப்பில் வேடிக்கை பார்க்கும் நண்டு களுக்கென்று நழுவிக்கொண்டது.

அவன் பார்வை லயிப்பிலிருந்து திரும்பி வயல்வெளியை நோட்டம்விட்டது. அங்கே நெல்லறுப்பு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அறுப்பதும் அறுத்ததைக் கட்டுவதும் கட்டியதைச் சுமப்பதுமாக அடிதொடியான நடவடிக்கைகள். செங்கதிர் நிறைந்த வயல்கள் மூளியாகும் கோலம் அவனுக்குள் உறுத்தியது.

பக்கத்து வயலில் பெண்கள் குனிந்து கருதறுத்துக் கொண்டிருந் தார்கள். அத்தனைபேர் கழுத்திலும் தாலி ஊஞ்சலாடியது. ஓரத்தில் ஒருத்திக்கு மட்டும் வெறுங்கழுத்து. அந்தப் பெண் கொஞ்ச நாளுக்குமுன் சுமங்கலியாக இருந்தவள். அப்புறம் அழுகைக் கூச்சலுக்கிடையே தாலியறுக்கப்பட்டவள்.

இடியும் மின்னலுமாக அவனுக்குள் எத்தனையோ நினைவுகள் இறங்கின. உள்ளே அதிர அதிர சாவதற்குத் தயாராகினான்.

இப்போது பெண்கள் வரிசையாக தாலியறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆண்கள் நாக்குத் தொங்கும் பிணங்களைச் சுமந்து போனார்கள். எல்லாம் அவன் மனசை அறுக்க அந்த அறுதலியின் புருசனானான்.

புதுமைப்பித்தன், மௌனி, ராஜநாராயணன், மாதவன், எலியட் எல்லாரும் அவனைச் சுமந்துபோய்ச் சேர்த்தார்கள். அந்தச்

சொகமான, சோகமான சாவில்தான் 'அறுப்பு' கதை பிறந்தது. அதை அச்சில் படிக்கும்போது மறுபடியும் ஒருமுறை செத்துப்போனான்.

கதை அறுப்பில் தொடங்கி அறுந்துபோன அனுபவங்களாகத் தொடுத்து அறுப்பில் முடியும். அவனுக்குள்மட்டும் அந்த அறுப்பு இன்னும் முடியவேயில்லை.

# முன்னத்தி ஏர்

அப்போதெல்லாம் ராஜநாராயணனைத் தெரியாது. மணிவண்ணனைத் தெரியும். அகிலனைத் தெரியும். படக்கதை ஆசாமிகளுடன் பழக்கம். பழக்கமென்றால் சாமானியப்பட்ட பழக்கமா. தேடி ஓடிப் பழகினேன்.

சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் அம்மா தரும் சோளப் பொரியை பையில் போட்டுக்கொண்டு உள்ளூர் வாத்தியார் வீட்டுக்கு ஓடுவேன். அடுப்புக்கூடம் முழுக்க நிறைந்திருக்கும் டீச்சரை அரித்து 'கல்கி' வாங்கி அவசரமாகப் புரட்டி தொடர் கதையையும் படக்கதையையும் படித்து முடிக்கும்வரை மனசு நிலைகொள்ளாது. பொழுது இருட்டும். டீச்சருக்குத் துணையாக அரிக்கன் லாம்புச் சிமினியை விளக்கிக் கொடுப்பேன். கதை தொடரும். கொஞ்சநேரத்தில் அம்மாவின் வசவு கிட்டத்தில் வந்துகொண்டிருக்கும். மற்ற விஷயங்களை மிச்சம் வைத்துவிட்டு அம்மாவுக்குப் பின்னால் நடப்பேன்.

மறுநாளும் இதே கூத்து. உனக்குத்தான் புஸ்தகம் வாங்கி வந்திருக்கிறதாக்கும் என்கிற தோரணையில் டீச்சர் எடுத்துக் கொடுக்கும். சத்தியமாகத் தெரியும் அதுக்காகவும் வாங்கி வரவில்லையென்று. வாத்தியார் சுதந்திராக் கட்சிக்காரர். அதனால் 'கல்கி' வாங்கினார். வாத்தியாரிடம் நல்ல வார்த்தை சொல்லி தொடர்கதையையும் படக்கதையையும் கத்தரித்து நானே பைண்ட் பண்ணி பத்திரப்படுத்தியதும் அம்மாவின் வசவுக்கு நடுவில்தான். இப்படியாக சின்ன வயசிலேயே கதை எழுதுகிறவர்களுடன் ஒரு தொந்தம் ஏற்பட்டுப் போனது.

சரி இந்த கதைபடிக்கும் ஆர்வம் திடீரென்று கருமலையிலிருந்தா குதித்தது. கிடையாது. இதுக்கு அடியுரமாக இன்னும் சின்னவயசில் கதைகேட்ட அனுபவம் இருக்கிறதே. வீட்டுக்கு முன்னால் 'நிலா முற்றத்தில்' என் தலையில் விரலால் உழுது கொண்டே அம்மா சொன்ன கதையின் அண்டரண்டாபட்சி ஏழு கடல் தாண்டி என்னை எத்தனைநாள் உறங்கவைத்திருக்கிறது. உறக்கத்தில் நொண்டியன் வந்து ''கொக்கும் களியும் கக்கு'' என்பான். கூடவே அய்யாவுக்காக ஆஸ்பத்திரியில் பட்ட கஷ்டங்களையும் கடைசியில் அவர் அதுக்கெல்லாம் மசியாமல் சுடுகாட்டுக்கு உறங்கப் போய் விட்டதையும் கண்ணீர்க் கசிவில் ராத்திரியும் பகலும் அம்மா சொன்ன நிஜக்கதையும் வந்து போகும். சில ராத்திரிகளில் சாவு வீட்டில் பத்திமணத்தையும் பன்னீர்த்தெளிப்பையும் மீறிக்கொண்டு பிணத்திலிருந்து கிளம்பும் வாடைக்கு நடுவில் பகாசுரன் சோற்றுக்குக் கொக்கரிக்கும் கதையை ராகத்துடன் கேட்டபடி கொட்டாவிகளைத் தொடுத்ததுண்டு.

இன்னும் விசேசமான சங்கதி ஒரே சமயத்தில் கதையைக் கேட்டுக் கொண்டே பார்ப்பது. நரிக்குறத்தியாட்டமும் கும்மியாட்டமும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தன. பின்னால் சினிமாவும் சேர்ந்து கொண்டது. இந்த அனுபவங்கள் அறிவு பூர்வமான சிந்தனைகளை பின்னுக்குத் தள்ளி அமுக்கி உடம்பாலும் மனசாலும் கதைகளை உணரவைக்கிற வழிகளைத் திறந்துவிட்டன.

ராஜாநாராயணனை நினைக்கையில் சொந்தக் கதையிலிருந்து சொன்ன கதைவரை கிண்டிக்கிளறி வெளியேறுகிறது. அப்படியானால் என் வாழ்க்கைப் போக்கில் அவர் ரெம்பவும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பது வாஸ்தவம்தான். பலரைப்போல் சண்டீர்த்தனம் பண்ணாமல் சகஜமாக எனக்குத் தெரியவந்த மனுசன் அவர். அந்த சகஜம் இன்றைக்கும் என்னைத் திகைக்க வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் திகைப்பு ஒண்ணே அவர் இன்னும் எனக்குள்ளிருந்து குடிபெயரவில்லை என்பதற்குச் சாட்சி. அவரை அறிவுக்கோல் கொண்டு அறிந்த சந்தர்ப்பங்களைவிட உணர்ந்த அனுபவங்கள்தான் நிறைய.

அவரைத் தெரிவதற்கு முந்தி வேகாரியாக அலைந்தேன். பள்ளிப் பருவத்தில் பல்விளக்க கருவக்குச்சு ஒடிக்கும்போது என் அண்ணன் சிலாகித்த மு.வ.வும் பள்ளிக்கூடத்தில் டிரில்மாஸ்டர் புகழ்ந்த அண்ணாதுரையும் அவர் தம்பிகளும் கல்லூரியில் கிடைத்தார்கள். அவுத்துவிட்ட வெள்ளாடுபோல் விசாகப்பெருமாளையர்

யாப்பிலக்கணத்திலிருந்து குணங்குடி மஸ்தான் பாடல்கள் வரை மேய்ந்துகொண்டிருந்தேன்.

நான் போய் நின்றதும் நூலகர் நமட்டுச் சிரிப்பில் உதவியாளரிடம் சொல்லுவார், இவருக்கு 'வழிவிடு சும்மா கிடக்கும் புஸ்தகங்களை தூசிதட்டித் துடைத்துவிடுவார் என்று. அந்தக் கதைதான் நடந்தது. முதலில் சீர் தளை எதுகை மோனை என்று யாப்புக் கிறுக்குதான் என்னைத் தொற்றிக்கொண்டது. அதுகளைக் கோர்த்து குண்டக்க மண்டக்க கவிதைகள் எழுதினேன். வெண்பா, விருத்தம், கலிப்பா, ஆசிரியப்பா... அடேயப்பா புகழேந்தியும் காளமேகமும் தோற்றார்கள். அப்படியொரு கவிதை 'தீபம்' பத்திரிகையில் தப்பித்தவறி வெளிவந்துவிட்டது. சந்தோசத்துக்குச் சொல்லணுமா. நாலுபேர் கவிஞரே என்று கூப்பிடும்போது மண்டை கிறுகிறுத்தது.

நல்லவேளைக்கு சி.கனகசபாபதி தட்டுப்பட்டார். சி.சு.செல்லப்பா, 'எழுத்து', ந. பிச்சர்த்தி, தி.க.சிவசங்கரன், 'தாமரை' இப்படி புதுசான சமாச்சாரங்களை அவர் சொன்னார். ஒருநாள் கி.ராஜநாராயணனைப்பற்றி பெரிசாகப் பேசிக்கொண்டிருந்தார். வேதச்சாமியார் தோரணையில் அவரது பிரசங்கம் என்னை என்னமோ பண்ணியது. அதுக்குப்பிறகு வால்ட் விட்மன், எலியட்டைக் கடந்து வந்து யார் இந்த ராஜநாராயணன் என்று யோசிக்கத் தோணியது.

'தீபம்' பத்திரிகையில் அவர் கதைகளைப் படித்தேன். அடடா இது நம்ம காட்டு ஆசாமியாக இருக்கிறாரே. நாம் ஓடித்திரிந்து புரண்ட கரிசல்காட்டையல்லவா பேனாவால் வரைந்துகொண்டிருக்கிறார். கருவமரங்கள், பருத்திக்காடு, மனுசர்கள் எல்லாரும் ரெம்பப் பரிச்சயப்பட்டவர்களாயிற்றே. நமக்கு நெருக்கமான நிஜங்களை நெஞ்சில் தைக்கும்படி சொல்லுகிறாரே. நினைவு அவரைச் சுற்றியே மறுகியது. இச்சிக்கொப்பை உலுக்கியதுபோல் இந்த மனுசன் என்னைக் கொஞ்சநேரத்தில் உலுக்கிவிட்டார். அந்த உலுக்கலில் என்னைத் தொற்றிக்கொண்டிருந்த கம்பதாசனும் வாணிதாசனும் அகிலனும் மணிவண்ணனும் அவர்களுக்குக் கூட்டாளிகளும் பொலுபொலுவென்று உதிர்ந்து மனசு புடைத்தெடுத்ததுபோல் லேசாக இருந்தது. நிலாவிலும் மேகத்திலும் ஊஞ்சல் கட்டி சொகமாக ஆடிக் கொண்டிருந்தவனை மூக்கணங்கயிறு போட்டு இழுத்துவந்து சுடுகரிசலில் நிறுத்தி வைத்தற்காக அவருக்கு மனசார நன்றி சொல்லிக் கொண்டேன்.

அடுத்து முதல் காரியமாக என்னைக் கசக்கிப் பிழிந்து காயப்போட்டேன். சுற்று முற்றும் கவனமாகப் பார்க்கிற அளவுக்கு பார்வை 'சுருங்கி' விட்டது. அதுக்குப்பிறகு யார் இந்த ராஜநாராயணன் என்ற கேள்வி எழவில்லை. அவருடன் இனம் புரியாத அன்னியோன்னியம் ஏற்பட்டுவிட்டது.

வேலை கிடைக்காத மன அவஸ்தைக் காலத்தில் அவர் ரெம்பத் துணையாக இருந்தார். அடிக்கடி அவர் கதைகளைப் படிப்பதில் தெம்பு. மன உளைச்சலுக்கிடையிலும் அவரது 'சினேகம்'போல் 'மனிதம்'போல் 'கனா'போல் சிந்தனைகளைப் பிடித்து வசக்கி வசப்படுத்தும் சமாச்சாரங்கள் நமக்கும் பிடிபடணும் என்று ஆவல் குளிராட்டும்.

அது விதைப்பு நேரம். மேகங்கள் மறுக்கி ஓடி மழையையும் வெயிலையும் விதைக்கும் காலம். காடிகளில் மாடுகள் வழக்கத்துக்கு மாறாக ஆவலுடன் நாத்துக்கூளம் தின்றுகொண்டிருந்தன. நான் உடனே ராஜாநாராயணனுக்கு எழுதினேன் இத்தனை நாளாக சோளத்தட்டையைக் கடித்துக்கொண்டு கிடந்த மாட்டுக்கு நாத்துக்கூளம் கிடைத்தமாதிரி உங்கள் கதைகள் எனக்குக் கிடைத்தன என்று. அவரிடமிருந்து சட்டென்று பதில் வந்தது. ஒருத்தன் பெரிசாக எழுதித்தான் எழுத்தாளனாகவேண்டும் என்பதில்லை இப்படி விஷயங்களை சொகமாக வெளியிடத் தெரிந்தாலே அவன் எழுத்தாளன்தான் என்று உற்சாகப்படுத்தியிருந்தார். அன்றுமுதல் என்னை மானசீகமாக சிறுகதை எழுத்தாளனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டேன்.

அதுவரை 'எழுத்து'வில் வெளிவந்துகொண்டிருந்த என் கவிதைகள் எனக்குள் தங்கியிருந்த, வெளிச்சொல்லவேண்டிய சங்கதிகளின் பாரத்தைக் குறைக்கவில்லை. கவிதைகளால் குறைக்க முடியுமென்றும் தோணவில்லை. வெள்ளைச் சுளையெல்லாம் பறி போக 'ஓடுகாலி'யாகிப்போன பருத்திச்சுளையை வீர.வேலுச்சாமி கவிதையில் தந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்த உணர்வுகள் மெல்ல அமுங்கி கதை வடிவங்களுக்குத் திரும்பின. சிறு கதைகளைப் பற்றி அதிகம் சிந்திக்கத் தொடங்கினேன்.

என் வாழ்நிலைச் சூழலில், நான் எதிர்கொள்ளும் பிரச்சனைத் தாக்கத்தின் பின்புலத்தில் கதைகளை மனசில் தீவிரமாக எழுதிப்பார்த்தேன். வாழ்க்கை இயல்புகளை, மனுச உணர்வுகளை இட்டுக்கட்டாமல் எதார்த்தமாக வெளியிடும் சாமர்த்தியமும்

கச்சிதமும் ராஜநாராயணனுக்குக் கைவந்திருப்பதைப்போல் எனக்குச் சாத்தியப்படாது என்ற பயமும் அதிகரித்தது. பிரச்சனைகளின்· உக்கிரங்களுக்கிடையில் அழுகை, கோவம், ஆத்திரம் அத்தனைக்கும் இடையில் ஜீவனுடன் தளிர்த்திருக்கும் மென்மையான இடக்கும் சந்தோசமும் நம்பிக்கையும் அவர் கதைகளில் சகஜப்பட்டிருப்பதை நினைத்தால் இன்னும் பயம். உடைமைகளை முன்னிட்டு மனுசன் அசிங்கமாகி உறவுகளை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் கேவலப் பிழைப்பிலும் சாதிய வேலிகளை மீறிக் கிளைக்கும் உறவுகளை அவர் பின்னியிருக்கும் விதம் எனக்குள் உடுக்கடித்தது. கதையைக் கேட்கிறது, பார்க்கிறது, படிக்கிறது இத்தனையும் அவர்கதைகளில் ஒரே சமயத்தில் நடக்கிறதே. அது சுட்டுப் போட்டாலும் நமக்கு வராது. சே இது பேறுகால வேதனை தானோ. பெரிய தொறட்டாகப் போயிற்று. ஆனாலும் கதை எழுதியாகணும். கோடைத் தாகத்தைத் தணித்தாகணும். சும்மா இருக்க முடியாது.

சரி வந்தது வரட்டும். ஒரு கை பார்த்துவிடவேண்டியதுதான். அவர் மட்டும் என்ன கொம்பா. கஷ்டப்படாமலா எழுதியிருப்பார். தார்ப்பாய்ச்சிக்கொண்டேன். இந்த நேரம் பார்த்து தோதுக்கு தி.க.சிவசங்கரனின் தொடர்பு கிடைத்தது. 'தாமரை' யில் கதை எழுதத் தொடங்கினேன். எனக்கிருந்த பிரியங்களையெல்லாம் கொட்டி தொடர்ந்து எழுதினேன். கதை வெளிவருவதற்குமுன் தி.க.சி.யிடமிருந்தும் வெளியானவுடன் ராஜநாராயணனிடமிருந்தும் கடிதங்கள் வரும். வெகுவாகப் பாராட்டியிருப்பார்கள்.

இதுக்கிடையில் 'தாமரை' கரிசல் மலர் வந்தது. ராஜநாராயணன் தயாரித்தார். அதுக்கு என்னிடம் கதை கேட்டார். உடனே எழுதிக் கொடுத்தேன். அதை பிரேம்சந்தின் கதையுடன் ஒப்பிட்டுக் கடிதம் எழுதினார். அவ்வளவுக்கு அது தகுதியானதுதானா என்பது வேறு விஷயம். ஆனால் எழுதுகிறவன்மேல் அவருக்கிருக்கும் அக்கறையும் மனந்திறந்து பாராட்டும் பண்பும் இருக்கிறதே அதைச் சொல்லணும். இந்த வாந்தக்கம் ஒருத்தருக்கொருத்தர் பிடித்துப் போனதால் ஏற்பட்டதில்லை. இதுக்கு ஒரு பொது அக்கறை வேணும். வாழ்கிற மண்மீது பிடிப்பு இருக்கணும். அந்த அடிப்படை இருந்தால் மனசு விரியும்.

இவ்வளவுக்கும் அவரை நேரில் சந்தித்ததில்லை. சந்திக்கிற கூச்சம் மறைந்து படிப்படியாக ஆர்வமானது. அவர் படத்திலிருந்து என்னுள் பதித்துக்கொண்ட திரண்ட கண்களும் பனையோலை வகிடும் கம்மங்கருது மூக்கும் அவரைச் சந்திக்கத் தூண்டின. யார்

முந்துகிறோமோ என்று கடிதம் எழுதினார். அவர்தான் ஜெயித்தார். திடீரென்று ஒருநாள் அலுவலகத்துக்கு வந்து 'அம்புட்டுக்கிட்டயா' என்பதுபோல் ஒரு முழி முழித்தாரே பார்க்கலாம். எனக்கென்றால் வெட்கம் பிடுங்கித்தின்றது. 'அதப்பத்தி ஒண்ணுமில்ல' என்ற தோரணையில் நெகிழ்வாகச் சிரித்து கண்ணை உருட்டி புருவத்தை உயர்த்தினார். உறுத்தலில்லாத ஒரு இயல்பைப் பரப்பி நெருக்கமாக இருந்தார். அவகாசத்தில் மென்மையாக வார்த்தைகளை அனுப்பி விளைவை எதிர்பார்க்கும் தன்மை எனக்கு ரெம்பப் பிடித்துப் போயிற்று. நெற்றிச் சுருக்கத்தில் உழவுச்சால்கள். அவற்றுக்குள் நிறையத் தேடிக்கொண்டிருந்தேன். இவரால் கதைகளை துல்லியமாகவே செதுக்கமுடியுமென்ற நம்பிக்கை வலுப்பட்டது.

அப்புறம் அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில், என்வீட்டில் சாப்பாட்டின் போது கீரைக்கு உப்பு குறைவாக இருப்பதைச் சொல்கையில், தயிர்ச்சாதத்துக்கும் ஊறுகாய்க்கும் பொருத்தத்தைக் கூறுகையில், என் பெண்ணுக்குப் பெயர் வைக்கையில், அலுவலகத்தில் மின் விசிறிக்குக் கீழே சட்டையைக் கழற்றி வேர்வையை உலர்த்துகையில் வாழ்க்கையைப்பற்றி அவர் எனக்கு உணர்த்தியது கொஞ்சநஞ்சமல்ல.

கரிசல் விவகாரங்களை உழுதுபார்க்க அவரிடமிருந்து கற்றுக்கொண்டதும் கற்றுக்கொள்ள வேண்டியதும் ஏராளம். சீரழிந்த சமூகச் சூழல்களிலிருந்து வாழ்க்கையின் உயிர்ப்பான அம்சங்களை வெளிக்கொணர்ந்தவர் அவர். அதே சமயம் பல்குத்தி முகந்து பார்க்கும் அதிகாரியைச் சாட்சியாக்கி அரசு எந்திர அசிங்கத்தின்மீது அருவருப்பைத் தோற்றுவித்தவர்.

சொந்த முகமற்ற இரவல் கோலத்தில் அன்னியமாக உலவிய தமிழ் இலக்கியச் சூழலில் மண்மணத்துடன் வாழ்வியல்புகளை வெளிப்படுத்தி இரவலற்ற சுயத் தன்மைகள் முளைவிட வழிவகுத்தார். மொழிப்பிரயோகத்தின் அர்த்தத்தை உன்னதப்படுத்தி நிஜவாழ்க்கையையும் இலக்கியத்தையும் மொழியால் பிணைத்து இடைவெளியைக் குறுக்கினார். கலைப் படைப்பில் மொழியும் படைக்கப்படவேண்டிய அவசியத்தை உணர்த்தினார். தமிழ் இலக்கியத்தில் பல ஜாம்பவான்களுக்குப் பிடிபடாமல் போன இந்த விஷயம் இந்த நோஞ்சானுக்கு மட்டும் பஞ்சாரத்துக்குள் அகப்பட்ட கோழிக்குஞ்சுபோல் பிடிபட்டுப் போனது. இது தமிழ் இலக்கியத்துக்குக் கிடைத்த பெரிய லாபம்.

அறிவு வீக்கத்தால் பீடிக்கப்படாதவை அவரது கதைகள். அதனால்தான் அறிவு நிலை அமுங்கி உணர்வுடன் குழைத்து கோலமாகப் பின்னிய படைப்பழகை அவற்றில் காணமுடிகிறது. இது எத்தனை பேருக்குச் சாத்தியப்பட்டிருக்கிறது.

அவரிடமுள்ள விசேசமான குணம் எல்லாரையும் தட்டிக்கொடுத்து வளர்ப்பது. சிறு அம்சம்கூட நன்றாக இருந்தால் மனசாரப் பாராட்டுவார். முட்டுக்குச்சிலுக்குள் குழந்தையை முடக்கிவிட்டால் எப்படியென்று சரியான காரணம் வைத்திருப்பார். அவர் பாராட்டும் போதெல்லாம் ஒரு விவசாயி ஊறத்தாழியில் பருத்திவிதை பிண்ணாக்குக் கரைசலைக் கலக்கிவிட்டு காளையைத் தட்டிக்கொடுத்துத் தண்ணீர்காட்டும் காட்சி மனசில் விரியும்.

அவருக்கு உடல் உபாதைகள் ஒரு பொருட்டே அல்ல. அதுபாட்டுக்கு ஒருபுறம் இருந்தால் அவர்பாட்டுக்குக் காரியங்களைச் செய்துகொண்டிருப்பார். உபாதைகளைத் துச்சமாக்கி மனச் சோர்வற்றிருக்கும் அவரது இயக்கம் மலைப்பைத் தருகிறது.

சமூக உறவுகளின் தேய்வுக்குக் காரணம் தேடும் கேள்வி மனசுக்குள் பிணையலடிக்கும் விளைவில் இன்று நானும் என்னைப் போன்றவர்களும் அவரிலிருந்து சற்று விலகிச் சென்று அவரையடுத்த பரிமாணத்தில் எட்டுவைக்கப் பிரயாசைப்படலாம். மாறுபட்ட அனுபவங்களை, கோணங்களைத் தொட்டுப்பார்க்க எத்தனிக்கலாம். பிரச்சனைகளின் காரணகாரியங்களைத் தேட முயற்சிக்கலாம். முரண்பாடுகளின் கூர்மையில் நின்று தீர்வுகளை முன்வைக்கலாம். ஆனால் எல்லாமே ஒரு ராஜநாராயணனிலிருந்து கிளைத்தவை என்பதுதான் உண்மை. பலரையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த ஆதர்சம் அவர். அந்த மலைப்பரும்பில் நின்றுகொண்டுதான் சில தூரங்களை எட்டிப்பார்க்க முடிந்திருக்கிறது.

அந்த ராஜநாராயணனுக்கு அறுபது வயசாகிறது. அவருக்கு அது பெரிசில்லை. வழக்கம்போல் உரலடிக் கோழியாக ஓயாமல் கிண்டிக்கொண்டிருப்பார். வண்டிப் பைதாவின் ஆரக்கால்களுக்குக் குடமாக எப்போதும் தமது ஆதர்ச யோக்கியத்தைத் தக்கவைத்துக் கொண்டிருப்பார்.

# தோப்பு

அது ரெம்பத் தாட்டிக்கமான கொக்கு. சுபாவத்தை மீறிய தாட்டிக்கம். பெரிய சிறகு. காதுக்குமேல் பின்வாக்கில் கோதிவிட்ட தூவிகள். விளார் வீசிய புருவம். கால் திரட்சி. ஏக வெள்ளையாக அது நடக்கும் தோரணையே தனி.

ஊருணி, கிடங்கு, கண்மாய், வாய்க்கால், ஏரி, கால்வாய், ஆறு, அணைக்கட்டு என்று மீன்துள்ளும் சகல நிர்நிலைகளிலும் அதைப் பார்க்கலாம். மற்ற கொக்குகளைப்போல் எஞ்செவனே என்று ஒற்றைக்காலில் வயணம் காக்காமல் ஓடியாடி இரைதேடும். தேடிவந்து குஞ்சுகளுக்குக் கொடுக்கும்.

கழுகு காக்காய் எந்தப் பட்சியானாலும் அது பயப்படுவதில்லை. சிறகுக்குச் சிறகு அலகுக்கு அலகு என்று சரிசண்டை போடும். தலையை ஒரு சிலுப்புச் சிலுப்பி கரகரப்பான குரலில் கதையை எடுத்துவிட்டால் எதுவும் கிட்ட அண்டமுடியாது.

வேடிக்கைபார்த்த பட்சிகள் ஆச்சரியத்தில் முணுமுணுத்துக் கொண்டு போகும்.

''சொந்தக் காரியத்துக்குத்தான் தொண்டத்தண்ணி வத்தக் கத்துதாக்கும்னு நெனச்சென். காசுபெறாத சங்கதிக்குப் போயி மாங்கு மாங்குனு மல்லுக்கெட்றதப்பாரு. கூத்துத்தான்.''

''தட்டிக் கேக்கிறதுக்கு இப்படியும் ரெண்டு வேணுமில்ல.''

''இருந்தாலும் இதுக்கு இம்புட்டுத் தோரிணி ஆகாது. நாலு மீன விழுங்குனமா கூடுவந்து அடஞ்சமான்னு இருக்கிறத வுட்டுட்டு...''

சிறுபிராயத்திலிருந்து அதுக்கு மல்லுக்கட்டியே பழக்கம். வயசு ஆக ஆக அதன் வீரியம் கூடியது. வேடிக்கை என்னவென்றால் அப்போதுதான் அதுக்குச் சேக்காளிகள் அதிகமாயின.

ரெம்ப காலம் நாடகத் தோப்பில் தங்கியிருந்தது. அங்கே நிறையப் பட்சிகளுடன் பழக்கம் ஏற்பட்டது. உடம்பைக் கிண்டிக்கொண்டு பாடு பழமை பேசும் வாத்துக்கள். பறக்கும் போதே பாடும் பஞ்சவர்ணக் கிளிகள். அங்குமிங்கும் தோரணையாக லாந்தும் நாரைகள். இப்படி பலரகம்.

அங்கே அதன் மனசுக்குப் பசியடங்கவில்லை. சினிமாத் தோப்புக்கு வந்து கொஞ்சநாள் இருந்தது. ஆனாலும் பழைய தோப்பை மறக்கவில்லை. அவ்வப்போது அந்தப்பக்கம் போய்வரும்.

புதுத்தோப்பு வித்தியாசமாக இருந்தது. பட்சிகளின் உண்மையான குரலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ராத்திரி முழுக்க அதைச் சுற்றிக் கும்மாளமிட்டவற்றை விடிந்ததும் காணவில்லை. நல்ல துணையில்லாமல் அதுக்குள் ஒரு தவிப்பு.

எதையாவது உருப்படியாகச் செய்யணும் என்ற வெறி அதைப் பாடாய்ப் படுத்தியது. இலக்கியக் காட்டுப்பக்கம் வந்து சுற்றிப் பார்த்தது. ஒரு இடம் மழை தண்ணீரில்லாமல் பொட்டலாகக் கிடந்தது. அதுக்கென்றால் வருத்தமான வருத்தம். அங்கே ஒரு தோப்பு கண்டிப்பாகத் தேவையென்று பட்டது.

நல்ல தரையாகப் பார்த்து கிணறு தோண்டியது. கொஞ் ஆழத்திலேயே ஊற்றுக்கண் திறந்து நீர் பெருகி கிணற்றை மேதிப் புரண்டது. அதைத் தேக்கி வைக்க ஒரு குளம் வெட்டியது. குளத்தைச் சுற்றி புதுசாக ஒரு பத்திரிகைத் தோப்பு உண்டுபண்ணியது. தண்ணீர்ப்பஞ்சம் இல்லாததால் அதை வளர்ப்பதில் கஷ்டமிருக்க வில்லை.

தோப்பில் விதவிதமான செடியென்ன கொடியென்ன. மரவகையில் கருவலை முதல் தேக்கு தோதகத்திவரை எல்லாம் இருந்தது. இன்னதுதான் என்றில்லாமல் பலவிதமான பட்சிகள் அங்கே வந்து குடியிருக்க ஆரம்பித்தன. கடைவிரித்துப் படங்காட்டுவதற்காக தோகைக் கொத்தைச் சுமந்து திரியும் மயில்கள் ஒருபக்கம். இன்னொரு பக்கம் குடுமிவாலை வானத்துக்கும் பூமிக்கும் ஆட்டி அலட்டும் சித்துள்ளான்கள். கோலிக்கண்களை உருட்டி மிரட்டும் ஆந்தைகள். தலைகீழாகத் தொங்கும் வௌவால்கள். சிமிட்டிக் குதிக்கும் குருவிகள். ஒண்ணரைக்கண்

பார்வையில் உலகத்தை அளக்கும் காக்காய்கள். நாடுதாண்டிப்போய் எதையாவது விழுங்கிவிட்டு வந்து செமிக்காமல் நடக்கத் தள்ளாடும் கூழைக்கிடாக்கள். சீட்டியடிப்பதையே தொழிலாகக் கொண்ட நாணவந்தான். தோப்பில் கலகலப்புக்குக் கேட்கணுமா. சண்டை சச்சரவு சந்தோசம் எல்லாவற்றிலும் அந்தக் கொக்கும் கலந்துகொண்டது. உக்கிரமான சமயங்களில் அதன் கத்தல் ஓங்கிக் கேட்கும்.

கொக்கு தோப்பைப் பசுமையாக வைத்துக் கொள்வதற்கு அரும்பாடு பட்டது. மூணுதோப்புப் பட்சிகளையும் கூட்டிவந்து விவகாரங்களைப் பேச வைத்தது. வயசானதென்று எதையும் ஒதுக்குவதில்லை. நல்ல சமாச்சாரங்கள் எந்தப் பட்சியிடம் இருந்தாலும் அதைத் தேடிப்பிடித்து வந்து தோப்பில் இடங் கொடுக்கும்.

இப்படித்தான் அதுக்கும் ஒரு கானாங்கோழிக்கும் பழக்கம் ஏற்பட்டது. கோழி தான் உண்டு தன் வேலையுண்டு என்று அமைதியாக இருக்கும். எப்படியோ ரெண்டுக்கும் பிடித்துப் போயிற்று. ஒண்ணையொண்ணு மதித்துப் பழகியதால் பல சமாச்சாரங்களில் அதுகளுக்கிடையில் ஒரு அன்னியோன்னியம் வளர்ந்தது. கொக்கு கோழிக்கும் தோப்பில் இடங்கொடுத்தது.

ரெண்டும் அடிக்கடி சந்திப்பதில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசிக்கொள்வதுண்டு. சிலசமயம் அதனதன் இடத்தில் இருந்தபடியே குரலால் விசாரித்துக்கொள்ளும்.

ஒருநாள் வருத்தமான சேதி வந்தது. கொக்குக்குத் தீராத நோய் வந்து பறக்கமுடியாமல் படுத்துக் கிடப்பதாக ஒரு மைனா சொன்னது. கோழிக்கு வேதனை சொல்லமுடியாது. கொக்கு படுத்திருக்கும் கோலத்தை மனசுக்குள் போட்டுப்பார்த்து வெதும்பியது. பழைய தோரணை ஆழப் பதிந்திருந்ததால் படுத்துக்கிடப்பதைப் பார்க்க விரும்பவில்லை.

கொக்குக்குத் தெரியும் கூடிய விரைவில் தன்கதை முடிந்து விடுமென்று. ஆனால் அதன் பேச்சில் அந்தக் கவலை கொஞ்சங்கூட இருப்பதாகத் தெரியவில்லை. வழக்கமாக திடமான குரலில் பேசியது. அதன் கவலையெல்லாம் தோப்பைப்பற்றித்தான். படுத்துக்கொண்டே அது தோப்பைக் கவனித்த விதத்தை நினைத்தால் மலைப்பாக இருந்தது.

அன்று விடியக்காலம் வேப்பமரத்திலிருந்து கரிக்குருவி கூவியது.

''கொக்கு செத்துப்போச்சு. கொக்கு செத்துப்போச்சு.''

கோழிக்கு சிறகினால் மார்பிலடித்து அழுகணும் போலிருந்தது. கொக்கின் வைராக்கியம் நினைவுக்கு வரவே சிரமப்பட்டு அடக்கிக் கொண்டது. தெம்பாகவே போய்ப் பார்க்கணுமென்று முடிவுசெய்து கிளம்பியது.

கொக்கின் கூட்டுக்கு முன்னால் ரெம்பப் பட்சிகள் கூடியிருந்தன. மூணு தோப்பிலிருந்தும் வந்திருந்தன. ஒரு முகத்தில் கூட களையில்லை. பழைய கலகலப்பில்லை. துக்கத்தில் முணுமுணுத்துக் கொண்டன. ஒரு மாடப்புறாவின் கனத்த முனக்கம் நெஞ்சை அறுத்தது. சித்துள்ளானுக்கு வால் இருந்த இடம் தெரியவில்லை.

கொக்குக்குஞ்சு நோஞ்ச குரலில் என்னென்னமோ சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து மற்றப் பட்சிகள் கண்களைத் துடைத்துக்கொண்டன. கோழிமட்டும் இன்னும் இறுக்கமாக இருந்தது. எங்கே நமர்ந்துவிடுவோமோ என்று அதுக்குள் ஒரு பயம். மற்ற பட்சிகளுடன் பேசி அதை மறைக்க முயன்றது.

வெள்ளை போர்த்தி கொக்கு அமைதியாக கால்நீட்டிப் படுத்திருந்தது. வாடிக் கவுந்துவிட்ட புருவ விளார்கள். துவண்டு போன காதோரத் தூவிகள். அந்த வயணத்திலும் அதன் கம்பீரம் குறையவில்லை. அதைத் தூக்கிக்கொண்டு போகும்போது கொக்குக் குஞ்சின் கூப்பாடு விட்டு விட்டுக் கேட்டது.

கொக்கின் பயணம் பக்கத்திலுள்ள தோப்பில் முடிந்தது. மரங்களும் செடிகளும் அடர்ந்த அந்தத் தோப்பு வெயிலுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. கூடவந்த பட்சிகள் அங்கங்கே நிழலில் உட்கார்ந்தன.

கொக்கை எரிக்கும்போதுகூட கோழி திடமாக இருந்தது. கடைசிவரை சாவைத் துச்சமாக மதித்த கொக்கின் வைராக்கியம் அதுக்குள் மேலோங்கியிருந்தது.

எல்லாக் காரியங்களும் முடிந்து திரும்பும்போது ஒரு பனங்காடை வருத்தமாகச் சொன்னது.

''இது வளத்த தோப்ப எரிச்சு அழிக்கப் போறாகளாம்.''

கூட வந்த கொண்டைக்குருவி உச்கொட்டியது.

''அடடா எப்பேர்ப்பட்ட தோப்பு. இனிமே நம்ம எங்க போயி அடையிறது.''

கோழியின் நெஞ்சை ஒருவிதச் சோகம் கவ்வியது. நின்று ஒருமுறை திரும்பிப்பார்த்தது. கொக்கு அமைதியாக எரிந்து கொண்டிருந்தது. நெருப்பிலிருந்து கிளம்பிய புகை மரங்களைத் தாண்டி வானவெளியில் மிதக்கத் தொடங்கியிருந்தது. அதுக்கு முன்னால் கால் நீட்டி கழுத்து நீட்டி வெள்ளைச் சிறகசைத்து கொக்கு எங்கோ பறந்துபோகிறது. இரைக்காக நீர்நிலை தேடிப் போகும். இல்லை பொதுக்காரியத்துக்காக சண்டையிடப் போகும்.

கோழிக்கு தெம்பும் வைராக்கியமும் உருகி கண்களில் குளங்கட்டின. உள்பட்டையால் நீரை உதிர்த்துக்கொண்டே அது தோப்பைவிட்டு வெளியேறியது.

(கோமல் நினைவாக)

# நோவு

பொழுது சாயும் நேரம். மழைக்கோப்புக் கருப்பில் வெளிச்சம் மண்டி கலங்கியிருந்தது. கருக்கூடும் குஞ்சுமேகங்களைப் பார்த்தபடி அவன் வீட்டின் வெளித் திருணையில் துண்டுவிரித்துப் படுத்திருந்தான். மண்ணில் மழையின் ஈரம் கோர்த்ததும் நடக்கப் போகும் மாயங்கள் மனசில் புல்லரித்தன.

தொட்டுப்பிடித்து விளையாடும் மேகங்களில் பதித்திருந்த அவனது லயிப்பை ஒரு குரல் கலைத்தது.

''உப்பு... உப்பு...''

ரெட்டைமாட்டு வண்டியில் ஒருவர் கூவிக்கூவி உப்பு விற்றுக் கொண்டு போனார்.

யாரது. எங்கேயோ கேட்ட குரல்மாதிரி இருக்கிறதே. அவன் அவசரமாக எழுந்தான்.

''அய்யா கொஞ்சம் வண்டிய நிறுத்துங்க.''

மாடுகளின் கழுத்துமணி முணுமுணுத்து ஓய்ந்தது. அவன் கிட்டத்தில் போனான்.

''நீங்க...''

''நான் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்.''

''யாரு சிறுபாணாற்றுப்படை எழுதிய நத்தத்தனாரா.''

''அவரேதான்.''

''கொஞ்சம் இருங்க இந்தா வந்துறென்.''

அவன் வீட்டுக்குள் ஓடி நார்ப்பெட்டியில் மூணுபடி சோளம் கொண்டுவந்து நீட்டினான். அவர் அதுக்குத் தக்கபடி நாழி சிரிக்கச் சிரிக்க உப்பு அளந்துபோட்டார். அவன் பெட்டியைத் தோளில் சுமந்தபடி ஏறிட்டான்.

''ரெம்பநாளா ஒங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்னுருந்தென்.''

''என்னது.''

''ஒரு புல்லுப் பூண்டுகூட கண்ணுக்குள்ள நிக்கிறமாதிரி அழகழகா எழுதிக் கோர்த்திருக்கீகளே அந்த அறிவே அறிவு.''

அவரது பார்வை உப்புக்கரித்தது.

''அறிவா... அது எங்க விக்கிது.''

வண்டி புறப்பட்டுவிட்டது. அவன் அசந்துபோய் கொஞ்சநேரம் அவரையே பார்த்துவிட்டு மறுபடியும் திருணைக்குவந்து உட்கார்ந்தான். அவரது பசுமையான வரிகள் நினைவில் முளைத்தன.

''பைந்நனை அவரை பவழங் கோப்பவும்

கருநனைக் காயாக் கணமயில் அவிழவும்

கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்

செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூம்பவும்...''

அவன் மாய்ந்து மாய்ந்து சொல்லிக்கொண்டான்.

''அறிவில்லாம இப்படி எழுதமுடியுமா. இவரென்னடான்னா இந்தமாதிரி கேட்டுட்டுப் போறாரே.''

நத்தத்தனாரின் கூவல் ''தப்பு... தப்பு...'' என்று விட்டுவிட்டுக் கேட்டது. மாட்டுமணி ''ஆமா... ஆமா...'' என்று ஆமோதித்தது.

மழைபெய்து அவரது பிழைப்பைக் கெடுத்துவிடக்கூடாதே என்று அவனுக்கு வருத்தம். அடிவானத்தை வெறித்துப் பார்த்தான். செம்பட்டைமுடி மின்னலும் நாய் உறுமலுமாக ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

வடக்கே ஒற்றையடிப் பாதையில் ஒரு பெண் தலையில் கலயத்துடன் நடந்து வருவது தெரிந்தது. அவன் கூர்ந்து கவனித்தான். அடடா ஆண்டாள் நாச்சியார் எப்படி இங்கே. அதுவும் இந்த நேரத்தில்.

*அவன் ஆச்சரியத்திலிருந்து விடுபடுவதற்குள் அந்த அம்மா கிட்டத்தில் வந்துவிட்டது.*

*''என்னம்மா இது நீங்கெல்லாம் உறிக்கலயத்தச் சொமந்துக்கிட்டு. ஆனானப்பட்ட 'பெரியாழ்வார் பொண்ணு வெறுங்காலோட நடந்து வந்துருக்கீகளே. மழவேற இருட்டுது.''*

*ஆண்டாளின் முகத்தில் குறுஞ்சிரிப்பு.*

*''கண்ணன் கரிசக்காட்டுப்பக்கம் மாடுமேச்சிட்டுத் திரியிறதாச் சொன்னாங்க. அவனுக்கு வெண்ண குடுத்துட்டுப் போகலாம்னு வந்தென்.''*

*''அப்படியா சங்கதி. என் கண்ணுக்குத் தட்டுப்படலயே. அனயமா கீழக்கம்மாய்க்குள்ளதான் மேய்க்கணும்.''*

*''போயி தேடிப் பாக்கிறென்.''*

*அவன் மனசுக்குள் ஒரு கேள்வி குறுகுறுத்தது. தயங்கித் தயங்கிக் கேட்டான்.*

*''அம்மா ஒரு வெசயம் கேக்கப் போறென். கோவிச்சுக்கிற மாட்டீகளே.''*

*''சும்மா கேளுங்க.''*

*''ஆழ்வார் குடும்பத்துப் பொண்ணா இருந்துக்கிட்டு ஆயர் குடும்பப் பொண்ணுக விடியக்காலம் தயிர் கடையிறதப் பத்தி அனுபவிச்சு எழுதியிருக்கீகளே அது எப்படிம்மா.''*

*ஆண்டாளின் மனசுக்குள் நினைவுகள் திரளத்திரள வரிகள் வெண்ணெயாகத் திரண்டன. சொகமாகப் பாடியது.*

''கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்.''

*அவன் தன்னை மறந்து கேட்டுக்கொண்டிருந்தான். ஆண்டாள் அவனை ஒரு கேள்வியால் உசுப்பியது.*

''ஏன் நான் மத்தவங்களப்பத்தி எழுதக்கூடாதா.''

''எழுதலாம். இருந்தாலும்...''

''நான் ஆழ்வார் குடும்பத்துப் பொண்ணு மட்டுந்தான்னு யாரு சொன்னது.''

ஆண்டாள் அதுக்குமேல் நிற்கவில்லை. கீழக் கண்மாயை நோக்கி நடக்க ஆரம்பித்தது.

அவனுக்கு தலையில் உறிக்கலயத்தைப் போட்டு உடைத்தமாதிரி இருந்தது. அதிர்ச்சியில் கட்டையாக விறைத்துவிட்டான்.

''என்ன வோய் மூச்சுப் பேச்சில்லாம முண்டமா உக்காந்துருக்கறீர்.''

அவனது பிடரியைத் தட்டி எழுப்பிய கையால் தன் மீசையைக் கோதியபடி திருணையில் உட்கார்ந்தார் பாரதி. அவருடன் சிணுக்கு நடையில் வந்த கழுதைக்குட்டியைத் தூக்கி மடியில் கிடத்தி செல்லமாகத் தடவிக்கொடுக்க ஆரம்பித்தார். அவன் அவரை நோக்கி அகலமாக முழித்தான்.

''அய்யா நீங்களா. கழுதக்குட்டி ரெம்ப லச்சணமாருக்கே. எங்க தேடிப் புடிச்சீக.''

''காட்லயா வேட்டையாடிப் புடிச்சிட்டு வருவாங்க. நானும் கட்டய மணியக்காரரும் வெள்ளாவியோரம் ஒளிஞ்சிருந்து புடிச்சதாக்கும்.''

''சிறு பெராயத்துலருக்கிற அழகு பெரிசா ஆகஆக கெட்டுப் போகுது.''

''மனுஷாளுக்கு மட்டும் என்ன வாழுது. அழகும் அசிங்கமும் அவரவர் மனசப் பொறுத்தது.''

''எனக்கொரு சந்தேகம். ஒங்க வசன கவித ஒண்ணுல வெயிலப்போல அழகான பதார்த்தம் வேற இல்லன்னு ஒரு பசுமாடு சொல்லுது.''

''ஆமா அதோட அனுபவம் அப்படி.''

''பதார்த்தம்னா தின்பண்டம். அது ருசியாத்தான இருக்கும்.''

''சொல்லும்.''

''வெயிலப் போயி தின்பண்டம்னு சொன்னா அதுலயும் அழகானதுன்னா அர்த்தம் ஒண்ணுக்கொண்ணு ஒதைக்குதே.''

''ஓய் நீர் உருப்படமாட்டீர். ஒமக்கு மண்ட வீங்கிப்போச்சு. மனசாக்கும் வீங்கணும். ஏதேது தேன்வந்து பாயுது காதினிலேன்னு பாடுனா காதுக்குள்ள கட்டெறும்பப் புடிச்சு விட்டாலும் விடுவீர்.''

அவர் கம்பீரமாகப் பாடிக்கொண்டே போனார்.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.''

அவருக்குப் பின்னால் ஓடிய கழுதைக்குட்டியின் வால்வீச்சு தொடர்ந்து அவன் மூஞ்சியில் அறைந்தது.

மேகங்கள் சூல்முற்றி மேதாளத்துடன் மழை இறங்கியது. அவன் திருணையிலிருந்து வாசலுக்கு வந்தான்.

ஒரு பாட்டம் நல்ல மழை பெய்து ஓய்ந்தது. ஊருணியிலும் மந்தைக் கிடங்குகளிலும் பாதியாவது நீர் நிரம்பியிருக்கும்.

மழை வெறிப்பின் குளிர்ச்சியான அமைதியை உடைத்துக் கொண்டு அங்கங்கே தவளைகளின் சுதி சுண்டத் தொடங்கியது. ஒண்ணு ரெண்டு என்று தொடுத்துத் தொடுத்து சுதி கூடி லயம் பிடித்து 'கரக்புரக் கிர்புர்' என்று கச்சேரி களைகட்டியது. காது கொடுத்துக் கவனித்தபோது அதுக்குள் பீத்தலும் பினாத்தலும் சண்டையும் சச்சரவுமாக பல ராகங்கள் சேர்ந்திருப்பது தெரிந்தது.

ஒரு குட்டையிலிருந்து சில அடக்கி வாசித்தன.

''பிராமணியம்...பிராமணியம்...''

அடுத்ததிலிருந்து எதிர்ப்புக் குரல் வந்தது.

''திராவிடவியம்... திராவிடவியம்...''

அடுத்தடுத்த குட்டைகளில் வாசிப்பு உச்சத்துக்கு ஏறியது.

''பெண்ணியம்...பெண்ணியம்...''

''அமைப்பியம்... அமைப்பியம்...''

ஊருணிக்குள்ளிருந்து ஒரு சலிப்பு.

''மரபியம்... மரபியம்...''

ஆலாபனைகளின் சஞ்சாரம் இன்னொரு கட்டத்தை எட்டியது.

''தலித்தியம்... தலித்தியம்...''

தனியாவர்த்தனம் இல்லாத கச்சேரியா. ஒண்டிக்கு ஒண்டி சவால். சவாலுக்குப் பதில். பதிலுக்குப் பதில். ஏகக் கொண்டாட்டந்தான்.

''ததலித்து... ததலித்து...''

''அப்படின்னா...''

தலித்துக்கள் தலித்துக்களப்பத்தி எழுதுறது.''

''அப்படியா. இந்தா அதலித்து...அதலித்து...''

''அதென்ன அதலித்து...''

''தலித்து அல்லாதவங்க தலித்துக்களப்பத்தி எழுதுறது.''

''ஓ நீ அப்படி வாறயா. இந்தா புடிச்சுக்கோ பிதலித்து... பிதலித்து...''

''பிதலித்தா...''

''பிற்பட்டவங்க தலித்துக்களப்பத்தி எழுதுறது.''

''இவ்வளவுதானா. நான் குடுக்கென் பாரு முதலித்து... முதலித்து...''

''முதலித்துன்னா...''

''ஆமா முற்பட்டவங்க தலித்துக்களப்பத்தி எழுதுறது.''

இந்தச் சமயம் பார்த்து முழுக்கச்சேரியையும் அமுக்கும் குரலில் ஒருவர் பேரிச்சம்பழம் விற்றுக்கொண்டு வந்தார்.

''ஈயம் பித்தளைக்குப் பேரிச்சம்பழம்...''

அவர் உருட்டிவந்த பழைய சைக்கிளில் நாலஞ்சு தொட்டில்கள் தொங்கின. அவன் அவரை கையலைத்துக் கூப்பிட்டான். அவர் ஆர்வத்துடன் வந்தார்.

''அய்யா எங்கிட்டக் கொஞ்சம் மனுசவியம் இருக்குது. அதக் குடுத்து பேரிச்சம்பழம் வாங்குறதுக்கு மனசு வரல. நெளிசலத் தட்டி நிமித்தி ஓட்ட ஒடசல் அடச்சு பொழங்குறதுக்கு ஏதாச்சும் வழி இருக்கா.''

அவருக்குச் சப்பென்று போய்விட்டது. ''இதுக்குத்தான் கூப்புட்டயாக்கும்'' என்பதுபோல் பார்த்தார்.

''நமக்கு அந்தத் தொழிலெல்லாம் தெரியாதுய்யா.''

அவர் உருண்டு போகும்பரோது கோவத்தில் முணுமுணுப்பது தெளிவாகக் கேட்டது.

''மழநேரத்துல யேவாரம் ஆகலையேன்னு நானே நொந்து போயி வாறென். இவருக்கு ஓட்டைய அடச்சுக் குடுக்கணுமாம். இருக்கிறதப் போட்டு பேரிச்சம்பழம் வாங்கி நமட்டுனா குளுருக்கு நல்லாருக்குமில்ல. அதவுட்டுட்டு... கொஞ்சமாச்சும் அறிவிருக்கா...''

அவனுக்குச் சூடேறவில்லை. ஏனென்றால் இந்தக் கேள்வி யொண்ணும் புதுசில்லை. சொல்லப்போனால் இந்த மனுசன் ஒருத்தர்தான் பாக்கி. சின்ன வயசிலிருந்து யார்யாரோ அவனைக் கேட்டு அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டிருக்கிற கேள்விதான்.

சின்னவயசு அனுபவம் வேடிக்கையானது.

வெயிலான வெயில். குருதவாலிக் கருதுபோல் கொண்டைப்பூ மடிந்து தொங்க அடித்தொண்டையைத் தொட்டிலாட்டியபடி ஒரு கருகமணிச் சேவல் வேலிக் கருவ மரத்து நிழலில் சொகமாகப் படுத்திருந்தது. பொழுதுக்குப் பயந்து மேல்சட்டையை முக்காடு போட்டுக்கொண்டு தன் சொவட்டுப் பயல்களுடன் மந்தையில் தெல்லு ஓடு பொறுக்கித் திரிந்த அவன் சேவலை எறிந்து விரட்டினான். அது மார்பில் சிறகடித்து கூகே கொள்ளே என்று கத்திக்கொண்டு ஓடியது. கொட்டாரத்துக்கு விறகெடுக்க வந்த சேவல்காரர் அதைப் பார்த்து மனசு பொறுக்காமல் வசவை எடுத்து விட்டார்.

''ஏலே் அறுதப் பயகளா. மப்பு மதியத்துக்குக் கேக்குதா. ஒங்களுக்கு அறிவிருக்கா. சூசுவான்னு படுத்துக்கெடக்கிற சாவலப் போயி எறியிறீகளே. கைய ஒடிச்சுப்புருவென்.''

அவன் முனங்கினான்.

''ஆமா இவுக சாவலுன்னு எழுதியா ஒட்டியிருக்கு.''

பத்துநாள்கூட ஆகியிருக்காது. ஒரு நல்லநாளன்று அந்த மனுசன் ரெண்டு மூணு பேருடன் சேர்ந்து குதித்துக்குதித்து ஓடி அதே சேவலை

ரத்தம் வர எறிந்து விரட்டிக்கொண்டிருந்தார். அன்றைக்கு அவர் வைத வசவை திருப்பி வையணும் போலிருந்தது.

அப்போதே அவனுக்குள் சந்தேகம் முளைக்க ஆரம்பித்துவிட்டது. மரத்தடியில் சிதறிக்கிடந்த அந்தச் சேவலின் தூவிகளில் ஒன்றை எடுத்து காது குடைந்தபடி இந்தச் சங்கதியில் யாருக்கு அறிவில்லையென்று மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டான். சரி அவரவர் சேவலை அவரவர் எறியலாம் போலிருக்கிறது என்று அப்போதைக்குச் சமாதானப்பட்டான்.

பிறகு அதுவும் சரியாகப் படவில்லை. ஏனென்றால் சொந்தச் சேவலை எறிந்தபோது அம்மாவும் வைதாள். களத்தில் காயும் தானியத்தைக் கோழி கொத்திப் பொறுக்கும்போது விரட்டச் சொன்னவள் அதே கோழியை மெனக்கிட்டுக் கூப்பிட்டு முற்றத்தில் தானியம் தூவிக் காவலிருந்தாள். அவளைப் பார்த்து ''ஒனக்கு அறிவிருக்கா'' என்று கேட்கணும்போல் வாய் கொடுகொடுத்தது.

மழைவெறிப்புக்கு வெளியே தலைகாட்டியிருந்த நேசமணி வாத்தியார் முற்றத்தில் நின்றுகொண்டு அவனது நினைவுகளைக் கலைத்தார்.

''என்ன தம்பி குளுருக்கு மொடக்கி உக்காந்தாச்சு.''

''ஒண்ணுமில்லய்யா. கேவலம் ஒரு பேரிச்சம்பழக்காரன் ஒனக்கு அறிவிருக்கான்னு கேட்டுட்டுப் போறான். அத நெனச்சுப் பாத்தென்.''

''இவ்வளவுதானா. அவன் புதுசா ஒண்ணும் கேட்டுறலயே. ஆமா அறிவில்லன்னு சொல்லீற வேண்டியதுதான.''

''அவன வுட்டுட்டேனே.''

''அந்தக் காலத்துலேயே பைபிள்ல என்ன சொல்லீருக்கு தெரியுமா.''

''என்ன சொல்லீருக்கு.''

''அதிக ஞானத்திலே அதிகச் சலிப்புண்டு. அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன். மிஞ்சின நீதிமானாயிருக்காதே. உன்னை அதிக ஞானியுமாக்காதே. உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்.''

அவன் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னான்.

''சரியாத்தான் சொல்லீருக்கு.''

''எனக்குத் தோட்டத்துல வேலையிருக்கு. மழத்தண்ணி கரைய ஒடச்சு என்ன கூத்துப் பண்ணி வச்சிருக்குதோ. போயிப் பாத்து பக்குவம் செஞ்சிட்டு வாறென்.''

''நானும் பிஞ்சைக்குப் போயி வாய்க்கா வரப்பக் கைபாக்கணும்.''

அவன் பேரிச்சம் பழக்காரரை எதிர்பார்த்திருந்தான். அய்யா எங்கே சுற்றியும் இங்கேதானே வரணும்.

நல்ல சமயத்துக்கு அவர் ஊருக்குள் வியாபாரத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்தார். அவன் விரைவாக எழுந்துபோய் சைக்கிளில் கட்டியிருந்த மரப்பெட்டியைப் பிடித்து நிறுத்தினான். அவர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

''சத்தியமா எனக்கு அறிவு கொஞ்சங்கூட இல்ல. போதுமா.''

அவன் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எதிர்த் திசையில் நடையை விட்டான்.

# அதாகப்பட்டது

நாவலென்றால் என்ன. அது எதைச் சொல்லணும். எதுக்காகச் சொல்லணும். யாருக்காகச் சொல்லணும். சொல்லவேண்டிய கட்டாயந்தான் என்ன. அதன் கரு உரு உள்ளடக்கம் உத்தி கட்டுமானம் என்ன. அது குத்துக்கோட்டுக் கதையா நேர்கோட்டுக் கதையா. வட்டமானதா சதுரமானதா. ஒல்லியானதா தண்டியானதா. இப்படி கேள்விமேல் கேட்டு மூளையைக் கசக்கி பதிலைத் தேடிப்பிடிக்கிற பெரிய அறிவெல்லாம் அவனுக்குக் கிடையாது.

பத்து நாவலைப் படித்த அனுபவம் மனசைக் கிளர்ந்து கொண்டிருந்தது. அவற்றில் நடமாடிய ஆட்கள் அவனுக்குள் அமுங்கிக் கிடந்த பல மனுசர்களை உசுப்பிவிட்டிருந்தார்கள். அவர்களது அழுகை கோவம் சிரிப்பு எல்லாமே ரெம்பவும் பழக்கமானதாக இருந்தது. மழையில் நமர்ந்த மண்ணாக உணர்வுகள் பொருமப் பொரும நாவல் மனுசர்கள் ஒதுங்கி சொந்த மனுசர்கள் நச்சரிக்க ஆரம்பித்தார்கள். இன்னார்தான் என்றில்லை. பலரகமானவர்கள்.

சின்ன வயசில் செதுக்குமுத்து விளையாட்டுக்காக புளியமுத்து பொறுக்க சேக்காளிகளுடன் மேலூர் ஊருணிக்குப் போவான். அது வனாந்தரத்து நீர்ச்சோலை மாதிரி குளுமையாக இருக்கும். எதுப்பில் விழுதுகளை விரித்துப் போட்டுக்கொண்டு அப்பிராணியாக வேர்நீட்டி உட்கார்ந்திருக்கும் அந்தக் காலத்து ஆலமரம். ஊருணிக்குள் தாழ விளார் வீசியிருக்கும் அதன் கொப்புகள் அலைகளைத் தொட்டு விளையாடும். கரையைச் சுற்றி புளியமர வரிசை. இடையிடையே புங்கை, வேம்பு. என்னேரமும் பட்சிகளின் கச்சேரி நடக்கும்.

அங்கே நடக்கும் பல சங்கதிகளைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். தென்கரைச் சரிவில் கிடையாடுகள் தெளித்துக் கிடக்கும். கரைமீது சீட்டாட்டம் சூடுபிடித்திருக்கும். சகலமும் தெரிந்தவர்போல் சகடாலடிக்கும் ஆட்டுக்காரக் கோனார். எதுப்புக் கதைபோடும் வைத்தியப் பண்டுவர். ஊர்ப்பட்ட வக்கணை பேசும் தொங்குமீசை நாயக்கர். ஏடாசி எக்கண்டத்தையே தொழிலாகக் கொண்ட வழுக்கை மண்டை நாயக்கர். இன்னும் யாரெல்லாமோ கூடியிருப்பார்கள். கஞ்சா கிட்டித்த ஆதாளைக் குழல் கைமாறும். ஒரே சுண்டில் கோனாருக்கு முழி கிறங்கி வாய் குழறும். கூத்துக்கும் கும்மாளத்துக்கும் சொல்லணுமா.

கீழ்ப்புறம் புளியமர நிழலில் சுப்பையனாசாரி சில்லானாக ஓடித்திரிந்து லாடங்கட்டுவார். அவருக்கு வாயும் கையும் ஓயாது. ஊர்க்கதை அத்தனையும் அவருக்கு அத்துபடி. கெட்டவார்த்தை பூசி கிளுகிளுப்பாகச் சொல்லுவார். சுத்தியலடிதான் கதைக்குத் தாளம். குபீர் குபீரென்று கிளம்பும் சிரிப்பில் மரத்துக்குள் தொண தொணக்கும் குருவிகள்கூட அடங்கிவிடும்.

நாலுமரம் தள்ளி சவரவேலை நடக்கும். அங்கே இன்னொரு மாதிரியான கதை ஓடும்.

ஊருணி நீருக்குள் சொகமாக அசைப்போட்டபடி எருமைத் தலைகள் மிதக்கும். அதுக்குப் பக்கத்தில் முங்கிமுங்கிப் பூக்கும் பயல்கள். மேடான இடத்தில் ஒரு கிழவன் வெட்டிமுறித்த அலுப்பில் பீர்க்கங்குடுக்கையால் முதுகு தேய்த்து சாவகாசமாகக் குளித்துக் கொண்டிருப்பான்.

சிலசமயம் கீழூர்க் கண்மாயில் தூண்டிபோட்டு மீன் பிடிக்கும் போது எருமைகளுக்குத் தண்ணீர்காட்ட வரும் ஊரிக்காலி மாட்டுக் கருப்பன் கரையில் ஏகாந்தமாகப் பாடிக்கொண்டு வருவான். தூண்டிப்புழுவை மீன் கடித்து இழுப்பதை மறந்து அந்தத் தெம்மாங்கில் மனசு சொக்கும்.

ஏகதேசம் வயக்காட்டில் கந்தையா நாயக்கர் நடமாடுவார். ரெம்ப ஏல்க்கையாக வாழ்ந்து நொடித்துக் கெட்ட மனுசன். அந்த நிலையிலும் கபீரம் குறையாத தோரணை. வார்த்தையில்லாமல் நிறையச் சொல்லிக்கொண்டு போவார். கவலையண்டாத அந்த முகம் கண்ணுக்குள்ளேயே இருக்கும்.

இப்படி எல்லாரையும் சேர்த்து அகலமாக எழுதணுமென்று அவனுக்கு ரெம்ப ஆசை. அளந்து அளந்து அடிவைத்து சிறுகதை

எழுதுகிறவனுக்கு ஒருமூச்சு பாய்ந்து ஓடினால்தான் ஆசை அடங்கும் போலிருந்தது. அனுபவங்களை எத்தனை நாளைக்குத்தான் செம்பில் கோலி முகங்கழுவிக்கொண்டிருப்பது. அண்டாவில் பிடித்து தலைவழியே குளிப்பது எப்போது.

இவர்களைக் கோர்ப்பதற்கு ஒரு அடிச்சரடு கிடைக்காமல் தவித்தான். வேதனையான தவிப்பு. ஒருநாள் கேப்பைக்களத்தில் சுடலைப் பயல் தட்டுப்பட்டான். தாத்தா பாட்டியுடன் களத்து வேலைக்கு வந்திருந்தான். அவனது சூட்டிக்கையும் சுறுசுறுப்பும் உறுத்தியது. கூப்பிட்டுப் பேசனும்போல் முகத்தில் அப்படியொரு குறும்பு.

மதியப் பசியாறுவதற்காக கடையில் பொரிகடலை வாங்கும்போது மாட்டினான். ஆதரவாக அணைத்துக் கொண்டு போய் ரேடியோ ரூமில் உட்கார்த்தி பேச்சுக் கொடுக்கையில் ஊற்றாகப் பெருக்கெடுத்துவிட்டான். அம்மா பட்டாளத்தானுக்கு முந்திவிரித்து தன்னைப் பெற்றது, தகப்பன் புறக்கணிப்பில் தாலி தீர்ந்தது, பிறகு இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்டி தங்கச்சியைப் பெற்றது அந்தப் பிழைப்பும் நிலைக்காமல் தாயும் மகளும் கிணற்றில் மிதந்தது என்று அத்தனையையும் வடித்துவிட்டு பெரியமனுசனாக களத்துக்குப் புறப்பட்டான். அவன் முகத்தில் எந்தக் கவலையு மில்லை. கொஞ்சங்கூடக் குறையாத குழந்தைத்தனம்.

அடிச்சரடு கிடைத்துவிட்ட ஆனந்தத்தில் ஆர்க்கிமிடீசைப்போல் அலறிக்கொண்டு ஓடணும் போலிருந்தது. முதல் காரியமாக களத்துக்குப் போய் நிதானமாக வேலைசெய்யும் வயசான பகடைத் தம்பதிகளை மலைப்புடன் பார்த்தான். இவ்வளவு இழப்புகளுக் கிடையிலும் இடிபாடுகளுக்கிடையிலும் எப்படி அவர்களால் நம்பிக்கை தளராமல் அமைதியாக இருக்கமுடிகிறது. பிணையல் மாடுகள் மிதித்து மிச்சம் வைத்த கேப்பைக் கருதுக் கொலுக்குகளை அவர்கள் மாறிமாறி அடித்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு அடியும் களத்தில் விழவில்லை.

கண்ணுக்குள் சக்கிலியக்குடி திரண்டு பெரிய ஊராக விரிந்தது. பரபரப்பிலும் பரவசத்திலும் மனசு ஓடி ஓடி அங்கங்கே பிய்த்துப் பிராய்ந்து முள்ளும் பஞ்சும் குச்சும் கோரையுமாக சிறுகச் சிறுகச் சேர்த்து கூடுகட்டத் தொடங்கியது.

இந்தச்சமயத்தில் நீல.பத்மனாபனின் 'தலைமுறைகள்' நாவலைப் படித்தான். அது வித்தியாசமான அனுபவம். முக்கலும்

முனங்கலுமாக நடமாடும் உண்ணாமலை ஆச்சி அவனது பாட்டியைப் போலவே இருந்தாள். அவள் நாவல் மொழியால் அன்னியப்படுத்தப்பட்டிருந்த விதமென்னமோ கொஞ்சம் நெருடியது. அவளது நிதானமான பாந்தமான உணர்வுகள் எழுதியவரின் மொழிக்குள் கச்சிதமாகப் பிடிபடாமல் போயிற்றே என்ற ஆதங்கம். நடப்பியல்புகளுடன் முரணுகிற இறுக்கமான அறிவுத்தளத்திலிருந்து இயங்கும் மொழிக்குள் அவள் சிக்கித் தவிப்பதுதான் மேலோங்கியிருப்பதாகப் பட்டது. நகரத்தின் ஆடம்பரங்களுக்கிடையே மாட்டிக்கொண்டு முழிக்கும் கதர்க்கடைபோல் நாவல் ஆகிவிடக்கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

அப்புறம் கேசவதேவின் 'அண்டைவீட்டார்' கிடைத்தது. அதுக்குள் நுழைந்து வெளியே வரும்போது மனசில் பாறைக்கனம். பச்சாழிக் குருப்பு வம்சத்தின் தலைமுறைகள் அடுக்கடுக்காக உருண்டோடும் அதிர்வு. எதைச் சொல்லுவதிலும் மொழி அவருக்கு ஒரு தடையாக இல்லை. அசை போடும்போது இருபுறமும் தள்ளிக்கொடுக்கும் நாக்குபோல் மொழி ரெம்ப அனுசரணையாக இருந்தது. அழகிய மலையாளக் காடுகளுக்கூடே வளைந்தும் நெளிந்தும் தன்போக்கில் ஓடும் நீரோடையாகச் சலசலக்கும் அந்த வாழ்க்கை...

நாவலென்றால் இப்படி இருக்கணும். இதில் ஒரு வலுவான கதையிருக்கிறது. அதைச் சொல்லுவதில் அழகிருக்கிறது. கற்பனை இருக்கிறது. அது கதையின் இயல்புக்கு மெருகூட்டுகிறது. கதையை அமுக்கிச் சவாரிசெய்யவில்லை. மாற்றங்களும் மதிப்பீடுகளும் அததுபாட்டுக்குப் புதுசாகின்றன. சொல்லுகிற விதத்தில் பல சமாச்சாரங்களைக் கிளருகிறது. படிக்கிறவனை அந்தக் களத்தில் கொண்டுபோய் நிறுத்துகிறது. கூடவே நடக்கவைக்கிறது. அழவைக்கிறது. சிரிக்க வைக்கிறது. எல்லாம் முடிந்து சுருட்டிக் கொண்டு போகும்போது சிந்திக்கவைக்கிறது.

எழுதினால் ஓரளவுக்காச்சும் இதைப்போல் எழுதணும். இல்லையென்றால் தொடக்கூடாது. அவனுக்கு ஆவல் அதிகமானது. ஆவலிருந்து என்ன செய்ய. எழுதி முடிக்கணுமென்றால் சின்னக் காரியமா. அதுக்கு எவ்வளவு உழைக்கணும். என்னென்ன தயாரிப்பெல்லாம் வேணும். நாவலென்றால் இதைப்போல இருக்கணும் அதைப்போல இருக்கணும் என்று பருவெட்டாக முடிவெடுத்துக்கொண்டு காரியத்தில் இறங்குவது

பைத்தியகாரத்தனம். சொந்தமாக நாவல் எழுதணுமென்றால் முதல் வேலையாக படித்த நாவல்களையெல்லாம் மறக்கணும். எழுத நினைத்திருக்கும் அனுபவங்களுக்குள் ஊறணும்.

குருடன் ராசமுழி முழித்த கதையாகிவிடக் கூடாதென்ற பயத்தில் பொதுவாக நாவலைப்பற்றியும் தெரிந்துகொள்ள நினைத்தான். அதனால் நாவலாகச் சொல்லியிருப்பவர்களை கொஞ்சம் ஒதுக்கிவைத்துவிட்டு நாவலைப் பற்றிச் சொல்லியிருக்கும் உள்ளூர்க்காரர்களையும் அயலூர்காரர்களையும் தேடிப் போனான். அவர்கள் நாவலை அக்கக்காகக் கழற்றி அறிவுபூர்வமாக ரெம்ப ரெம்ப விளக்கியிருந்தார்கள். ஒண்ணொண்ணுக்கும் காரணகாரியம் காட்டி தமது கருத்துக்களை ஆணித்தரமாக நிறுவியிருந்தார்கள். அவர்களது மொழியே வித்தியாசமாக இருந்தது. நாவல் மொழிக்கும் அதுக்கும் வித்தியாசம் ரெம்ப இருந்தது. அது மூளைக்கும் மனசுக்குமான இடைவெளியாகப் பட்டது.

இந்தக் கருத்துக்களையெல்லாம் அப்படியே கூட்டி அள்ளி ஏற்கெனவே மனசு கட்டிக்கொண்டிருக்கும் கூட்டுக்குள் திணித்தால் கதி என்னாகும். பிதுங்கிப் பிய்ந்துபோகும். அப்புறம் நாவல் எழுதினாற்போல்தான். மேலும் அவர்கள் ரஷ்யப் புல்வெளிகளில் குதிரைகள் மேயும் தோரணை பற்றியோ கரிசக்காட்டுத் தரிசுகளில் கரிச்சான் குருவி காவலிருக்க ஆடுமாடு மேயும் லட்சணம் பற்றியோ சொல்லியிருப்பதாக ஞாபகமில்லை. ஆனால் ஒரு மனுசன் போகிறபோக்கில் சொல்லியிருந்தது மட்டும் நினைவில் நன்றாகப் பதிந்துவிட்டது. அதாவது உள்ளே ஆயிரம் விவரங்கள் நெளிவு சுளிவுகள் இருந்தாலும் படித்து முடித்தபிறகு அடடா இதுவும் ஒரு கதையைச் சொல்லுகிறதே என்று சிலாகிக்கிறமாதிரி நாவல் இருக்கணும்.

கண்டதைப் படித்து இப்போது அவன் மண்டைக்குள் கருத்துக்கள் மண்டியிருந்தன. தத்துவம் தகவல் என்று என்னென்னமோ சேர்ந்து மண்டை ஒரேவாக்கில் கனத்துவிட்டது. எதையும் தேடிப்பார்க்கிற பிரயாசை முன்னைப்போலில்லை. பூச்சி புழுக்களுக்குப் பின்னால் போகிற பார்வைக் கூர்மை மழுங்கிக்கொண்டு வந்தது. இதில் கொடுமை என்னவென்றால் மண்டை கனக்கக் கனக்க மனசு லேசாகிப்போனது. மண்டைக்கனம் மனசுக்குள் இறங்கிச் சுவர்ந்தால்தான் படிக்கிறவனைப் பாதிக்கிற மாதிரி அவனுக்குள் தைக்கிறமாதிரி ஏதாச்சும் எழுதமுடியுமென்று தோணியது.

மறுபடியும் நாவல்காரர்களிடம் வந்தான். அயலூர்த் தமிழ்க்காரர் ஒருவரின் நாவல்களைப் படித்தான். எழுதுவதற்கு அவர் அப்படியொண்ணும் சிரமப்பட்டதாகத் தெரியவில்லை. கருத்துக் குப்பிகளுக்குள் அனுபவங்களை அடைத்து வரிசையாக வைத்திருந்தார். உடனே மியூசியம் நினைவுக்கு வந்தது. அங்கே இப்படித்தான் உசுப்பிராணிகளை அமிலத்துக்குள் போட்டு அடைத்து வைத்திருப்பார்கள். ஒண்ணொண்ணும் பல்லை இளித்துக்கொண்டு பரிதாபமாகக் கிடக்கும். ஆனால் எதுக்குள்ளும் அடைபடாமல் உயரே பூதாகரமாகத் தொங்கும் திமிங்கலம் அப்படியில்லை. அதைப் பார்க்கையில் கடலுக்குள் மிதக்கிற மாதிரி கற்பனை வளரும். திமிங்கலத்துக்குக் கிடைத்த விடுதலைகூட அவரது நாவல்களில் மனுசருக்குக் கிடைக்கவில்லை. அவர்களை தம்மிஷ்டத்துக்கு இழுத்து ஆடவைத்து பாவைக்கூத்துப் பொம்மைகளாக்கியிருந்தார். காணாக்குறைக்கு தத்துவ முட்டைகளை வேறு வதவதவென்று பிதுக்கித் தள்ளியிருந்தார்.

உள்ளூர்க்காரர் இன்னொரு ரகம். அவரது நாவலில் வருகிறவர்கள் சர்க்கஸ் யானை மாதிரி. அங்கே யானையை வசக்கி சின்ன முக்காலியில் உட்காரவைத்து வேடிக்கை காட்டுவார்கள். அப்போது அது திக்குமுக்காடி சாணி போடும். பார்க்கப் பாவமாகவும் கோவமாகவும் இருக்கும்.

ஒரு சங்கதி அவனுக்குப் பிடிப்பட்டது. ஒருத்தன் மெத்தப் படித்த அறிவாளியாக இருந்துகொண்டு நாவல் எழுதக்கூடாது. ஒரு ‘தெளிவான’ அறிவுநிலையில் நின்றபடி அவனால் வாழ்க்கையை ஆழமாக உணர்ந்து எழுதமுடியுமா என்பது சந்தேகமே. எழுத்து என்பது ஒரு இளகிய நிலையில் உணர்வுகளைக் கோர்ப்பது. படிக்கிறவனை அந்த நிலைக்கு ஈர்ப்பது. அங்கே அறிவு ரெண்டாம் பட்சந்தான்.

அவன் கருத்து இறுக்கத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக விடுபட்டான். அவனை அலைக்கழித்த மனுசர்கள் உணர்வுகளில் கலக்கக் கலக்க அவசரமும் ஆர்வமும் வடிந்து நிதானம் திரண்டது. தனக்கிருக்கும் பெரிய பொறுப்பை உணர்ந்தான். நாவல் எழுதிவிட முடியுமென்ற நம்பிக்கை திடப்பட்டது.

எழுத ஆரம்பித்தபோது அவனுக்குள் சுடலைப்பயல் எழுப்பியிருந்த சோக உலகந்தான் பெரிசாகச் சுழன்றுகொண்டிருந்தது. அந்தச் சோகத்தில் முங்கிய மனநிலையில் எழுதினால் அவன் உள்வாங்கி வைத்திருக்கும் அனுபவங்களை முழுசாக

உணர்த்திவிடமுடியுமா என்று தயக்கம். எழுதப் போகும் விஷயம் சோகத்துடன் வேறு பல பரிமாணங்களையும் கொண்டிருக்கணும் என்று நினைத்தான் .

எனவே கதைக்கு முன்கூட்டியே திட்டமிட்டு ஒரு உருவம் கொடுத்துப் பார்த்தான். இதுக்குள் இன்ன இன்ன இருக்கும். இன்னார் இன்னார் வருவார்கள். இத்தனை பக்கங்களில் நடமாடுவார்கள். இவ்வளவுதான் பேசுவார்கள். இப்படியெல்லாம் மனக்கணக்குப் போட்டான். மண்ணைச் சீராகப் பரசி வாய்க்கால் கரைகட்டி பாத்திகளிட்ட நிலம் தெரிந்தது. நாவல் இப்படியிருந்தால் அனுபவங்கள் புதுசாக இல்லாமல் செதுக்கினமாதிரி ஆகிவிடுமே. அப்படி ஆகிவிடக்கூடாது. எழுதி முடித்தபிறகு கண்ணை மூடிக்கொண்டு பார்க்கும்போது கிடைப்பதுதான் உருவமாக இருக்கமுடியும். ஆகவே முன்னெச்சரிக்கைத் திட்டத்தை வசதியாக மறந்துவிட்டான்.

அதுக்குப்பிறகு கட்டுத்திட்டமில்லாமல் அவன்பாட்டுக்கு எழுதினான். மேற்கொண்டு எழுத எழுத விக்கிரமாதித்தன் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தமாதிரி பல மனநிலைகளுக்குப் போய் உள் உலகத்தைத் தேடவேண்டியிருந்தது. அவனை ரெம்பப் பாதித்த அனுபவங்களில் முழுசாகக் கரைந்துவிட்டால் சமநிலை குலைந்து தடுமாறினான். அதுக்காக தூர விலகியும் நிற்கமுடியவில்லை. அப்படி நின்றால் அனுபவம் கைநழுவி சேற்றுக்குள் விலாங்கைத் தேடிப் பிடிக்கிற நிலைமை. என்னேரமும் கத்திமேல் நிற்கும் சாதனைதான்.

எழுதிப் படித்தும் படித்து எழுதியும் பார்க்கும்போது அவன் சிலவற்றை உணர்ந்துகொண்டான். எழுதுகிறவனுக்கு ஒரு சமாச்சாரம் கிட்டத்தில் இருந்தாலும் பிடிபட்டும் பிடிபடாததுமாக ஒளிந்தும் மறைந்தும் போக்குக்காட்டுவதாக கண்டு பிடிக்கத் தூண்டுவதாக இருக்கணும். அப்போது உண்மையைத் தேடும் அவனது அக்கறையும் முயற்சியும் கூடும். இந்தத் தேடலில் தத்துவ அறிவு அவனை மேலும் திணறவைக்கணும். அதுதான் எழுத்துக்குப் பயன்படுகிற, எழுத்தை வலுப்பத்துகிற அறிவு.

மனுசர்களை அந்தரத்தில் லாந்தவிடாமல் அவரவர் களத்திலும் சூழலிலும் கால்பதித்து நடக்கவைப்பது முக்கியமாகப் பட்டது. மண்ணுடனும் புல்லுடனும் அவர்கள் கண்ணுக்குள் இறங்கும்போது நிஜ மனுசர்களாக இருப்பார்கள். எனவே அவர்களின் அகச்சூழலுக்கு இசைவான புறச்சூழலையும் சித்தரிக்க விரும்பினான். தவிரவும்

அகநிலைகளை பேச்சுக்களாலும் எண்ணங்களாலும் வெளிப் படுத்துவதுடன் புறநிலைகளாலும் வெளிப்படுத்தினால் உணர்வுகள் மேலும் ஆழப்படும் எனத் தெரிந்து கொண்டான். இரு நிலைகளும் ஒட்டுமாஞ்செடியாக ஒண்ணுக் கொண்ணு இணைந்து எழுத்தில் வளரும்போது அனுபவம் சிதையாமல் ஒருமுகப்பட்டுக் கிடைத்தது.

எதையும் அழகாகச் சொல்லுவதில் அவனுக்கு ஈடுபாடு அதிகம். யோசித்துப் பார்த்தால் எல்லாமே அழகாகத்தான் தெரிந்தது. அழகில்லாத பொருளென்று எதையும் ஒதுக்கமுடியவில்லை. அவனுக்கு அழகு என்பது கண்ணைத் தாண்டியதாக இருந்தது. அதனால் அசிங்கம் சுத்தம் என்ற வித்தியாசமில்லாமல் சகலத்தையும் அந்தந்தச் சூழ்நிலையின் உணர்வுமட்டத்திற்கேற்ப இயல்புக்கு உகந்தபடி முடிந்தவரை அழகாகச் சொல்ல முயற்சித்தான். அதுக்காக தொலைவிலிருந்து மூளைமொழியை ஓசி வாங்கிவரவில்லை. சாதாரண வாய்களிலிருந்து வார்த்தைகளை எடுத்துக்கொண்டான். இதனால் மனுசர்களுக்கும் பேனாவுக்கும் நெருங்கிய தொந்தம் இருந்தது. அந்த உறவினால் தடையில்லாமல் எழுதமுடிந்தது.

கிழத்தம்பதிகளின் களக்கருதடிப்பு என்னேரமும் மனசுக்குள் தாளமிட அவன் கந்தையாவுடன் எரிந்தான். முத்துமாரியுடன் மிதந்தான். அழகிரியுடன் அலைந்தான். ஆவுடையுடன் அழுதான். ஒருவழியாக கருப்பனுடன் பாடிக்கொண்டே வெளியே வந்து பெரு மூச்சுவிட்டான். எப்படியோ நாவல் முடிந்துவிட்டதில் நிம்மதி. ரெம்பநாள் தேடி அதுக்கு 'பிறகு' என்று பேர்வைத்தான்.

அவனுக்கிருக்கும் கொஞ்சநஞ்ச அறிவும் ரெட்டைக்கலப்பையில் பின்கலப்பையாக இருந்து துணை செய்யப் போய் பருவத்தில் உழுது விதைத்து வெள்ளாமை விளைச்சலைப் பார்க்க முடிந்தது. நல்ல மகசூலா இல்லையா என்பது வேறு சமாச்சாரம். பயிர் செய்யவில்லை யென்றால் அவனது நிலம் தரிசாகக் கிடந்திருக்குமே.

## புது வாசனை

பா.செயப்பிரகாசத்தின் 'தெக்கத்தி ஆத்மாக்கள்' ஒரு தீவிரமான வாசிப்பு அனுபவம். மண்மேடாகிப் போன கொசக்குடிச் சூளையில் நொறுங்கிக் கிடக்கும் பானை ஓடுகளையும் வாவளையங்களையும் வெறித்துப் பார்க்கும் ஒரு தெக்கத்தி மனுசனின் பதிவுகளைப் படிக்கும் போது அவை சொந்த அனுபவங்களாகி தண்ணீர் கோலிய கூனைவாலைப்போல் மனசு புடைத்துக் கனக்கிறது.

கண்ணுக்கெட்டியமட்டும் பரந்து கிடக்கும் கரிசல் சீமையின் காட்சிகள் மெல்ல விரிகின்றன. பாம்பு தவளையை கொஞ்சங் கொஞ்சமாக நமட்டி விழுங்குகிற காலகட்டம். வேலிக்கருவ மரங்களைப்போல் கண்டமானைக்கு முளைத்துக் கிடக்கும் கந்தக ஆலைகள். எறும்புச் சாரியாய் ஆலைகளுக்குப் படையெடுக்கும் குழந்தைகள், குமருகள். கிராமத் தெருக்களில் நாகரீகம் அவுத்துப்போட்டு ஆடுகிறது.

சமூக, குடும்ப உறவுகள், கலை, இலக்கிய மதிப்பீடுகள் என்று சகல கட்டுமானங்களும் இடிந்து சரிந்து நொறுங்குகின்றன. அந்த இடிபாடுகளில் சிக்கித் தவிக்கும் உழக்கரிசிச் சீவன்களின் முக்கல் முனங்கல்கள் ஊமாங்காடையைப்போல், மாடப்புறாவைப்போல் விட்டுவிட்டுக் கேட்கின்றன. இது பெரிய சோகம். மலைப்பைத் தருகிற, வியக்க வைக்கிற, திகைப்பூட்டுகிற வரலாற்றுச் சோகம். இந்த இழப்புச் சோகந்தான் இந்நூல் முழுக்க இழையோடுகிறது.

எத்தனை மனுசர்கள். சூல்கொண்ட மழைமேகங்களாக, இசைப் பெருக்கில் மருகால் பாயும் கண்மாய்களாக, அத்துவானக்காட்டில் அததுபாட்டுக்குப் பூத்து மணம் வீசும் மஞ்சணத்திப் பூக்களாக

நெஞ்சுக்குள் ஈரத்துடன் பதியமிட்டிருக்கிறார்கள். நிறையநிறைய அனுபவங்களைச் சொல்லுகிறார்கள். கனத்த சோகங்களை இறக்கிவைத்துத் தவிப்பாறுகிறார்கள்.

வெள்ளாவிச் சோறு வெறுத்துப்போய் நவதானியச் சோறுகளுக்காக ஏங்கித் தவிக்கிறது முந்திய தலைமுறை. நடப்பு அனுபவங்களைக் கணக்கிலெடுத்துக்கொள்ளாத அதிகாரிகள் கிணறு வெட்டிப் பாழாக்கிய பைத்தியக்காரத் தனத்தைச் சொல்லிப் புழுங்குகிறார் ஒரு அனுபசாலி.

அரசியல்வாதிகளில் துப்புக்கெட்டவர்கள் துப்புக்கூலி வாங்குகிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் லிங்கம்பட்டி கிட்ணம்மாளின் குணம் மாறவில்லை. கலைச் சமுத்திரமாக விளங்கிய சேதுராமன் சோகச் சின்னமாக மாறுகிறார்.

ஒருகாலத்தில் ரெட்டிப் பெண்ணைக் காப்பாற்றிய கூத்தாடி வம்சத்தின் மிச்சகொச்சமான கழைக்கூத்தாடி வயிற்றை நிரப்புவதற்கு உதவாத ரெட்டி வம்சத்தை நோக்கி மண்ணைவாரித் தூற்றுகிறான். நீதிக்கருப்பனின் இம்சை தாங்காமல் அவன் கதையையே முடித்து நினைவுச் சின்னமாகிறாள் ரங்கம்மா.

மாட்டு வண்டியை விற்று காடை வாங்குகிறார் ஒரு ஜமீன்தார். காடைத் தட்டையும் பத்தாயத்தையும் வீசியெறிந்துவிட்டு மாமிச வாடையற்ற வாழ்க்கையைத் தொடங்குகிறான் அழகர் செண்பகம். தொழில் நேர்த்திக்குப் பரிசாக பதினாறு குருக்கம்வரை கம்பெறிந்து சேர்வைக்காரிடம் நிலம் பெறுகிறார் சாயக்காரர்.

இப்படி எத்தனையோ மனுசர்கள் ஆழத் தடம்பதிக்கிறார்கள். செயப்பிரகாசத்தின் அழகியல் குழைந்த கவிதை நடையிலும் கதைசொல்லும் பாணியிலும் இவர்கள் அசலாக உருவாகியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாருமே அருமையான சிறுகதைகளாகவோ குறுநாவல்களாகவோ வடிவம் பெற்றிருக்க வேண்டியவர்கள். ஆனால் அசைபோட அவகாசம் இல்லாமலோ அனுபவங்களில் சுவர்ந்து நனையமுடியாமலோ அந்தப் படைப்பு நிலை கைகூடி வரவில்லை.

சிவசங்கு என்ற அடித்தள மனுசன் காவியப் பாத்திரத்துக்கு நிகரானவர். அவரது வாழ்க்கை நல்ல குறுநாவலாக வந்திருக்க வேண்டியது. கம்மியான ஈடுபாட்டினாலோ என்னமோ சேர்மானமில்லாமல் கொலுக்கொலுவாகச் சிதறிவிட்டது. நசிவுக்கு நடுவே பீறிடும் அவரது எதிர்ப்புக் குணங்களின் ஆதங்க

வெளிப்பாடும் சோகத்தைத் தழுவும் முடிவும் சிறந்த கதையாகச் செதுக்கப்பட்டிருக்கலாம்.

கரடுமுரடான குளுவக்குடியில் பூத்து ராமக்காளை என்ற கலைஞனைச் சூடிக்கொண்டவள் மூக்கம்மா. இரு கலைஞர்களின் இசை உலகம் மனசுக்கு இசைவான உலகம். அவர்களது இசைச் சேர்க்கையில் அரும்பும் ஒரு அழகிய மொட்டு அநியாயமாகப் பலியாகிறது. இந்த அனுபவங்களை உணர்த்துவதற்கு குறுநாவல் தான் சரியான வடிவமாக இருக்கமுடியும்.

சாவல் சண்டையே தஞ்சமாகக் கிடக்கும் மல்லையா எப்பேர்ப்பட்ட பாத்திரம். கவுத்திக்கிடக்கும் பானைமீது எஞ்செவனே என்று உறங்கும் சாவல்களை உசுப்பி சாராயம் ஊற்றி போதையேற்றி கத்தி கட்டி விட்டு சண்டையிடவைத்து வேடிக்கை பார்க்கும் மல்லையாக்களால் செத்துப்போனவை எத்தனை வெட்டுப்பட்டதும் குத்துப்பட்டதும் சாவல்கள் மட்டுந்தானா. இந்த குரூரமும் சோகமும் குறுநாவல் வடிவம் பெற்றிருந்தால் அதன் தாக்கமே தனிதான்.

'ஜெருசலேம்', 'சரஸ்வதி மரணம்', 'தாலியில் பூச்சூடியவர்கள்' போன்ற கச்சிதமான கதைகளைப் படைத்துள்ள செயப்பிரகாசம் என்ற கலைஞனிடமிருந்து, அனுபவங்களை நேர்த்தியாகவும் நுட்பமாகவும் பின்னத்தெரிந்த படைப்பாளியிடமிருந்து இலக்கிய உலகம் எதிர்பார்ப்பது அவற்றிற்கு நிகரான கதைகளையும் அடுத்தகட்ட குறுநாவல்களையும் ஆழமான அகலமான நாவல்களையுந்தான்.

இந்த நூலில் உள்ளவற்றை கட்டுரைக் கதைகள் என்பதா இல்லை கதைக் கட்டுரைகள் என்பதா. இயல்பான அனுபவங்கள் அமுங்கி கருத்துச்சவாரியில் படைப்புநிலை நீர்த்துப்போய் கட்டுரைத்தன்மை மேலோங்கியிருக்கும் கதைகளை கட்டுரைக் கதைகள் என்று சொல்லலாம். உணர்வுகள் கோர்க்கப்பட்ட, கதையம்சங்கள் நிறைந்த கட்டுரைகளை கதைக்கட்டுரைகள் என்று சொல்லலாமல்லவா. அப்படியானால் இவை கதைக்கட்டுரைகளே. அந்த விதத்தில் இந்தப் புதுவகையினை வரவேற்கத்தான் செய்யணும்.

# வேர்களைத் தேடும் விரல்கள்

வெட்டவெளிக் கரிசல். பட்டுப்போன பரட்டை இலந்தை. பருவ மழைக்கு முட்டைக் கருக்கொண்டு முள்ளுக்கடியில் அடைகாக்கும் குங்குமப் பழங்கள்.

வெயில் வறுத்த செவல்பொட்டல். வேரில் ஊசலாடிய குறண்டிச் செடி. மேகத்தெளிப்பில் சிலிர்த்துக் குலுங்கும் வெள்ளைப்பூ குஞ்சங்கள்.

இப்படித்தான் இளையபாரதியின் கவிதைகளை எங்காவது எப்போதாவது படித்ததுண்டு. படித்ததையும் படிக்காததையும் இப்போது கூட்டிக் குமித்துப் பார்க்கையில் காற்றுவெளி மணமும் கதம்பச் சுவையும் கூடிக் கிடைக்கின்றன.

பொசுக்கும் எதார்த்தங்களில் தீமிதிக்கும் இந்தக் கவிஞர் கவியிறகில் அனுபவங்களைத் தோய்த்து காயங்களை இதமாக நீவும்போது எனக்குள் இவருடன் இயல்பான நேச உறவு அரும்புகிறது. இவருக்கான காயங்களும் வலியும் எனக்கும் உண்டு.

சிலசமயம் திக்குத் தெரியாத திகைப்பு. திக்குமுக்காடும் திணறல். நடுக்கடலில் மிதக்கும் தத்தளிப்பு. கோடைத் தகிப்பில் நாவறள நடக்கும் களைப்பு. அடிவானத்தில் ஒரு கதவுக்கீற்று திசையைக் காட்டுகிறது. தொலைவில் புகைமண்டலத்தினூடே ஒரு படகுப்புள்ளி தெரிகிறது. கானல் அலையில் ஒரு பச்சை மரம் அசைகிறது. தேடித் தேடி அயர்வுப் பயணம் தொடர்கிறது.

இவர் தேடுவதைத்தான் நானும் தேடுகிறேன். இவரில் என்னை இனங்காண்கிறேன். இந்தத் தொந்தத்திற்கு அர்த்தமென்ன. எங்களைப் பின்னிப் பிணைப்பது எது. எந்தத் தொன்மத்தின் வேர்.

இளையபாரதியை முதலில் சுந்தித்த நினைவு மனசில் கொசுவாக ரீங்கரிக்கிறது. நவாப்பின் குதிரை லாயத்தில் நான் அரசாங்கக் கோப்புளுக்கு நடுவில் அல்லாடிக் கொண்டிருக்கும்போது மெல்ல எட்டிப்பார்த்தார். கிணற்றுக் குள்ளிருந்து வந்த குரல் படியேறியதும் துல்லியப்பட்டது. நிறையப் பேசினோம். நெருங்கிப் பழகினோம். சுமையை உதறிவிட்டு கடற்கரைக்கு ஓடி மணலில் சொகமாக உருண்டு புரண்ட குதிரையின் அனுபவம் எனக்கு. அடுத்துடுத்த சந்திப்புக்கள் எங்களுக்குள் பேசுவதற்கு நிறையவே உண்டு என்பதை உணர்த்தின.

ஒரு கட்டத்தில் 'சுபமங்களா' இதழுக்காகத் தோள் கொடுத்திருந்தார். அப்போது நாங்கள் சந்திக்கும்போதெல்லாம் கதை கொடுத்தாலே கொடு என்று முரண்டுபிடிப்பார். நான் சுணங்கும் நேரத்தில் எருமைவாலை முறுக்கி எழுதவைப்பார். எழுதியதை உரிமையுடன் பறித்துக்கொண்டு போவார். கோமலுக்கு இப்படியொரு துணையில்லையென்றால் இதழ் தொய்வில்லாமல் வந்திருக்குமா என்பது சந்தேகமே.

தேக்குமரம்போல் தாக்கான உடம்பு. கோரை முளைத்த வரப்பாகக் குறுந்தாடி. கவணில் காத்திருக்கும் கல்கண்கள். மடங்க மறுக்கும் உடைகள். இளையபாரதி என்னுடன் பேசாத சங்கதியில்லை. காடே மேடே என்று ஆரம்பித்து கதை கவிதையில் ஆலாபித்து சினிமாவில் முத்தாய்க்கும். முதல் சந்திப்பிலிருந்து இன்றைக்குவரை இதே கச்சேரிதான் நடந்துகொண்டிருக்கிறது.

இவர் தன்னை எனக்குள் இருத்திவிட்டுப் போனபின் மாய்ந்து மாய்ந்து கேட்டுக்கொள்வேன். கோரப்பசியிலும் குரசோவா, குருதத் என்று நல்ல சினிமாவை மென்றுகொண்டிருக்கும் இந்தக் கம்பீரன் யார். கஞ்சா அடித்துக் கிறங்கிய காட்டுச் சித்தனா இல்லை எட்டயபுரத்து கட்டய மணியக்காரரின் சேக்காளியா இல்லை குடித்துக் குழறும் தெருப்பாடகனா. இவர் எந்த வேரின் தொடர்ச்சி.

இப்போது விடை கிடைத்துவிட்டது. தெளிவாகச் சொல்லி விட்டார்.

சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாளின்
சொந்தச் சகோதரன் நான் - அவள்
சொல்லிக் கொடுத்த கவிதை ரகசியம்
சொல்லத் துடிப்பவன் நான்.

அடடா அந்த அபலை மனுசி எனக்கும் அக்காவாயிற்றே. அவளது காதல் அவலம் சாதலில் முடிந்ததில் எனக்குத் தாளாத வேதனை

உண்டு. மார்கழி தோறும் அவளது மனப் புலம்பலைக் கேட்கும்போது என் நெஞ்சு அழும். அவள் ஆசையாகக் கட்டிவைத்த சிற்றில் சிதையும்போது அங்கமெல்லாம் அதிரும். ஆனாலும் அந்தக் கவிக்கோபுரத்தை கழுத்துவலிக்க அண்ணாந்து பார்ப்பதில் களிப்பான களிப்பு.

அவளுக்கு இயலாமை ஒருவிதமென்றால் இளையபாரதிக்கு இன்னொரு விதம். அஞ்ஞாத வாசத்தில் அலியாயிருந்த அர்ஜுனனைத் துணைதேடும் தற்காலிக இயலாமை.

சூடிக்கொடுத்த நாச்சியாரைப்போல் இவர் சுடரில் வேகமாட்டார். இவருக்குள் கனன்று கொண்டிருக்கும் தார்மீகக் கோவம் அம்பராத் தோணியிலிருந்து வில்லின் நாணுக்கு வரும். இவரது நெற்றியின் வியர்வைப் பிரவாகம் தடித்த ஒப்பனைகளைக் கலைக்கும்.

இவருக்கு வேசைத்தனமான வெற்றிகள்மீது ஆசையில்லை. அதைவிட கெளரவமான தோல்விகளை பெருமையுடன் சூடிக் கொள்வார். அதனால்தான் வேசிகளை இவரால் கூசாமல் சாடமுடிகிறது.

குருதிச் சுவடுகளை விலையாய்க் கேட்கும்
சத்தியப் பதாகை தாங்கிய சமரில்
நான் தோற்றாலும்
உன் வேசைத்தனமான வெற்றியைப்
பரிகசிக்கும் என் தோல்விகள்.

இவரது தொன்மத்தின் வேர்கள் தொப்புள்கொடியின் தொடர்ச்சியாய் பறிக்கமுடியாத ஆழத்தில் பாவியிருக்கின்றன. அந்த ஆழத்தை அளக்கும் பிரயத்தனங்களில் இவர் சளைக்கவில்லை. தொப்புள்கொடியின் துணையில் கர்ணனைத் தேடிக் கொணர்கிறார்.

இன்றைக்கும்
குப்பைத் தொட்டிகளில்
குந்திகள் விட்டுச் செல்லும்
கருத்த கர்ணன்கள்
காகிதம் பொறுக்கியும்
ஆயுதம் தூக்கியும்
கழிப்பார்கள்
காலம் ஆதரிக்க
துரியோதனன்கள் அற்று.

வண்ணநிலவனுக்கும் தகழிக்கும் இவருக்கும் தனித்தனிக் கடல்தான். மனசைக் கழற்றி எறிய மீண்டும் புதிய உயிராக்கித் தரும் மனக்கடல். ஆனால் நான்கு கரைகள் மறித்து வரையறுத்த துண்டுக் கடல் அல்ல. நன்னீரோட்டம் இணைக்கும் ஒரே மகா சமுத்திரம். ஆனாலும் தனித்தனிக் கடல்தான். அவரவர்க்கான அலைதான் கரைதான். அடங்காத இசைதான். அகண்ட வானம்தான்.

அலைமோதி அழிக்குமென்று தெரிந்தும் கடற்கரையில் ஓடிஓடி வளைதோண்டி ஒளிகிறது கூறுகெட்ட நண்டு. கரைக்கப்பால் காலியிடம் எவ்வளவோ உண்டு. அங்கே போகமுடியாது. ஏனெனில் அதனது தொன்மத்தின் வேர்கள் ஆழக் கடலுக்குள் பாவியிருக்கின்றன. அந்தத் தாய்க்கடல் அதனை கோவத்தில் உதறித் தள்ளினாலும் பொங்கும் பாசத்தில் அரவணைத்துக்கொள்ளும்.

இவருக்குள் ஏராளமான ஏன்கள் தொங்குகின்றன. தலைகீழான கேள்விக் கொக்கிகளில் தலையில்லாமல் தொங்கும் மாமிசப் பிண்டங்களைப் போலில்லாமல் அடுத்தடுத்த தேடலாகத் தொடுக்கும் ஏன்கள். இலக்கற்ற தேடலா இல்லை இலக்கை நோக்கிய முனைப்பா. சிலசமயம் புள்ளிமீது குவியும் ஒளி. சிலசமயம் இருளில் பாயும் ஒளிச்சிதறல்.

இவர் கையில் எத்தனையோ யானைகள் நடைபழகுகின்றன. ஒவ்வொரு நடையிலும் ஒரு சோகம் இசைக்கிறது. மனித வாழ்க்கையின் குரூரங்களுக்கிடையில் சிக்கித் தவிக்கும் கருத்த சோகம். பட்டணக்கரைகளில் தட்டழியும் பட்டத்து யானைகள். வடகலை தென்கலை யுத்தத்திற்கு நெற்றிக் களம் விரிக்கும் அலங்கார யானைகள். வழிதப்பி வலைகட்டிய பள்ளத்தில் விழுந்த கணத்தில் பற்றிய பதற்றம் கருத்த தசைகளில் இன்னும் தொற்றியிருக்கும் யானைகள். காலில் சங்கிலிப் புண்களோடு கஜேந்திர மோட்சத் திற்காகக் காத்திருக்கும் யானைகள். அந்த கருத்த கம்பீரங்களுக்கு, காற்றுக்கு அசையும் மூங்கில் புதர்போல் காட்டுக்குள் அலையும் சைவப் புதிர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

யானை நடக்கிறது தன்பலம் அறியாமல்
நெஞ்சுக்குழி தட்டிய காசநோய்ப் பாகனின்
முழ அங்குசத்திற்கு அடங்கி.

இந்த எச்சரிக்கை தும்பிக்கையை வாய்க்குள் வைத்துத் தூங்கும் குழந்தை யானைகளுக்கு மட்டுந்தானா.

உண்மைதான். வேதனைகளின் சரணாலயமாகிவிட்ட இந்தத் தேசத்தின் காதுகளிலிருந்து ஓயாமல் சீழ் வடிகிறது. வயதாகிவிட்ட சூரியன் இருளையே பொழிகிறான். விதைநெல்லை விற்றுத் தின்பதைப்போல் விரக்தி பூத்த நாட்கள். காளியின் வாழைக்குருத்து நாக்கு மேரியின் உதிரம் கேட்டுத் துடிக்கிறது. காட்டுக்குள் காவலிருக்கும் பதினெட்டாம்படியானின் வீச்சரிவாள் காதர் பாயின் கழுத்தைக் கேட்கிறது. பள்ளிவாசலில் பிள்ளையாரின் தும்பிக்கைக் குழாயில் நமாஸ் ஒலிக்கிறது. புனித வேதப் புத்தகத்தில் துப்பாக்கியும் கொடுவாளும் புதைந்திருக்கின்றன. சிரசுக்குமேலே ராணுவக் கழுகுகள் மரணத்தைத் துப்பிச் செல்கின்றன. எங்கும் சாதிக்கூத்தின் அரங்கேற்றம். போர்ப் பரணி. நினைவுச்சின்னம். குண்டுகள் குழந்தைகளுக்குப் பந்துகளாயின. மானுடம் பதுங்கு குழியில் ஒளிந்துகொண்டது. வழிகாட்ட வந்த தத்துவவாதிகள் அரசியல் கடைவிரித்து தாயத்து விற்கின்றனர். கொடிகள் கோவணங்களாகி விட்டன. தேசத்தை தீராத யானைக்கால் நோய் தொற்றிக்கொண்டது. காலைத் தூக்கிவைக்கவே திணறுகிறது. இந்த லட்சணத்தில் பீடுநடை ஒரு கேடா.

ஆண்டாண்டு காலமாய் இவர் மந்திரம் ஓதித் தேடிய கடவுள் அனுபவங்களின் உக்கிரம் தாங்காமல் தீவட்டி கண்ட வெளவாலாய் திடுக்கிட்டு வெளியேறிவிட்டார்.இன்னொரு சந்தர்ப்பத்தில் -

தீர்ப்பெழுதும் பேனா கிடைத்துவிட்ட திமிரில்
நான் கையெழுத்திட்ட கருப்புத் தண்டனையால்
அவன் கழுத்தினைத் தூக்குக் கயிறுகள் இறுக்க
காற்றுக்கு ஏங்கி இருதயம் தவிக்க
கால்கள் துள்ளி உயிர் பிரிகையில்
கடைசி மலமாய் வெளியேறினார் எனது கடவுள்.

எனது கடவுளும் இப்படித்தான். எப்போதோ மூலச்சூட்டின் உதிரமாக கடைசி மலத்திற்கும் கடைசியாக கணறிக்கொண்டு வெளியேறிவிட்டார். அவர் தொழிற்சாலை வாசலில் துரோகிகளின் துப்பாக்கிக் குண்டுகள் மார்பில் பாய்ந்து துடிதுடித்துச் செத்துவிட்டார் என்று தெரிகிறது.

அசிங்கங்கள் இவருக்கு அருவருப்பாக இல்லை. நரகலைத் தின்று தின்று நாட்கள் கழிந்தாலும் அமிர்தம் கடையும் நம்பிக்கையை இவர் மனசு அடைகாக்கிறது. ஒப்பனை கவிந்து உலகம் முழுக்க அரிதாரமாகி உண்மை முற்றிலும் அரிதாய்ப் போனாலும் சத்தியப்

பதாகை தாங்கிய சமரில் இவர் சமாதானக் கொடி காட்டப் போவதில்லை. சமரனாகவே இருந்து சூரியனை வசப்படுத்துவார். இல்லையென்றால் தனக்கென்று ஒரு நட்சத்திரத்தையாவது தக்கவைத்துக்கொள்வார். அதுவரை கோடை வறட்டித் தீய்ந்த நிலங்களில் அங்கங்கே தயக்கத்தில் எட்டிப்பார்க்கும் சாணைக் கிழங்கு முளைகளை பசிக்கிறக்கத்தில் தேடித்திரியும் கிழவியைப் போல் வறண்ட வாழ்க்கை வெளியில் தனது தொன்மத்தின் வேர்களைத் தேடிக்கொண்டே இருப்பார்.

# எழுத்து

மழை பொழிந்தால் வளங்கொழிக்கும் மானாவாரிக் கரிசல் சீமையான விருதுநகர் மாவட்டத்தில் கருவேல மரங்களுக்கிடையே விரிவடைந்து வரும் நகரம் சாத்தூர். இருக்கங்குடி மாரியம்மா கோயிலுக்குச் செல்லும் பக்த கோடிகளுக்கு சாத்தூர் சேவு வாங்கி வருவது ஒரு நேர்த்திக்கடன். விளம்பரத்தில் தலைவிரித்தாடும் எந்தக் குளிர்பானமும் அந்த ஊர் வெள்ளரிப் பிஞ்சுக்குக் கிட்ட அண்டமுடியாது.

ஊரின் தென்புறத்தில் தொன்மைச் சின்னமாக வைப்பாறு பாய்விரித்திருக்கிறது. அது நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பிரவகித்த காலமெல்லாம் மங்கி மலையேறிவிட்டது. அன்று சோலையாக இருந்தது. இன்றோ மூளிக்கோலத்தில் பாலையாகிப் போனது. ஆலைக் கழிவுகளால், சாக்கடைச் சங்கமத்தால் பாழாகியும் போனது.

கோலார் தங்கவயலில் தங்கத்திற்காகச் சுரங்கம் தோண்டுகிறார்கள். இங்கே கோளாறு என்னவென்றால் வைப்பாறு மணல்வயலில் தண்ணீருக்காகச் சுரங்கம் தோண்டுகிறார்கள். கோடைக்காலம் ரெம்பக் கொடுமையானது. மழைக்கு ஏங்கும் மக்கள் கூட்டம் தலைக்கு ஒரு குடமேந்தி அலைக்கழிகிறது. காணாக்குறைக்கு இடுப்பிலும் குடம் இடம்பிடித்துக்கொள்கிறது. அவர்கள் நிலத்தடி நீர்தேடி நித்தமும் வராக அவதாரம் எடுப்பது கண்கொள்ளாக் காட்சி.

அங்கேயே குளிக்கவும் அழுக்கை வெளுக்கவும் அள்ளிவந்து குடிக்கவும் இந்த அரிய திரவந்தான் பயன்படுகிறது. பல நிறத்தில்

பிளாஸ்டிக் குடங்கள் பூத்த சைக்கிள்கள் அங்கங்கே அரளிப்பதியங்களாக அலைகின்றன. ஆற்றில் அணிவகுத்து நிற்கும் ஒற்றைமாட்டு வண்டிகள் ஊற்றில் நீர்பிடித்து மேட்டுக்குச் சுமக்கின்றன. இது அன்றாடம் நடக்கும் நீர்வணிகம். வீட்டுக்குத்தான் காவலுண்டு என்றால் இங்கே நள்ளிரவில் நாயும் மனுசனும் ஊற்றுக்கும் காவலிருக்கிறார்கள்.

பல்லாண்டுகளாகத் தொடரும் இந்த அவலத்திற்கு யார் பொறுப்பு. இயற்கைமட்டுந்தானா. இல்லை எல்லாருமேதானா.

தீப்பெட்டித் தொழில் ஆதிக்கம் செலுத்தும் இந்த நகரத்தில் குடிசைத் தொழிலாக நூறு ஆலைகள் வரை சந்தடியில்லாமல் பேனாமுள் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதை நம்பமுடியவில்லை. இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் பாரதத்தின் பல பகுதிகளிலும் இங்கே தயாரிக்கப்படும் முள்களினால்தான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தொழில் இந்திய சுதந்திரத்தைவிட மூத்தது. இங்கே ஆரம்பிப்பதற்கான பிரத்யேகக் காரணம் எதுவுமில்லை. கூலி சற்று அதிகமாகக் கிடைத்தது. தொழிலாளர்களும் நிறைய இருந்தார்கள். ஒரு கொல்லர் விளையாட்டுப்போல் ஆரம்பித்துவிட்டார். அவ்வளவுதான்.

தொடக்கத்தில் முன்னூறு ஆலைகளுக்கும் மேலாக செழித்து வளர்ந்து செயல்பட்டு வந்தன. அவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டிருந்தன. இப்போது ஆலைகள் குறைந்து தொழிலாளர்கள் அருகிவிட்டார்கள். இந்த ஆலைகளில் பெருமளவில் பணிபுரிந்த சிறுவர்கள் வருமானம் தேடி வேறு ஆலைகளுக்குப் பறந்துவிட்டார்கள். அங்கேயும் அவர்களது பிஞ்சு விரல்கள் தேய்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்தத் தேய்மானத்தில்தான் வருமானம்.

பேனாமுள் ஆலைகளில் இலங்கை அகதிப்பெண்கள் பலர் முகாமிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்திரவாதமில்லை. நாளை எங்கு புலம் பெயர்வார்களோ சொல்லமுடியாது.

பேனாமுள் முதலில் வெள்ளியிலும் பின்னர் பித்தளையிலும் செய்யப்பட்டது. தற்போது கறைப்பிடிக்காத உருக்குத் தகடுகளில் செய்யப்படுகிறது. தகடுகள் சென்னை போன்ற நகரங்களிலிருந்து உள்ளூர் வியாபாரிகள் மூலமாக ஆலைகளுக்கு வருகின்றன. அவை பேனா முள்ளாக உருவெடுப்பதற்குமுன் பல கட்டங்களைத்

தாண்டியாகணும். தகடுகள் சிறு சிறு துண்டுகளாக வளைந்து கூராகி மெருகேறி கடைசியில் முள்களாக அரங்கேறுகின்றன. இதற்கு பிஞ்சு விரல்கள் தோதாக இருக்கின்றன.

முள்ளின் முதல்கட்டம் இப்படி ஆரம்பிக்கிறது. சுருண்டும் விரிந்தும் கிடக்கும் வடிவமற்ற கழிவுத் தகடுகள் ஒரு ஒழுங்கான வடிவத்தில் செதுக்கப்படுகின்றன. பின்பு அவை சிறு சிறு துண்டுகளாகத் தறிக்கப்படுகின்றன. அடுத்து துண்டுத்தகடுகள் கரும்பைப் போல் எந்திர இடுக்கில் நுழைந்து மெலிந்து நீள்கின்றன. பேனா முள்ளின் தரத்திற்கேற்ப தகடுகள் மெலிதாக்கப்படுகின்றன. இதற்கு தகடு அரைத்தல் என்று பேர்.

அரைத்த தகடுகளில் படிந்த எந்திரக்கறையை நீக்கியபின்பே அவை அடுத்த கட்டத்திற்கு அனுப்பப்படுகின்றன. சுழலும் தகரத் தொட்டியில் தகடுகள் குலுக்கப்படுகின்றன. இந்த குலுக்கலோசை கொடூரமானது. எந்திர இரைச்சலே தொழிலாளர்களுக்கு மந்திரமாகிப் போனது. குலுக்கலில் அழுக்கு திரண்ட தகடுகள் நீரில் குளித்துக் கரையேறுகின்றன. இவற்றில் கருக்கொண்டிருக்கும் முள்களுக்குக் கணக்கில்லை.

முள்ளின் வடிவத்திற்கேற்ப ஒருவர் அச்சுக்களை வார்த்தெடுக்கிறார். ஒவ்வொரு கட்டப் பணிக்கான அச்சுக்களையும் இவரே வடிவமைக்கிறார். இவரது மேற்பார்வையில்தான் ஆலை இயங்குகிறது. இவருக்கு வருமானம் போதவில்லையென்றால் மேலும் ஓரிரு ஆலைகளைக் கவனித்துக்கொள்கிறார். அப்படியும் பற்றாக்குறைதான். இதைச் சரிக்கட்ட இவரது மனைவி மக்கள் தீப்பெட்டியாலை செல்கிறார்கள்.

அழுக்குத் தகடுகள் முழுக்குப் போட்டாயிற்றா. அப்புறம் அவை பேனாமுள் அளவுக்கு முறையாகக் கத்தரிக்கப்படுகின்றன. இந்த இடத்தில்தான் முள்ளின் கருநிலை உருநிலைக்கு மாறுகிறது. மீன் குஞ்சுகளைப்போல் மினுங்கும் இந்த முள்குஞ்சுகள் மேலும் பல நிலைகளை நீந்திக் கடக்கணும்.

வடிவம் பெற்ற தட்டையான முள்கள் வாகான இடத்தில் துளையிடப்படுகின்றன. இந்தத் துளை வழியாகத்தான் முள் மூச்சுவிடணும்.

பேனா நிறுவனத்தின் பேரையும் முத்திரையையும் ஒருவர் சிற்றுளியால் அச்சில் பொறிக்கிறார். முப்பதாண்டுகளுக்கும் மேலாக இதில் ஈடுபட்டிருக்கும் இந்த நுட்பமான சிற்பியின் மூக்குக்

கண்ணாடி எவ்வளவோ கனத்துவிட்டது. ஆனால் மடிமட்டும் கனக்கவேயில்லை. கிடடத்தட்ட எல்லா ஆலைகளுக்கும் ராஜசிற்பி இவரே.

துளையிடப்பட்ட முள்ளின்மீது முத்திரையும் எழுத்தும் ஆழப் பதிக்கப்படுகின்றன. இந்தப் பதிவுதான் பேனா நிறுவனங்களை நாடெங்கும் அடையாளம் காட்டுகிறது. எழுத்து பொறிக்கப்பட்ட முள் உள்புறம் குழிவாக வளைக்கப்படுகிறது. அதன் வடிவத்திற் கேற்ப குழிவும் வளைவும் வேறுபடும். இவ்வாறு வளைத்து வளைத்தே தொழிலாளர்களின் முதுகும் வளைந்துவிட்டது.

அடுத்தகட்ட வேலைகள் முள்ளின் முனையைச் சுற்றியே மையங்கொண்டிருக்கின்றன. நிமிர்ந்திருக்கும் முள் தலைவணங்க வைக்கப்படுகிறது. அப்போதுதான் எழுதத் தோதாக இருக்கும். தட்டையாக வளைந்திருக்கும் [illegible] ஙெச் சுருக்கப்பட்டு கெட்டியாகிறது. [illegible] து முக்கியமான கட்டம்.

முனை நெருக்கல் முடிந்து [illegible] நு. முள்முனை சிறு குழிக்குள் முங்கி [illegible] டு திரண்டு குருவித் தலைபோல் உருவெடுக்கிறது. இந்த நுனி உருண்டைதான் பேனா முள்ளின் தரத்தையே நிர்ணயிக்கிறது என்று சொல்லலாம்.

முனைகீறல் முக்கியமான பணி. கால்வாய் வெட்டுவதற் கொப்பானது. இந்தக் கால்வாய் வழியாகத்தான் மை சீராகக் கசிந்து தாள் பரப்பில் பாயணும். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். முனை கீறும் வல்லவனுக்கு அலுமினியத் தகடுதான் ஆயுதம். கண்ணனின் சக்கரம்போல் சுழலும் தகடு கண்மூடி முழிக்குமுன் உருக்கை அறுத்துப் பிளக்கிறது. எண்ணெயும் ரசாயனப் பொடியும் இணைந்த கலவையின் ஈரத்தில் இந்த அதிசயம் நடக்கிறது. எண்ணெய்க்கு பேனா முள்ளைவிட இந்தக் கண்ணனின் உடைமீதுதான் நாட்டம் அதிகம்.

முனை கீறும்போது கறைபடிந்த முள் நனையவைத்து நன்றாகக் கழுவப்படுகிறது. பின்பு உமித்தூளில் உலர்த்தப்பட்டு சலிக்கப் படுகிறது. அதுக்குப்பிறகு முள்ளின் கீறல்முனை விரிசலின்றி நெருக்கப்படுகிறது. கால்வாய்க்கு மதகு அமைப்பது போன்றது இந்த முனை நெருக்கல்.

எந்திரங்களைத் தாண்டிவரும் முள்களின் முனைகள் இறுதியாக சாணை தீட்டப்பட்டு மெருகேறுகின்றன. அப்போதுதான் அவற்றால் விரல்களின் ஆணைப்படி எழுதமுடியும். இப்படி முழுவடிவம் பெற்ற முள்கள் சந்தைக்குச் செல்லுமுன் தரம்பிரிக்கப்படுகின்றன. அரங்கேறத் தகுதியானவை அன்னிய மாநில முதலாளிகளைச் சென்றடைகின்றன. தொழிலாளர்களின் உழைப்பு. அத்துடன் அன்னியமாகிறது.

இவ்வளவு நுட்பமான தொழில் நாளுக்குநாள் நசிந்துகொண்டிருக்கிறது. போதிய பணவசதியும் வருமானமும் இல்லாமல் ஆலை உரிமையாளர்கள் மூச்சுத் திணறுகிறார்கள். சொல்லப்போனால் பத்துப்பேரை வைத்து வேலை வாங்கும் மேஸ்திரிகளாகவே இருக்கிறார்கள். இப்போது அவர்களும் தொழிலாளர் களாக மாறி வேலைசெய்ய வேண்டிய நிலைமை.

முன்பெல்லாம் கழிவுத் தகடுகள் மலிவு விலையில் கிடைத்தன. இப்போது விலை உச்சிக்கு ஏறிவிட்டது. சேலம் உருக்காலையில் மலையாகக் குவிந்து கிடக்கும் கழிவுத் தகடுகளில் ஒரு சிறு பகுதியை இவர்களுக்கு நேரடியாக ஒதுக்கினால் சவலையாகிவிட்ட சிறு தொழிலைக் காப்பாற்றிய புண்ணியமாவது கிடைக்கும். அடையாள மிழந்து கொண்டிருக்கும் இந்தத் தொழிலையும் தொழிலாளர் களையும் அடையாளங்கண்டு ஆதரிக்கவில்லையென்றால் விரைவில் காணாமல் போய்விடுவார்கள்.

பேனாமுள் வணிகம் முற்றிலும் சில வடமாநில முதலாளிகளின் கையில் உள்ளது. ஆலைக்காரர்கள் நேரடியாக பேனா நிறுவனங்களிடமோ வணிகர்களிடமோ விற்க முடியாது. முதலாளிகள் வைத்ததுதான் விலை. அவர்கள் கொடுக்கும் வேலைகளுக்கேற்ப நிறுவனங்களின் முத்திரையையும் பேரையும் பொறித்து பேனாமுள் தயாரிக்கணும். இது சாத்தூரில் எழுதப்படாத சட்டம்.

தொழிலாளர்கள் தலைநிமிர்ந்து வாழவே விரும்புகிறார்கள். இதனால் தொழிற்சங்கங்கள்கூட அமைத்திருக்கிறார்கள். அவர்கள் வாடி வதங்கியபின் சிறிது கூலி உயர்வு கிடைக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஆலை உரிமையாளர்களே போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால் அவர்களால் அன்னிய மாநில முதலாளிகளைத் தட்டிக் கேட்க முடிவதில்லை. கூலி உயர்வை முன்வைத்தாவது தங்கள் பொருளுக்கு அதிகவிலை வாங்க முடியுமே.

நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாத ஆலை உரிமையாளர்களில் சிலர் பேனாமுள் செய்வதைக் குறைத்துக்கொண்டு அல்லது அறவே துறந்துவிட்டு நாக்கு வழிக்கும் தகடுகள், தூக்குவாளிக் காதுகள், கொண்டை ஊசிகள் என்று வேறு பொருள்களைச் செய்வதில் இறங்கிவிட்டார்கள். அந்தப் பொருள்களைக்கூட சொந்தத்தில் விற்றுப் பிழைக்க முடியவில்லை என்பது இன்னொரு சோகம். எத்தனையோ காரணங்கள், இடைஞ்சல்கள். மீண்டும் அன்னிய மாநில முதலாளிகளிடமே வந்து விழவேண்டிய நிலை. கொத்தடிமைத் தனத்தின் கொடுமைகளை வெளியில் சொல்லமுடியாத ஊமைகளாக அச்சம் படர்ந்த முகங்களுடன் அவர்கள் நடமாடுகிறார்கள்.

அவர்களது முள்களால் எத்தனையோ ஆணைகள், ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம். அறிக்கைகள் தயாராகலாம். முள்களைச் செய்யும் ஆலைகளுக்காகவும் ஒரு ஆணை பிறப்பிக்கக் கூடாதா. அவர்கள் ஏதேதோ கேட்கவில்லை. சுதந்திரமாகத் தொழில்செய்து வாழ வழிகேட்கிறார்கள். அவ்வளவுதான்.

நாடெங்கும் பேனா முள்கள் தேய்கின்றன. ஆனால் அவற்றைச் செய்யும் வாத்தியார்களுக்கோ விரல்கள் தேய்கின்றன. அவர்களின் எழுத்தைப் பற்றி அறிந்துகொள்ளாமல் எங்கெங்கோ ஆரவாரமாக எழுத்தறிவியக்கம் நடைபெறுகிறது.

# திக்குத் தெரியாத காட்டில்

நம்பத்தான் முடியவில்லை. கோடை மழையைப்போல் எல்லாம் தற்செயலாக நடந்துவிட்டது.

வாடிக் கருகாமல் மனசுக்குள் பூத்திருந்த 'கருவேலம் பூக்கள்' இவ்வளவு விரைவில் திரைப்படமாகுமென்று கனவிலும் நினைக்கவில்லை. ஆடிப்பட்டத்தில் ஓடி விதைத்து அமோக விளைச்சலை அறுவடை செய்துவிட்ட சந்தோசம்.

இந்தக் கதை நான் கரிசல் மண்ணில் வாழ்ந்த, என்னைச் சூழ்ந்திருந்த வாழ்க்கை. இளமைமுதல் இன்னும் கண்டு கண்கலங்கும் வாழ்க்கை. ஒரு பருவத்தில் கருவேல மொட்டுக்களாக கரிமருந்து ஆலைகளுக்குச் சென்றுகொண்டிருந்த குழந்தைகள் இன்று பூத்து விரிந்திருக்கின்றன. சில காய்த்து கழுத்தில் கயிறேறிய பெண்களாகியிருக்கின்றன. கந்தகச் சூழலில் அதே கமலைமாட்டுப் பயணம். அவர்களுக்குத் துணையாக புதிய மொட்டுக்கள் அரும்பியிருக்கின்றன. ஆக குழந்தை உழைப்பு தலைமுறை தாண்டியிருக்கிறது. அவ்வளவுதான்.

குழந்தை உழைப்பு எங்குதான் இல்லை. எங்கெங்கு காணினும் பிஞ்சுக் கரங்களின் உழைப்பு முத்திரைகள். ஆமாம் குழந்தை உழைப்பு காலங்காலமாகத் தொடரும் சமூக அவலம். அந்த அவலத்தை சின்னஞ்சிறு விரல்கள் வாழ்க்கையின் சகல தளங்களிலும் சதா இசைத்துக்கொண்டிருக்கின்றன.

கூடிழந்த குருவிகளாக நாடுநகரெங்கும் பொருள் தேடியலையும் சிறிசுகளின் நெஞ்சில் வானளவு கற்பனைகள். கடலளவு சோகங்கள்.

*அதில் ஊற்றெடுக்கும் விளையாட்டும் வேடிக்கையும் கிண்டலும் கேளிக்கையும் வேதனையில் கருகிப் போய்விட்டன. கல்வி என்பது வெறும் கற்பனையாய் கனவாய்ப் போனது. வறுமையின் கொடுமையால் இளமையில் சிலுவை ஏந்திய குழந்தை ஏசுக்களின் நாடிநரம்பெல்லாம் உழைப்பு உழைப்பு. இன்று பாரதி இருந்திருந்தால் இப்படித்தான் பாடியிருப்பான்.*

ஓடி உழைக்கணும் பாப்பா - ஓய்ந்து
உட்காரக் கூடாது பாப்பா
கூடி உழைக்கணும் பாப்பா - நல்ல
கூலி கிடைக்கணும் பாப்பா.

சிட்டுக் குருவியைப் போலே - நீ
சுற்றித் திரியணும் மேலே - சின்னப்
பட்டு விரல்களி னாலே - நீ
கொத்திப் பொறுக்கணும் கீழே

காலை எழுந்ததும் வேலை - நீ
கஞ்சி குடித்ததும் ஆலை - தினம்
மாலையி லுமங்கே வேலை - இதை
மனசில் கொள்ளணும் ஏழை.

வண்டி இழுக்கிற மாடு - அது
முண்டி நடந்துதள் ளாடும் - மிக
நொண்டியா னதுமே வாடும் - அது
நோயிலே சந்தையைத் தேடும்..

*குழந்தை உழைப்பின் கிளைகள்தான் கொஞ்சமா. பென்சில் குச்சு பிடிக்கவேண்டிய விரல்கள் தீக்குச்சுகளைப் பிடித்து தினமும் தேய்கின்றன. கொண்டாங்களுக்காகச் சரவெடிகள் செய்யும் குழந்தைச் சரங்கள் எத்தனை யெத்தனை. அந்த இளம் நெஞ்சங்களின் ஏக்கங்கள் பண்டிகைகளின்போது பட்டாசுகளை வெடிக்கின்றன. எண்ணங்கள் வாணங்களாக வானத்தில் கோலமிட்டு மறைகின்றன. அந்த அகல்விளக்குகளின் வாழ்க்கை ஒளிமயமாக இல்லை.*

*மழையிலும் வெயிலிரும் வனவாசம் செய்யும் இளைய ராமர்களுக்கும் சீதைகளுக்கும் பஞ்சமில்லை. அவர்கள்*

மலங்காடுகளில் விறகுகளாகக் காய்ந்து விறகு சேகரித்து விற்கிறார்கள். மரமேறித் தேனெடுக்கும் சிறுவர்களின் கைகள் உரமேறினாலும் பிழைப்பென்னமோ வழுக்குமரமாகவே இருக்கிறது. இனிப்புக்குள் புழங்குகிறவர்களுக்கு மிஞ்சுவது கசப்புதான்.

பள்ளியில் பாடம் படிக்கவேண்டிய பையன்கள் ஆலைகளில் தோல்களைப் பாடம் செய்கிறார்கள். அவர்களது தோல்களை நோய்கள் பதம்பார்க்கின்றன.

சிற்றுளிகளின் கல்லுடைப்புத்தாளம் எத்தனையோ மலைகளில் எதிரொலிக்கிறது. பல 'ஜல்லிகள்' குடும்பக்கட்டுமானத்தின் ஓட்டைகளை அடைக்கப் பயன்படுகின்றன.

சாயச் சாலைகளிலும் நெசவுக் கூடங்களிலும் நனைந்து நைந்து போன பாவுகளும் இற்றுப்போன இழைகளும் ஏராளம்.

வறுமைப் பட்டறையில் ஓயாது அடிபடும் சிறுவர்களின் சோகலயம் எங்கெங்கோ கேட்கிறது. கருவறைகளிலும் கல்விக்கூடங்களிலும் அந்தக் கைகளின் உலோக வார்ப்புகள் கண்ணீரிடுகின்றன.

பெரியவர்களின் வாயில் பீடி நெருப்பு புகைந்தால்தான் சிறியவர்களின் வீட்டில் அடுப்பு புகையும். சின்னக் கைகளின் சுறுசுறுப்பில் கன்னம் குதப்பும் புகையிலையின் விறுவிறுப்பு.

உணவு விடுதிகளின் மிச்சங்களை உண்டு கனவுகளுடன் வாழும் கன்றுகளுக்குக் குறைவில்லை. எச்சில் இலைகளுடன் இவர்களுக்கு இணைபிரியாத உறவு.

இப்படி பல்வேறு தொழில்களில் அல்லாடித் தவிக்கும் ஆயிரமாயிரம் எந்திரக் குஞ்சுகளின் வாழ்க்கைப் போராட்டத்திற்கு முடிவே இல்லையா. அதற்கு யார் தான் முற்றுப்புள்ளி வைக்கப் போகிறார்கள்.

சில தொழில்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்றன. சுகாதாரக் கேட்டை விளைவிக்கின்றன. விபத்துக்களால் கொத்துக் கொத்தாக உயிர்களைப் பலிவாங்குகின்றன. எதிர்விளைவுகள், இழப்புக்கள் எதுவாயினும் இந்தத் தொழில்களை நம்பி எராளமான குடும்பங்கள் இருப்பதென்னமோ உண்மை. பட்ட கடனைத் தீர்க்கவும் கவர்ச்சியான சம்பளத்திற்கும் குழந்தைகள் மீண்டும் மீண்டும்ஆலை வாய்க்குள் விழும் சோகந்தான் தொடர்கிறது.

கூடவே பரிகார முயற்சிகளும் தொடர்கின்றன. நீதியும் நிருவாகமும் அவ்வப்போது சட்டங்களை இயற்றுகின்றன. திட்டங்களை வகுக்கின்றன. கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. கல்விக் கூடங்களைத் திறக்கின்றன. ஆனாலும் தவிர்க்கமுடியாதபடி நிலைமை எல்லாவற்றையும் மீறி நிற்பதுதான் சகப்பான எதார்த்தம். தலையாய பிரச்சனை தீர்க்கப்படும்வரை இந்தச் சோகமும் துயரமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

கரிசல் பூமி குழந்தை உழைப்புக்குத் தாயகம் என்றே சொல்லணும். அதற்குக் காலம் தந்த கரிமருந்துச் சீதனம் ரெண்டு. ஒண்ணு தீப்பெட்டித் தொழில் மற்றது பட்டாசுத் தொழில். நிலம் வெடிக்கும் கோடையிலும் தூரத்திற்கு வேரனுப்பி நீரெடுத்து வளரும் கள்ளிப் புதைகளைப்போல் இந்த ஆலைகள் வளங்கொழிக்கின்றன. ஆமாம் வானத்தின் வறட்சியில்தான் இவற்றின் வளர்ச்சி. அதாவது மழை இவற்றுக்கு எதிரி.

இவற்றின் சாம்ராஜ்யம் பரந்து விரிந்தது. பல தொழில் நகரங்களில் இவை ஆயிரக்கணக்கில் மையங்கொண்டு ஆதிக்கம் செலுத்து கின்றன. இப்போதெல்லாம் தீப்பெட்டியாலைகள் இல்லாத பெரிய கிராமங்களே இல்லையென்று சொல்லலாம்.

மேகத்தின் திரட்சிக்காக தாகத்தில் ஏங்கும் மானாவாரி மனிதர்களுக்கோ பாவப்பட்ட பிழைப்பு. பருவமழை தப்பினால் கருகிவிடும் பயிர்கள். வருசமெல்லாம் கட்டுபடியாகாத விவசாயம். வானத்தை முட்டிவிட்ட விலைவாசி. களையெடுக்கவும் கருதறுக்கவும் தேவையற்ற இளங்கைகள் ஆலைகளை நோக்கி எறும்புச் சாரியாகப் படையெடுக்கின்றன. தொழிற்சந்தையில் அவர்களது உழைப்பு மலிவான பொருளாகிவிட்டது.

நாள்முழுக்க பொழுதுக்குக் கீழே கால்பொசுக்க நிலத்தில் உழைத்துப் பெறும் கூலியைவிட நிழலிலிருந்துகொண்டே பெறும் கூலி கணிசமாக இருக்கிறது. இதனால் ஆலையில் உழைக்கிறவர் களிடையே ஒரு நெடியான சந்தோசம் நிலவுகிறது. சுற்றுச் சூழலைப் பற்றி, சுகாதாரத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

பெண்களும் குழந்தைகளுமாக பெரும்பாலும் கிராமங் களிலிருந்தே நகர ஆலைகளுக்கு வருகிறார்கள். குழந்தைகளே அதிகம். சட்டப்படி பதினாலு வயதுக்குட்பட்ட குழந்தைகள் வேலை செய்யக்கூடாது. அதனாலென்ன இருக்கவே இருக்கிறார்கள் மருத்துவர்கள். அவர்கள் கொடுக்கும் சான்றுகளால் குழந்தைகளுக்கு

வயது கூடிவிடுகிறது. அரைக்கால்சட்டை வேட்டியாகவும் மாறுகிறது. சிறுமிகள் தாவணிக் கோலத்தில் பெரிய மனுசிகளாகிறனர்.

பல ஆலைகளை மேலோட்டமாகப் பார்வையிட்டால் குழந்தைகளைக் காணமுடியாது. ஆனால் உள்ளே சென்று உற்றுக் கவனித்தால் தனியறைகளில் அயிரைமீன்களைப்போல் அவர்கள் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டிருப்பது தெரியும். அரசு அதிகாரிகள் அவ்வப்போது ஆலைகளைப் பார்வையிடுகிறார்கள். ஆலைகளுக்கு அவர்கள் முக்கியமான வாய்மொழியாணை பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது அவர்கள் வரும் சமயத்தில் ஆலைக்குள் குழந்தைகள் இருக்கக் கூடாது. அவர்கள் வருவதை உளவாளி கண்காணித்து தகவல் கொடுப்பான். உடனே குழந்தைகள் புறவாசல் வழியாகத் தப்பித்து தலைமறைவாகிவிடுவார்கள். பருந்து போனதும் குஞ்சுகள் மீண்டும் மேய்ச்சலுக்கு வந்துவிடும். சில அதிகரிகள் அந்தச் சிரமம் கூடக் கொடுப்பதில்லை. அவர்கள் வரப்போகும் நாளையும் நேரத்தையும் முன்கூட்டியே சொல்லியனுப்பிவிடுவார்கள்.

இந்த மன்னர்களுக்கு சிற்றரசர்களிடமிருந்து தவறாமல் கப்பம் வந்துவிடுகிறது. கப்பம் கட்டாதவர்கள் மீது அதிரடியாகப் படையெடுக்கிறார்கள். குழந்தைகளைப் பிடித்துப் பணயம் வைத்து பேரம் பேசுகிறார்கள். உடனே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. பிறகு நிருவாகம் சீராக நடப்பதற்குச் சொல்லணுமா. மருந்துக்கு அங்கொண்ணும் இங்கொண்ணுமாக ரெம்பவும் சிறுபான்மை அதிகாரிகள் சட்டம் நீதிமன்றம் என்று மல்லுக்கட்டிக் கொண்டிருப்பார்கள்: மற்றப்படி எங்கும் பெரும்பான்மையின் ஆதிக்கந்தான்.

குழந்தைகள் முதல் எல்லா தொழிலாளர்களுக்கும் கணிசமான முன்பணம் கொடுக்கப்படுகிறது. ரெம்பநாள் உழைத்தாலொழிய முன்பணத்தை எளிதில் திருப்பித்தரமுடியாது. கஷ்டமான சமயங்களில் இந்த 'அடகுக் கணக்கில்' மேலும் பணம் வாங்கிக் கொள்ளலாம். மழைக்காலத்தில் வேலைகள் சுணங்கும் போது அரிசி பருப்பிலிருந்து துணிமணிவரை சகலமும் கொடுத்து முதலாளிகள் கவனித்துக்கொள்கிறார்கள். தொழிலாளர்களின் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு முதலாளிகள் சென்று தாய்மாமனுக்குச் சமமாக மரியாதை செய்கிறார்கள். கிராமங்களில் நடக்கும் விழாக்களில் தங்கள் செலவில் திரைப்படம் காட்டுகிறார்கள். இதனால் இரு சாராருக்குமிடையே சுமுகமான உறவு நிலவுகிறது.

ஒரு கிராமத்துச் சிறுமிக்கு ஆயுத பூஜையன்று அவலும் பொரியும் கிடைக்கிறது. பொங்கலன்று கரும்பு கிடைக்கிறது. தீபாவளிக்கு கைநிறைய போனஸ் கிடைக்கிறது. எவர்சில்வர் பாத்திரங்கள் கிடைக்கின்றன. இந்த வயசில் அவளுக்கு இவ்வளவும் கிராமத்தில் யார் தருகிறார்கள். எல்லாவற்யையும்விட அவளுக்கு நகரத்தின் நாகரீகம் சீதனமாகக் கிடைக்கிறது. அவளால் வேலை செய்துகொண்டே தன்னை மறந்து திரைப்படப் பாடல்களைக் கேட்டு ரசிக்கமுடிகிறது. அருகில் ஒட்டிவைத்துப் பாதுகாக்கும் தனது பிரியமான நடிகருடன் மானசீகமாகப் பேசமுடிகிறது.

அதிகாலையில் ஆலைகளின் பஸ்கள் பட்டிதொட்டியெங்கும் புகுந்து குஞ்சு குறுமான்களையெல்லாம் அள்ளிவந்து ஆலைகளுக்குள் குமித்துவிடுகின்றன. நாளொண்ணுக்கு சராசரியாக பனிரெண்டு மணிநேரத்துக்கும் மேலாக வேலை நடக்கிறது. வேலை முடிந்ததும் அவர்களை பஸ்கள் கிராமங்களுக்குக் கொண்டுபோய்க் கொட்டிவிடுகின்றன. வாரத்திற்கு ஆறுநாள் அவர்கள் சூரிய ஒளியின் நடமாட்டமில்லாத துருவப் பிரதேசத்தில் வாழும் நிலை.

கிராமங்கள் தொழில்மயமாகும் கட்டத்தில் பண்டமாற்றுமுறை ஒழிந்து பணப்புழக்கம் அதிகரித்துள்ளது. சமூக கலாச்சார மதிப்பீடுகள் பெரிதும் மாறிவிட்டன. விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தி சுருங்கிவிட்டது. மக்களுக்கு விவசாய வேலைகளில் அவ்வளவாக நாட்டமில்லை. அப்படியே இருந்தாலும் பணப்பயிர்களில்தான் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். இப்போதெல்லாம் அவர்களுக்கு அரிசிதான் அன்றாட உணவு. ஒரு காலத்தில் அதிக அளவில் அவர்களது உணவாக இருந்த சில தானியங்கள் புராதனப் பொருட்களாகிவிட்டன. இதனால் அவர்களது உடல் வலுவிழந்து உழைக்கும் சக்தி குறைந்துவிட்டது. நோய்கள் அவர்களை எளிதில் பீடிக்கின்றன.

ஆலையில் உழைக்கும் பெண்கள் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்கள் அல்லது கொஞ்சம் படித்து இடையில் நின்றுவிட்டவர்கள். இதனால் படித்த மாப்பிள்ளைகள் இவர்களை நாடி வருவதில்லை. இவர்கள் நிழலிலேயே இருந்து பழகிவிட்டதால் விவசாய வேலைகளுக்கும் லாயக்கில்லாதவர்களாகிவிட்டார்கள். எனவே கல்யாணமானாலும் ஆலைகளுக்கே செல்லவேண்டிய நிலை. இப்படி ரெண்டுங்கெட்டான் வர்க்கமாக உருவாகி விட்டார்கள். கல்யாணச் சந்தையில் இவர்களுக்கு மவுசு கொஞ்சம் கம்மிதான்.

ஆலைகளிலன்றி வீடுகளிலும் வேலைகள் குடிசைத் தொழிலாக நடக்கின்றன. பெண்களால் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு இவற்றில் வருமானமும் ஈட்ட முடிகிறது. பள்ளிசெல்லும் சில குழந்தைகள் ஓய்வு நேரங்களில் இந்த வேலைகளைச் செய்கிறார்கள். சிலசமயம் வேலைகள் இடைத்தரகர்களின் வாயிலாகவும் கிராமங்களில் ஒப்படைக்கப்படுகின்றன.

கிராமப் பள்ளிக்கூடங்கள் களையிழந்து சோகமாகக் காட்சியளிக்கின்றன. குழந்தைகள் குறைந்துவிட்டதால் ஆசிரியர் முகட்டுவளையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். பள்ளிக்கு சுரத்தில்லாமல் வந்துபோகிறார்.

நாட்டில் விழாக்களுக்கா பஞ்சம். விழாக்காலங்களில் பட்டாசு வெடிக்கும். குழந்தைகளின் கும்மாளத்தில் பெற்றவர்களின் சிரிப்பும் வெடிக்கும். ஆனால் விழாக்களுக்கு முன்பே விபத்துக்களில் குழந்தைகள் வெடிக்கும். கூடவே அவர்களைப் பெற்றவர்களின் ஓலமும் வெடிக்கும். நிர்வாணக் கரித்துண்டுகளுக்கு நிவாரணங் களுடன் அனைத்தும் அடங்கும் அடுத்த விழாவரை.

அன்று உலகப் போரில் அணுகுண்டு வெடித்தது. இன்று குழந்தைகளின் வாழ்க்கைப் போரிலும் அணுகுண்டுதான் வெடிக்கிறது. தூக்கணாங்குருவி சிறுகச் சிறுகக் கூடுகட்டுவதைப் போல் சின்னவிரல்கள் படிப்படியாக தீப்பெட்டிகளைக் கட்டுகின்றன. தீப்பெட்டிகளோ திக்கெங்கும் போய் அந்த விரல்களின் அயராத உழைப்பை நாள்தோறும் உரசிக்காட்டுகின்றன.

கண்ணுக்கு முன்னால் நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த அவலச் சரித்திரத்தை எழுத்து வடிவிலாவது நாலுபேருக்குச் சொல்லிவிடணு மென்ற தார்மீகப் பொறுப்பு என்னுள் உறுத்திக்கொண்டே இருந்தது. ஒரே சமயத்தில் இருதொழில்களைப் பற்றியும் எழுதமுடியாது. எனவே முதலில் தீப்பெட்டித் தொழிலை ஒரு நாவலாக எழுதணுமென்று மனசு ஆசைப்பட்டது. ஆனால் ஏற்கெனவே ஒரு பெரிய நாவல் முயற்சியை நீண்டகாலப் பணியாக எடுத்துக்கொண்டு விட்டதால் அடுத்த முயற்சியாகத்தான் இதைச் செய்யமுடியும்.

அந்தச் சமயத்தில்தான் எழுத்தாளன் என்ற கோதாவிலிருந்து சின்னத்திரையில் இயக்குநராக அடியெடுத்து வைத்திருந்தேன். இந்தக் கதையை தொலைக்காட்சித் தொடராக உருவாக்கினால் வாழ்க்கையை நிதானமாக இயல்பாகச் சொல்லலாமே என்று தோணியது. ஆனால் தொலைக்காட்சிச் சூழலின் ஒருவித நெடி

மனசைக் குமட்ட ஆரம்பித்ததால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன். ஆனால் என்னுள் பொங்கிக் கொண்டிருந்த ஆர்வம் மட்டும் வடியவில்லை.

வேறு வழியென்ன. திரைப்படமாக்கலாம். நல்ல யோசனைதான். மக்களை வெகுவாகப் பாதித்திருக்கும் இந்த ஊடகத்தில் இந்தக் கதையைச் சொன்னால் அதனால் ஒரு உரத்த சிந்தனையைக் கிளறமுடியும். அது உண்மைதான். ஆனால் தறிகெட்டுப் போய்க்கொண்டிருக்கும் தமிழ்த் திரைப்படச் சூழலில் இக்கதையை யாராவது சீந்தணுமே. அப்படியே சீந்தினாலும் முழுச்சுதந்திரத்துடன் தைரியமாகக் கருத்துக்களைச் சொல்லி எதார்த்தமாகப் படமெடுக்க அனுமதிக்கணுமே.

நான் சின்னவயசில் உறக்கங்கெட்டு அடிக்கடி திரைப்படம் பார்ப்பதுண்டு. ஒரு கட்டத்தில் அந்தப் பழக்கத்தை அடியோடு நிறுத்திவிட்டேன். பிறகு பிறகு அந்த விரதத்தை முறித்துக்கொண்டு எப்போதாவது தமிழ்ப்படங்களுக்குப் போவேன். அதுவும் யாராவது சிலாகித்துச் சொல்லியிருப்பார்கள். அவ்வப்போது நல்ல அயல்மொழிப் பாடங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைப்பதுண்டு. சத்யஜித்ரே, மிருணாள் சென், வாசுதேவன் நாயர், கிரீஷ் கர்னாடு, காரந்த், பெனகல் இப்படி வித்தியாசமான வர்களுடைய படங்கள். 'பதேர் பாஞ்சாலி'யில் முணுமுணுக்கென்று கோவித்துக்கொண்டு பெட்டிசட்டியுடன் கிளம்பிவிடும் கிழவி, 'தீக்ஷா' வில் ''பிராமணாள் பிராமணாள்'' என்று சனாதனங்களைச் சாடும் அடிமைத் தொழிலாளி, 'வைசாலி' யில் சனத்திரளுக்கு நடுவே சிக்கித் தவித்து நசுங்கும் தாயும் மகளும் என்று பலர் மனசைப் பிறாண்டுவதுண்டு. 'நிர்மால்யம்' படத்தில் சாமி கொண்டாடி தெய்வத்தின் மூஞ்சியில் காறித்துப்பிய எச்சில் இன்னும் மனசுக்குள் வடிந்து கொண்டிருக்கிறது.

தமிழில் இந்தமாதிரிப் படங்கள் வந்தால் நன்றாக இருக்குமே, வாய்ப்பும் வசதியும் படைத்த எந்த மகராசனாவது இப்படியொரு முயற்சியைத் தொடங்கி வைத்தால் கலாச்சாரச் சீரழிவு என்ற பெரும் வெள்ளச் சேதத்தைத் தடுக்கும் பணியில் ஒரு மணல் மூடையைத் தூக்கிப்போட்ட புண்ணியமாவது கிடைக்குமே என்று ஆதங்கமாக இருக்கும். யார் மீதெல்லாமோ கோவம் வரும்.

மழைவராமலா போகும் என்ற நம்பிக்கையில் வானத்தை அண்ணாந்து பார்க்கும் கரிசக்காட்டு விவசாயி விதைவித்துக்களைத் தயார்ப்பண்ணி வைப்பதுபோல் நாமும் அனுபவங்களைத் தொகுத்து ஒரு கதையாக எழுதி வைக்கலாமே என்று தோணியது. எழுத

ஆரம்பித்தபோது கவிதைமாதிரி வரிகள் வந்தன. அந்தப் போக்கில் இப்படி எழுதியும் பார்த்தேன்.

திக்கெங்கும் முளைத்த
தீப்பெட்டி யாலைகள்
கக்கும் நெடிமூச்சில்
சிக்கித் தினம் கருகும்
கருவேலம் பூக்கள்
சருகாகும் கதையிது.

களிப்புத் தெம்மாங்கில்
கரிசல் நிலமெங்கும்
உழைப்புத் தடம்பதித்து
பிழைக்கும் பெண்குயில்கள்
ஆலைக் கூடுதேடி
அலையும் சோகமிது.

தொழில்மயம் ஏவும்
மாரீச மானாக
எழில்மய கிராமத்தில்
நாகரீகம் தாவும்
மாய ஓட்டத்தில்
மனசு பறிகொடுக்கும்
குழந்தைச் சீதைகள்
கூடவே போகும்
ஏதோ இழப்பில்
ஏங்கும் தாய்க்கோ
காய நெஞ்சம்
கவலையில் வேகும்.

கட்டிக் காத்த
கட்டுக் கோப்பும்
கலாச்சார மதிப்பும்
வெட்டிச் சாய
வேதனை படரும்
சோதனை தொடரும்.

பணத்தின் புழக்கத்தில்
மனத்தின் புழுக்கம்
போதைகள் ஏறி
பாதைகள் மாறும்
மோதலை வளர்த்து
சாதலில் முடியும்.

அரங்கேறி முடிந்து
அடுத்தநாள் விடியும்போது
பொழுதேறும் வானத்தின்
விழுதுகளை வெறித்தபடி
கரையேறக் காத்திருக்கும்
கருவேல மொட்டுக்கள்.

அப்புறம் நிகழ்ச்சிகளாகத் தொகுத்து கதையை எழுதினேன். பருவட்டாக ஒரு வடிவம் கிடைத்தது. நீருக்குள் மீன்களைப் போல் மங்கலாக நீந்தித்திரியும் மனுசர்களை வெளியே கொண்டுவந்து பெயர்வைத்து நடமாடவிட்டேன். அவர்கள் என்னென்ன பேசிக் கொள்வார்கள் எப்படியெப்படி நடந்துகொள்வார்கள் என்ற சிந்தனை மனசை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது.

கதை மனசுக்குள் காட்சிகளாக விரிந்தது. அதில் வருகிறவர்கள் பரிச்சயப்பட்டவர்களாக இருந்ததால் அவர்களை உருவாக்குவதில் அவ்வளவு சிரமம் இருக்காது என்று தோணியது. காட்சிகளைக் கோர்வையாக அமைத்து உரையாடல்களைப் பொருத்தமாக எழுதணும். அது பெரிய வேலைதான்.

எங்கிருந்தாவது ஒரு நம்பிக்கை ஒளி கிடைத்தால் எல்லா வேலைகளையும் சுதாரிப்பாக ஒரே மூச்சில் முடித்துவிடலாம். எங்கும் இருட்டுதான் மண்டியிருந்தது. ஒரு வழி திறக்காமலா போய்விடும். நம்பிக்கை தளர்ந்துவிடவில்லை.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் நினைவு வந்தது. அதன் நிதியுதவியுடன் இதரமொழிகளில் தயாரிக்கப்பட்ட தரமான படங்களை நான் பார்த்து மனங்கிளர்ந்ததுண்டு. ஆனால் அதற்கும் தமிழ்த்திரைப் படத்திற்கும் தூரம் என்ற பொதுவான கருத்து இருந்தது. அதற்கு என்னென்னமோ காரணம் சொல்லப்பட்டது.

ஏதொண்ணுக்கும் அக்கழகத்தை அணுகலாமே என்று ஒரு நினைப்பு. அதன் அதிகாரி பரமேஸ்வரன் நேர்மையானவர் என்று கேள்விப்பட்டேன். முதல்முறையாக அவரைச் சந்தித்தேன்.அதிகாரி என்ற தோரணையைத் தாண்டி ஒரு இயல்பான, எளிமையான, கலாரசனைமிக்க விமர்சகரை, இலக்கியவாதியை, மனிதரைப் பார்க்கமுடிந்தது. பம்மாத்தில்லலாமல் வெளிப்படையாக இருந்தார். உலக இலக்கியங்களைப் பற்றியும் தரமான திரைப்படங்களைப் பற்றியும் பேசினார். தமிழில் நல்ல படங்கள் வெளிவராத ஆதங்கத்தை வெளியிட்டார்.

அதிகாரவர்க்கத்தில் இப்படியும் ஒரு மனுசனா என்று எனக்கு ஆச்சரியம். என்னையறியாமல் மனசில் ஒரு நம்பிக்கை துளிர்த்தது. சோர்வு குறைந்தது.

அவரிடம் ‘கருவேலம் பூக்கள்’ கதையைக் கொடுத்தேன். படித்துவிட்டுப் பாராட்டினார். நல்ல படமாக்கலாம் என்று நம்பிக்கை கொடுத்தார். என் மனப்பாரத்தை அவர் பகிர்ந்துகொண்டதில் சற்றுத் தெம்பாக இருந்தது.

அடுத்தடுத்த சந்திப்புக்களில் மனம்விட்டு விவாதித்து ‘நான்’ என்ற தன்முனைப்பின்றி ஒரு பொது அக்கறையுடன் படமாக்கவேண்டிய கதையைச் செதுக்கினோம். எங்களிடையே பல கருத்துக்களில் உடன்பாடு இருந்தது. வாழ்க்கைப் பிரச்சனைகளை கலைவடிவத்தில் கொடுக்கும்போது அப்பட்டமான பிரச்சாரமாக்கிவிடக்கூடாது. அவற்றை அனுபவங்களுடன் குழைத்து இயல்பான உணர்வுகளாகச் சித்தரிக்கணும். கலைஞன் என்பவன் இந்தப் பிரச்சனைக்கு இதுதான் தீர்வு என்று கூட்டிக்கழித்து கணக்குப் போட்டு விடை சொல்லக்கூடாது. கலைஞன் போதகனல்ல. பார்வையாளனின் சிந்தனைச் சுதந்திரத்தை மதிக்கணும். திரைப்படம் பரவலாக முறையான வழியில் மக்களைச் சென்றடையணும். இப்படி பல கருத்துக்கள்.

ஒரு நல்ல விஷயத்தைப் படமாக வெளிக்கொணர முழுமூச்சுடன் முயற்சிக்கலாம் என்றும் நிதியுதவி கிடைப்பதற்கு எவ்வித உத்திரவாதமும் தரமுடியாது என்றும் அவர் வெளிப்படையாகச் சொல்லிவிட்டு கதைக்கு திரைக்கதை உரையாடல் எழுதித்தருமாறு கூறினார். எனக்கு இந்த அணுகுமுறை ரெம்பப் பிடித்திருந்தது. முயன்று பார்ப்பதும் ஒரு கடமைதான் என்று அவரது வார்த்தைகள் எனக்கு உணர்த்தின.

கரிசல் சீமைக்குப்போய் அந்தக் களத்தை ஊறுகாயாகத் தொட்டுக் கொண்டால்தான் காட்சிகளை நன்றாக அமைக்கமுடியும் என்று நினைத்தேன். முன்னூறு மைல் தாண்டிப் போகணுமென்றால் அதுக்குப் பணம் வேணுமே. அவ்வளவு தொகையை கைமாத்தாகப் புரட்டவும் முடியாது. எப்போதும் போல் என்னைக் கைவிட்டுவிட மாட்டாள் என்ற நம்பிக்கையில் என் மனைவியிடம் போய் தலையைச் சொறிந்தேன். அவள் முணுமுணுத்துக்கொண்டே நகையைக் கொடுத்தாள். அதை 6900 ரூபாய்க்கு அடகுவைத்தேன். உடனே ஒரு உதவியாளருடன் தெக்கத்திச் சீமைக்குக் கிளம்பினேன்.

கோயில்பட்டியில் தங்கி இரவுபகலாக உட்கார்ந்தோம். விவாதித்து விவாதித்து காட்சிகளை வடிவமைத்தோம். நான் சொல்லச் சொல்ல உதவியாளர் எழுதினார். ஒரு வாரத்தில் 118 காட்சிகள் முடிந்துவிட்டன. அந்தச் சூட்டோடு திரும்பிவிட்டோம்.

சென்னைக்கு வந்து பரமேஸ்வரனிடம் ஒவ்வொரு காட்சியாக நான் வாசிக்க அவர் கேட்க சில இரவுகள் விவாதித்து காட்சிகளைச் செப்பனிட்டோம். ஒரு அதிகாரிக்கு ஏன் இவ்வளவு அக்கறையும் ஆர்வமும் என்று சில சமயம் எனக்குள்ளேயே கேட்டுக்கொள்வதுண்டு. அப்புறம்தான் கண்டுகொள்ளமுடிந்தது அவருக்குள்ளும் ஒரு நல்ல கலைஞன் ஒளிந்திருப்பதை.

சமூகப் பிரச்சனைகளை கலைநேர்த்தியுடன் சித்தரிக்கும் திரைப்படங்களை திரைப்பட விழாக்களில் காட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் பரவலாக மக்களிடம் எடுத்துச் செல்வதே அவற்றை உருவாக்குவதன் முக்கிய நோக்கம் என்ற கருத்தினடிப்படையில் 'கருவேலம் பூக்கள்' படத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகளைப்பற்றி விரிவாகச் சிந்தித்தோம். நானோ இத்துறைக்குப் புதுசு. எனவே படத்தில் அனுபவமிக்க கலைஞர்களைப் பயன்படுத்துவது நல்லது,அப்போதுதான் படத்தை முழுசாக முடித்துக் கரைசேர்க்க முடியுமென்ற நம்பிக்கை அனைத்துத் தரப்பினரிடையிலும் ஏற்படும். படப்பிடிப்பில் காலவிரயத்தைத் தவிர்க்கலாம். பணச்செலவைக் கட்டுப் படுத்தலாம். உலகுக்கே பொதுவான பிரச்சனையை திரைவடிவில் கொண்டுவரும்போது நடிப்பில் பண்பட்ட கலைஞர்களால் வாழ்வியல்புகளை அனாயசமாகவும் எதார்த்தமாகவும் வெளிப்படுத்தமுடியும். படம் முழுக்க ஒரு செய்நேர்த்தியும் தரமும் கைகூடும். சர்வதேச அளவில் ஒரு படத்தை எடுத்துச் செல்லும்போது அது பரிகசிக்கப்படும் பொருளாகிவிடக்கூடாது. மாறாக பாராட்டுகளும் பரிசுகளும் கிடைக்கணும்.

இப்படி பல சிந்தனைகளின் விளைவாக இப்படத்தில் முக்கிய பாத்திரங்களில் நாசரும் ராதிகாவும் நடித்தால் சிறப்பாக இருக்குமென்று முடிவெடுத்தோம். அதேபோல் இசைக்கு இளையராஜாவும் படத்தொகுப்புக்கு லெனினும் இருந்தால் படத்தின் தரம் உயரும் எனக் கருதினோம். ஒளிப்பதிவுக்கு தங்கர்பச்சானால் நல்ல பங்களிப்பைத் தரமுடியுமென்று கருத்துத் தெரிவித்தேன். அப்படியே முடிவுசெய்யப்பட்டது.

நாசர் எனக்கு ஏற்கெனவே பரிச்சயமான இலக்கிய நண்பர். என் கதைகளைப் படித்தவர். நல்ல திரைப்படங்கள்மீது ரெம்ப அக்கறை கொண்டவர். எனவே அவரது இசைவைப் பெறுவதில் சிரமமிருக்க வில்லை.

ராதிகா பண்பட்ட நடிகை. குடும்பப் பாங்கான படங்களில் மிகச் சிறப்பாக நடித்துப் பேரெடுத்தவர். 'கருவேலம்பூக்கள்' படத்தில் ஒரு பொறுப்புள்ள தாய்தான் பிரதானப் பாத்திரம். சோகங்களைச் சுமந்துகொண்டு நடிப்பதற்கு அவர்தான் பொருத்தமானவர். அவரை முதல் முறையாகச் சந்தித்து கதையைக் கொடுத்தேன். உடனே படித்துவிட்டு உற்சாகத்துடன் ஒத்துக்கொண்டார். ஊதிய விஷயத்தில் ரெம்ப நியாயமாக நடந்துகொண்டார்.

ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சானை எனக்கு முன்னப்பின்னத் தெரியாது. பார்த்துப் பேசியதுமில்லை. அவரும் ஒரு எழுத்தாளர் என்ற முறையில் என் உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை நன்கு புரிந்துசெயல்பட முடியுமென்று தோணியது. இப்படத்திற்கு அவர் பணியாற்றணுமென்று தொலைபேசியில் கேட்டுக்கொண்டேன். ரெம்ப ஆர்வத்துடன் வந்து ஒப்புதல் தெரிவித்தார். நல்ல படங்களுக்காக உழைக்கணுமென்ற அவரது தாகத்தைப் பார்த்தபோது அவருடன் இணைந்து ஒரு தரமான படத்தைக் கொடுத்துவிட முடியுமென்ற நம்பிக்கை என்னுள் வலுத்தது.

படத்தொகுப்பாளர் லெனினையும் முதல்முறையாகச் சந்தித்தேன். திரையுலகில் அவருக்கென்று தனியிடம் உண்டு என்பதை அறிவேன். அவர் ரெம்பவும் இயல்பான மனுசனாக இருந்தார். இம்மாதிரிப் படங்களுக்குப் பணியாற்றுவது தன் கடமை என்று சொல்லி சந்தோசமாக ஒத்துக்கொண்டார்.

அவரே என்னை இளையராஜாவிடம் அழைத்துச் சென்றார். அவரும் அன்புடன் ஒத்துக்கொண்டார். அவரிடம் கதைச் சுருக்கத்தைக் கொடுத்தேன். சிலநாள் கழித்து கதைபற்றி

*ஆரோக்கியமாக விவாதித்தார். பிற பாத்திரங்களில் நடிப்பதற்காக சார்லி, பாலாசிங், தலைவாசல் விஜய் ஆகிய நண்பர்களை அணுகினேன். அவர்கள் தடையின்றி இசைந்தார்கள்.*

*ஒருவழியாக எதிர்பார்த்தபடி எல்லாம் கைகூடிவிட்ட தெம்பில் நிம்மதிப் பெருச்சுவிட்டேன். சாதாரண மக்கள் அணியும் எளிய உடைகளையே பயன்படுத்தியும் அரிதாரப் பூச்சு அது இது என்ற ஒப்பனையில்லாமலும் அரங்க அமைப்பில்லாமல் எற்கெனவே உள்ள களப்பின்னணியிலும் இப்படத்தை எடுத்து முடிக்கத் திட்டமிட்டேன். படம் எதார்த்தமாக இருக்கணுமென்றால் உள்ளூர் மனிதர்களையும் ஈடுபடுத்துவது பொருத்தமாக இருக்குமென்று தோணியது. எனக்குப் பக்கபலமாக ஏற்கெனவே திரைப்படத் தொழிலில் அனுபவம் பெற்றவர்களை உதவியாளர்களாகச் சேர்த்துக் கொண்டேன்.*

*30.4.96க்குள் ஆரம்ப வேலைகள் அனைத்தையும் முடித்து திரைக்கதை உரையால் பிரதிகளைத் தருவதாக பரமேஸ்வரனிடம் உறுதியளித்திருந்தேன். ஆனால் இடையில் தொலைக் காட்சிக்காக என் சிறுகதையைப் படமாக்க வேண்டியிருந்ததால் மேலும் பதினைந்து நாள் தவணை வாங்கிக்கொண்டேன். என் மகளின் உதவியுடன் திரைக்கதை உரையாடல் பிரதிகளை நேர்த்தியாகத் தயாரித்தேன். அவள் வீட்டுக்குள் தாள்களைப் பரத்திவைத்துக் கொண்டு அக்கறையுடன் ஈடுபட்ட காட்சியை மறக்கவே முடியாது. அது அடிக்கடி தீப்பெட்டித் தொழிலை நினைவுபடுத்தியது.*

*15.5.96 அன்று பிரதிகளை பரமேஸ்வரனிடம் ஒப்படைத்தேன். அவர் முகத்தில் சந்தோசக்களை. உடனே விண்ணப்பம் கொடுத்தார். அதற்குரிய கட்டணத்தைப் பெற மறுத்துவிட்டார். அடகுப் பணத்தில் செலவுபோக மீதியிருந்ததில் 1500 ரூபாய் பரிசீலனைக் கட்டணமாகச் செலுத்தினேன். அங்கேயே உட்கார்ந்து விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து கொடுத்துவிட்டுப் போகுமாறு அவர் அன்புக் கட்டளையிட்டார். 35.75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விண்ணப்பத்தைத் தயாரித்துக் கொடுத்துவிட்டு வந்தேன்.*

*ஜூன்மாதம் சென்னையிலுள்ள தேர்வுக்குழு கூடி என் விண்ணப்பத்தை மும்பைக்குப் பரிந்துரைத்தது. அவ்வப்போது பரமேஸ்வரனைச் சந்தித்து விசாரிக்கும் போதெல்லாம் முயற்சியில் வெற்றி தோல்வி என்பது சகஜம் வெற்றியை எதிர்பார்த்து மட்டுமே முயற்சியில் இறங்கக் கூடாது என்று பக்குவமாகச் சொல்லுவார். நானும் பதிலுக்கு அது உங்கள் குழந்தை என்று கூறிவிட்டு வருவேன்.*

சில சமயம் அதையே மறந்துவிட்டு மலையாள இலக்கியம் பற்றிய பேச்சில் இறங்கிவிடுவோம்.

ஜூலை முதல்வாரத்தில் அவரைச் சந்தித்தபோது எனது முயற்சிக்குத் தலைமையிடம் அனுமதியளித்துவிட்டதாக சந்தோசம் கொப்புளிக்கச் சொன்னார். எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். 11.7.96 அன்று ஆணை வந்து சேர்ந்தது. 35 லட்சம் ரூபாய் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இனிமேல் ஆற்றவேண்டிய பொறுப்புக்களை நினைக்க நினைக்க எனக்கு மலைப்பாக ஏன் பயமாகக்கூட இருந்தது. இருப்பினும் முழுவடிவில் திரைக்கதை உரையாடலும் சின்னத் திரைக்காகப் பணியாற்றிய கொஞ்ச அனுபவமும் கைவசமிருந்ததால் எப்படியும் படத்தை முடித்துவிடலாம் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டது.

ஒரு படத்தின் கதையை பார்வையாளர் மனசில் ஆழப்பதியும்படி சொல்லுவதில் அர்த்தமுள்ள பாடல்களுக்கிருக்கும் பெரும்பங்கை மறுக்கமுடியாது. இசை வாழ்க்கையின் ஓர் அம்சமாக இருக்கிறது. எனவே இப்படத்தில் எதார்த்தம் குலையாமல் பாடல்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை எனக் கருதினேன். பாடல்கள் இருக்கவேண்டிய சூழ்நிலைகளை இளையராஜாவிடம் விவரித்தேன். பாடல்களின் மெட்டுக்களை முடிவுசெய்வதற்குமுன் படக்கதையை திரைவடிவில் சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். என் மனசுக்குள் ஊறிக்கிடக்கும் கதையை எனக்குத் தெரிந்த பாணியில் சொன்னேன். அவர் கேட்டுவிட்டு மிகவும் நெகிழ்ந்து போனார். அவரது கண்கள் பனித்திருப்பதைக் கவனித்தேன். அன்று அவரால் மெட்டமைப்பதில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. இன்னொரு நாளுக்கு ஒத்திபோடப்பட்டது. இந்த மனுசனிடமிருந்து நல்ல பாடல்களைப் பெற்றுவிட முடியுமென்று எனக்கு உள்ளூரச் சந்தோசம்.

ஒருநாள் மகாபலிபுரம் சென்றோம். அந்த அமைதியான சூழலில் ஆறு பாடல்களுக்கான மெட்டுக்களை அமைத்தார். மன நிறைவுடன் திரும்பினோம். படப்பிடிப்பிற்கான இடங்களைப் பார்த்து முடிவுசெய்துவிட்டு வாருங்கள் பின்னர் பாடல் பதிவை வைத்துக் கொள்ளலாம் என்று அவர் சொல்லிவிட்டார்.

ஒளிப்பதிவாளருடனும் ஒரு உதவியாளருடனும் இடங்ளைப் பார்வையிடுவதற்காகக் கிளம்பினேன். சிறுவயதுமுதல் எனக்குப் பரிச்சயப்பட்ட இடங்கள் ஏற்கெனவே மனசில் பதிந்திருந்தால் அவற்றைக் களமாகக் கொண்டே காட்சிகளை அமைத்திருந்தேன்.

எனவே படப்பிடிப்பிற்கான இடங்களைப் பார்வையிட்டு முடிவு செய்வதில் எங்களுக்கு அவ்வளவு சிரமமிருக்கவில்லை.

ஓரிரு நாட்கள் அமர்ந்து விவாதித்து திரைக்கதைக் காட்சிகளின் எண்ணிக்கையை எழுபத்தைந்தாகக் குறைத்து செழுமைப் படுத்தினோம். நாங்கள் திரும்பி வரும்போது இயல்பான களப்பின்னணியில் எதார்த்தம் குலையாமல் படத்தை எடுத்து விடலாம் என்ற தெம்பு மேலோங்கியிருந்தது.

26.8.96 அன்று பாடல் பதிவுடன் படத்தைத் தொடங்கலாமென முடிவுசெய்யப்பட்டது. அவசரமாக அழைப்பிதழ் அச்சிடப்பட்டு குறிப்பிட்ட நண்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தொடக்கவிழா மிக எளிமையாக நடந்தது. ரெண்டு நாட்களுக்கு முன்பே கேரளம் சென்றுவிட்ட பரமேஸ்வரன் விழாவுக்காக அங்கிருந்து வந்து திரும்பினார். தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முயற்சிபற்றி நாலுபேருக்குத் தெரிவிக்கும் நோக்கத்திலேயே இவ்விழா நடந்தது. அந்த நோக்கமும் நிறைவேறியது.

சுமார் ஒருவாரத்திற்குள் பாடல்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டன. எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையில் இளையராஜா முழுமூச்சுடன் செயல்பட்டு பாடல்களை முடித்துக் கொடுத்தார். ஓரிரு பாடல்கள் பாக்கியிருந்தபோது படப்பிடிப்புக்குப் புறப்படுங்களேன் எஞ்சிய பாடல்களைப் பதிவுசெய்து அனுப்பி விடுகிறேன் என்று பக்குவமாகச் சொல்லுவார். அவரது நிலைமை புரிந்திருந்தாலும் அனைத்துப் பாடல்களையும் முடித்துக் கொடுக்காமல் கிளம்பப் போவதில்லை என்று அடம் பிடிப்பேன். இப்படியொரு மரியாதையான உறவில் எல்லாப் பாடல்களையும் பதிவுசெய்து கொடுத்தார்.

உடல் நலமில்லாத நிலையிலும் நண்பர் அறிவுமதி இரு பாடல்களை எழுதிக்கொடுத்தார். மற்ற பாடல்களை கங்கை அமரன், மு.மேத்தா, பரிணாமன் ஆகியோர் எழுதினார்கள்.

பாடல்களைப் பொறுத்தமட்டில் எளிமையான பின்னணி இசையில் இருக்கலாமென எதிர்பார்த்தேன். ஆனால் படத்தை மக்களிடையே நிலைநிறுத்த வேண்டுமானால் இதரப் படங்களுக் கொப்ப இசை இருக்கணுமென்று இளையராஜா கருதினார். அப்படியே பாடல்கள் பதிவாயின. இளையராஜா ஒரு பாடல் பாடினார். அவரது மகள் பவதாரிணி இன்னொரு பாடலைப் பாடினார். மகளென்றும் பாராமல் பாடலின் தரத்தை முன்னிட்டு அவர்கண்டிப்புடன் நடந்துகொண்ட விதத்தைப் பார்க்க ஆச்சரியமாக

இருந்தது. திரை இசையில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த விஸ்வநாதன் ஒரு பாடலைப் பாடினார். அவரிடம் இளையராஜா வைத்திருக்கும் அளவு கடந்த மரியாதை பிரமிக்க வைத்தது. மற்ற மூன்று பாடல்களையும் சுஜாதா, உமா ரமணன், தேவி ஆகியோர் பாடினார்கள்.

படத்திற்கு இன்னும் பல நடிகர் நடிகைகள் தேவைப்பட்டார்கள். அவர்களை நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்க முடிவுசெய்தேன். நிறையப்பேர் ஆர்வத்துடன் வந்தார்கள். கொடுத்த உரையாடல்களைப் பேசினார்கள். அவர்களது போட்டோக்களையும் அவர்கள் உரையாடல்களைப் பேசிய விதத்தையும் கொண்டு தேர்ந்தெடுத்தோம். பெரும்பாலான சிறிய நடிகர் நடிகைகள் இடைத்தரகர்களின் பிடியில் சிக்கியிருப்பதைக் காண முடிந்தது. இது ஒரு சோகந்தான்.

பணம் என்பது எல்லாமட்டத்திலும் ஆட்சி செய்வதை நினைத்தால் வேதனையாகவும் கோவமாகவும் இருந்தது. வணிக உலகந்தான் எவ்வளவு சீரழிந்து கிடக்கிறது. மனுச உணர்வுகள் எவ்வளவுக்கு அழுகிப் போய்விட்டன. இதையெல்லாம் தாண்டித்தான் அல்லது இவற்றுக்கு மத்தியில்தான் ஏதாவது செய்யணும் போலிருக்கிறது. அப்படிச் செய்யவேண்டிய கட்டாயந்தான் என்ன. சமூகப் பொறுப்பா சுய அரிப்பா. எனக்கும் பணம் பண்ணும் வணிகத் தன்மையும் புகழ்தேடும் ஆசையும் வந்துவிட்டதா.

இரவில் பல்வேறு சிந்தனைகள் மனசைக் குடைந்தன. பலப்பல கேள்விகள். வணிகரீதியான கலைஞர்கள்கூட இம்மாதிரிப் படங்களில் மிகுந்த ஆர்வம் காட்டுவதேன். அவர்களிடம் போதிய பணமிருந்தாலும் பேரும் புகழும் தேவைப்படுகிறதா. அல்லது எல்லாவற்றையும்விட கலைஞர்கள் என்ற முறையில் அவர்களுக்குள் உண்மையான தாகம் இருக்கிறதா. தனிப்பட்ட கலைஞனுக்கும் அவனது கலைப்பணிக்குமிடையே ஏகப்பட்ட முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றை எப்படி அணுகணும். வணிகத் தன்மையிலிருந்து விலகி ஒதுங்கி வாழ்ந்த ஒரு எழுத்தாளன் முற்றிலும் வணிகக் கலாச்சாரம் நிறைந்த திரைப்படத்துறையில் இறங்கும்போது ஏராளமான பிரச்சனைகளை எதிர்கொள்கிறான். அவனது பல எதிர்பார்ப்புகள் உடைந்து சிதறுகின்றன. சில சமயம் மனரீதியாகத் தனிமைப்பட்டு சுய ஆதங்கத்தில் தவிக்கிறான். அமைதியிழந்து யாரிடமாவது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்கிறான்.

எழுத்துத் துறையிலிருக்கும் அவனது முழுச் சுதந்திரமும் இங்கே பறிபோய் விட்டதான இழப்புணர்வு மேலோங்கியிருக்கிறது. தனது சுதந்திரத்தையும் சுய குணங்களையும் தக்கவைத்துக் கொள்வதற்காகவே நிறையப் போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கிடையில் அவனால் எதை பெரிதாகச் சாதித்துவிடமுடியும். கலைப்பணிக்கு என்ன நியாயம் செய்துவிட முடியும். ஆனால் எல்லாவற்றையும் தாண்டி அவன் ஏதாவது உருப்படியாகச் செய்தாகணும். இல்லையென்றால் அவனது செயல்பாட்டை எவ்விதத்திலும் நியாப்படுத்த முடியாது.

பரமேஸ்வரன் எனக்கு எல்லாவிதத்திலும் கொடுத்திருந்த முழுச் சுதந்திரம் ரெம்ப ஆறுதலையும் உந்துதலையும் தந்தது. ஒவ்வொரு விஷயத்திலும் தார்மீகத் துணை அவரே. அவருடன் உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு உத்வேகம் பெறுவேன். பணச் செலவிலிருந்து எல்லாமே என் பொறுப்பு. சிலசமயம் என்னுள் நிருவாக விஷயங்கள் மேலோங்கி படைப்பு ரீதியான உணர்வுகள் அமுங்கிவிட்டதாக நினைக்கத் தோணும். நிலைமை இப்படியே இருந்தால் படப்பிடிப்பில் முழுக்கவனம் செலுத்த முடியுமா என்ற அச்சம் தொற்றிக்கொள்ளும். ஒரு கலைஞனுக்கு நிருவாகப் பொறுப்புக்கள் அறவே இருக்கக் கூடாது. பணத்தை எண்ணிக்கொண்டும் கண் கொட்டக்கொட்ட கணக்குப் பார்த்துக்கொண்டும் இருப்பவனாக அவன் சுருங்கிவிட்டால் அவனால் படைப்பு ரீதியாக முழுவீச்சில் செயல்பட முடியாது. படத்தின் ஆக்கத்திற்கு அவனது பங்களிப்பு குறைந்துவிடும். ஆனால் குறைந்த அளவு முதலீட்டில் தொடங்கியுள்ள படத்திற்கு ஆரம்பக்கட்டத்திலேயே பணத்தை விரயமாக்கிவிட்டால் திட்டமிட்டபடி படத்தை முடிக்கமுடியாது. படம் இடையில் நின்றுவிட்டால் பரிகாசத்துக்கு ஏதுவாகிவிடும். பிறகு யாருடைய மூஞ்சியில் முழிப்பது. பெரிய திட்டத்தை கத்துக்குட்டிகளிடம் ஒப்படைத்து கதை கந்தலாகிவிட்ட நிலையாகிவிடக் கூடாது.

எனவே நிருவாக விஷயங்களும் எனது பணிகளில் ஒரு பங்கு என எண்ணிக்கொண்டு செயல்படத் தொடங்கினேன். எனக்கு நம்பிக்கையான நண்பரிடம் பணப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஓரளவுக்கு என்னை விடுவித்துக்கொண்டேன். இதனால் உதவியாளர்களுடன் அமர்ந்து காட்சிகளைப் பற்றி விவாதிக்கவும் படப்பிடிப்பைத் திட்டமிடவும் முடிந்தது.

ஒரே மூச்சில் முப்பது நாட்களுக்குள் படப்பிடிப்பை முடிக்கத் திட்டமிட்டோம். பெரிய கலைஞர்கள் தெரிவிக்கும் வாய்ப்பு வசதிகளுக்கேற்ப திட்டத்தை வகுக்க வேண்டியிருந்தது. அதில் ஏகப்பட்ட சிரமங்கள். அவர்கள் ஒண்ணுசேர்ந்து நடிக்கவேண்டிய காட்சிகளைத் திட்டமிடுவதில் நிறையச் சிக்கல்கள் ஏற்பட்டன. எப்டியோ ஒருவழியாக திட்டத்தைத் தயாரித்து முடித்தோம். எல்லாக் கலைஞர்களுக்கும் அவர்கள் கலந்து கொள்ள வேண்டிய நாட்கள் தெரிவிக்கப்பட்டன.

ஒருவழியாக முன்னேற்பாடுகள் முடிந்தன. போர்க்களத்தில் குதிக்கப்போகும் ஆயத்தநிலை மனசுக்குள். 12.9.96 முதல் முப்பது நாட்கள் படப்பிடிப்பு நடத்தத் திட்டம். சொன்ன தேதிகளில் கலைஞர்கள் வந்து ஒத்துழைத்தால் எல்லாம் சுமுகமாக முடிந்துவிடும். அப்படியும் முழுநம்பிக்கையுடன் இருக்கக்கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலையால் தடங்கல் வந்தாலும் சமாளிக்கத் தயாராக இருக்கணும்.

வேறு சில சிறு வேலைகள் பாக்கியிருந்தன. படப்பிடிப்பிற்காக அரசின் அனுமதி வாங்கணும். கடிதங்களுடன் தலைமைச் செயலகம் சென்றோம். அங்கே சம்பந்தப்பட்ட பிரிவில் அன்பாகப் பேசி கட்டண விவரங்களைக் கணக்கிட்டுச் சொன்னார்கள். இறுதியில் 2500 ரூபாய் அன்பளிப்பு கேட்டார்கள். மைய அரசு நிறுவனம் தயாரிக்கும் படத்திற்கே இக்கதியா. நிலைமையை விளக்கியபிறகும் அவர்கள் கசாப்புக்கடைக்காரர்களாக நடந்து கொண்டது மிகுந்த வேதனையளித்தது. அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. தனியார் திரைப்பட நிறுவனங்கள் அவர்களுக்கு அடிக்கடி அன்பளிப்பு கொடுத்துக் கெடுத்து வைத்திருக்கிறார்கள்.

காரண காரியங்களை எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்தவா முடியும். அதற்கான நேரமா இது. வேறு வழியின்றி முதலமைச்சரின் அலுவலகத்தில் புகார் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம். அதன்பின்னர் அங்கிருந்து கண்டிப்பான அறிவுரைகள். கவைக்குதவாத எங்களுக்கு பிரிவிலிருந்து வசைமொழிகள். வயிற்றெரிச்சலுடன் உடனே அனுமதியாணையைக் கொடுத்தார்கள்.

படத்தில் நடிக்கவிருக்கும் கலைஞர்லகளுக்கு முன்பணம் கொடுக்கணும். என்னை மட்டும் நல்ல சினிமாக்காரனாக நம்பி முன்பணமில்லாமல் புறப்பட அவர்கள் தயாராக இல்லை. பெரிசிலிருந்து சிறிசுவரை இதே கதைதான். தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் இன்னும் காசோலைகள் கொடுக்கவில்லை.

அவர்கள் கஷ்டம் அவர்களுக்கு. பல சடங்குகளைத் தாண்டி பணத்திற்கு ஏற்பாடு செய்யணும். என் கஷ்டம் எனக்கு. எப்படியும் தேரை இழுத்து தெருவுக்குக் கொண்டுவந்து மழைக்காலம் தொடங்குமுன் படப்பிடிப்பை முடித்தாகணும்.

9.9.96 அன்று இயக்குநர் குழு படப்பிடிப்புக் களத்திற்குக் கிளம்ப முடிவு செய்தது. ரயிலுக்கு டிக்கெட்டும் எடுத்தாயிற்று, அதுவரை காசோலைகள் கிடைத்தபாடில்லை. மனசு நிலை கொள்ளாமல் தவித்தது.

அன்று காலை ராதிகா கதை சொல்ல அழைத்திருந்தார். அவசரத்தில் சொன்ன கதையைக் கேட்டு பொறுமையுடன் உள்வாங்கிக் கொண்டார். அவரது ஊதியத்தைப் பேசி முடிப்பதில்கூட பிரச்சனை இருக்கவில்லை. நமது உண்மையான ஊதியத்தைச் சொன்னால் பூமணி அடுத்தவாசல் வழியாக ஓடிவிடுவார் என்று தனது உதவியாளரிடம் கிண்டலாகச் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்குப் பெருந்தன்மையாக நடந்து கொண்டார். ஆனால் அவரது ஒப்பனையாளர்களின் ஊதியத்தை முடிவு செய்வதற்குள் பெரும்பாடாகப் போயிற்று. ஏற்கெனவே படத்திற்கென்று இந்தமாதிரி கலைஞர்கள் இருக்கையில் இவர்கள் தேவைதானா, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் படத்திற்கு இதெல்லாம் அனாவசியச் செலவு என்று தோணியது. இருந்தாலும் பிரதான நடிகையின் விருப்பத்தைப் புறக்கணிக்க முடியாதே. ஒருவழியாகப் பேசிமுடித்து ராதிகாவுக்கான உடைகளை அவசரமாக வாங்கிக் கொடுத்துவிட்டு தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்குச் சென்றேன்.

அப்போது மாலை நாலு மணி. நாலேகால் மணிக்குக் காசோலைகளைக் கொடுத்தார்கள். ஐந்து மணி ரயிலைப் பிடிக்கணும். வீடு வந்து சேரும்போது 4.40 மணி. உடைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு அசுர வேகத்தில் ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டேன். திரைப்படத்தில் உச்சகட்டக் காட்சி தோற்றது. ஆட்டோக்காரன் ஒவ்வொரு கண்டமாகத் தாண்டும் போதும் உயிரே போய்த் திரும்பியது. 4.55 மணிக்கு ரயிலுக்குள் விழுந்து பெருமூச்சு விட்டேன். இதெல்லாம் எனக்குத் தேவையா என்று மனசு அடிக்கடி கேட்டது. குழுவினரின் கலகலப்பான பேச்சில் கலந்துவிட்டு அமைதியாகத் தூங்க முடிந்தது.

மறுநாள் அதிகாலை கோயில்பட்டிக்கு வந்து சேர்ந்தோம். படப்பிடிப்புக்கான தலைமையிடம் அதுதான். அந்த நகரத்தைச் சுற்றி சுமார் பத்து மைல் தொலைவிலுள்ள இடங்களில் படம் பிடிப்பதே எங்கள் திட்டம்.

நானும் உதவியாளர்களும் பல இடங்களுக்குச் சென்றோம். அவை யாவும் எனக்கு நன்கு பரிச்சயப்பட்டவை. எல்லா இடங்களிலும் எனது பள்ளித் தோழர்கள் இருந்தார்கள். திரைப்படம் என்றதும் கொடைக்கானல் உதகமண்டலம் என்று குளுமையான இடங்களுக்குப் போகாமல் பாவப்பட்ட கரிசல் மண்ணுக்கு வந்து பாவப்பட்ட சீவன்களைப்பற்றி எடுக்க வந்திருக்கிறானே என்று அவர்களுக்குப் பெருமை.

திரைப்படத்தில் சொல்லவிருக்கும் வாழ்க்கை நிகழும் கிராமம் ரெம்பப் பரிச்சயமானதாக இருக்கணும். அப்போதுதான் மக்களின் முழு ஒத்துழைப்புடன் அதிக நாட்கள் படப்பிடிப்பு நடத்த முடியும். சொல்ல நினைக்கிற வாழ்க்கையனுபவங்களை பிசிறில்லாமல் இயல்பாகச் சொல்ல முடியும். நான் பிறந்து வளர்ந்த, இளமையில் புரண்டு விளையாடிய கிராமத்தையே மையக்களமாக வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தேன். ஒளிப்பதிவாளரும் அதற்கு உடன்பட்டார். பெரும்பாலான காட்சிகளைப் படம்பிடிக்க வேண்டிய, ஓரளவுக்கு விசாலமான வீட்டைத் தேர்ந்தெடுத்தோம். அந்த வீட்டிற்கு முன்னால் இருந்த சிறிய வீடு நடமாட்டத்திற்கு இடைஞ்சலாக இருக்குமென்று தோணியது. அந்த மண்வீடு சிதிலமடைந்திருந்தது. எனவே அதை இடித்துவிட்டு மீண்டும் புதிதாகக் கட்டிக் கொள்வதற்கான செலவைக் கொடுத்து விடுவது என முடிவு செய்தோம்.

என் மக்களுக்கென்றால் ஏதோ பெரிய கௌரவம் கிடைத்து விட்டதாக அளவில்லாத பெருமையும் சந்தோசமும். எல்லா ஒத்துழைப்பும் தர முன்வந்தார்கள். படத்தில் கோயில் திருவிழாவின் போது இளம் பெண்கள் கும்மியடிக்கும் பாடல்காட்சி உண்டு. கிராமப் பெண்களையே இதற்குப் பயன் படுத்திக்கொள்ளலாம் என முடிவுசெய்தேன். அன்று இரவு முதல் பாடலுக்கேற்ப பெண்கள் கும்மியாட்டத்தை ஒத்திகை பார்க்கணுமென்று கேட்டுக் கொண்டேன். சந்தோசமாக ஒத்துக்கொண்டார்கள்.

இரவு கோயில்பட்டிக்கு வந்தபோது உள்ளூர் நண்பர்கள் ஆர்வத்துடன் காத்திருந்தார்கள். அவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் நடிக்கவேண்டிய பாத்திரங்களுக்கான உரையாடல் பகுதிகளைக் கொடுத்தனுப்பினேன்.

மறுநாள்காலை பூங்காவில் ஒத்திகை. நண்பர்கள் மிக அக்கறையுடன் உரையாடல்களை ஏற்ற இறக்கத்துடன் பேசி நடித்தார்கள். அவர்களால் அந்தப்பகுதி மக்களின் மொழியை தங்கு தடையின்றி இயல்பாகப் பேச முடிந்தது. சிறுசிறு பாத்திரங்களில் உள்ளூர் மக்களையே பயன்படுத்தவேண்டும் என்ற எனது திட்டம் நல்ல பலனளித்தது. படத்தை இயல்புகெடாமல் எடுத்துவிடலாம் என்ற நம்பிக்கை மேலும் அதிகரித்தது.

ஒளிப்பதிவாளர் வந்து சேர்ந்தார். அவருடன் மீண்டும் சில இடங்களைப் பார்வையிடச் சென்றேன். உள்ளூர் நண்பர்களின் ஒத்துழைப்புடன் இரு தீப்பெட்டியாலைகளில் படம் பிடிக்கவும் அனுமதி கிடைத்தது. படப்பிடிப்புக் குழுவினர் ஒருவரையொருவர் புரிந்து ஒரு இணக்கமான செயல்பாட்டுக்கு வரும் வரை சிறு நடிகர்களைக் கொண்டு அருகிலுள்ள இடங்களில் சில நாட்களுக்குப் படப்பிடிப்பு நடத்தலாமென முடிவெடுத்தோம்.

படப்பிடிப்பு தொடங்க இடையில் ஒரு இரவுமட்டுமே இருந்தது. கரிசல் சீமையில் பருவமழை பெய்துவிட்டால் மானாவாரி மக்களுக்குக் கொட்டாட்டம் சொல்லமுடியாது. விவசாயக் கருவிகளையும் விதைவித்துக்களையும் தயார்ப்படுத்துவதில் உறங்கமாட்டார்கள். அந்தமாதிரி படப்பிடிப்புக் குழுவினர் உறக்கமின்றி தயாராகிக் கொண்டிருந்தார்கள். நாளைக்கு நடிக்க விருப்போர் யார் யார், அவர்களுக்குரிய உரையாடல்கள், உடைகள், ஒப்பனை, சிகையலங்காரம் என்ன, அரங்கப் பொருட்கள் யாவை, உணவு ஏற்பாடுகள் என்ன என்று அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்ககளின் நடவடிக்கைகளால் நாங்ககள் தங்கியிருந்த விடுதியே அல்லோலகல்லோலப்பட்டது

12.9.96 அன்று படப்பிடிப்பு ஆரம்பம். இவ்வளவு நாள் உழைத்த உழைப்பு செயலாகப் போகிற ஆர்வம் . எல்லாரும் ஆவலுடன் வானத்தைப் பார்த்துச் சந்தோசமடைந்தார்கள். தூர்த்துத் தெளித்த முற்றம்போல் வானம் துப்புரவாக இருந்தது. வெயிலின் ஆதிக்கம் மெல்ல பரவத் தொடங்கியிருந்தது.

அருகிலுள்ள அய்யனார் கோயிலுக்குச் சென்றோம். பெரிய கண்மாய்க்கரையருகே ஆலவிழுதுகள் சாமரம் வீச அழகான சூழலில் அமைந்திருக்கும் கோயில். ஆலமரக் கிளிகள் ஆர்ப்பரித்து வாழ்த்த சாதிய வேலிகளைத் தாண்டி இரு இளம் உள்ளங்கள் அய்யனாரைச் சாட்சிவைத்து இணையும் திருமணக் காட்சியை உற்சாகமாகப் படம்பிடித்தோம். கோயில் பின்புலத்தில் தேவையான காட்சிகளைப் படமாக்கி முடிக்க மதியத்திற்குமேல் ஆகிவிட்டது.

பிற்பகலில் இன்னொரு கிராமத்திற்குச் சென்றோம். அங்கே ஊர்க்கூட்டம் நடைபெறும் காட்சி படமாக்கப்பட்டது. கிராம மக்கள் அமைதியுடன் கூடி நின்று ஒத்துழைத்தார்கள். நடிகர்கள் ஏற்கெனவே உரையாடல்களை ஒத்திகை பார்த்திருந்தால் அக்காட்சியைப் படமாக்குவதில் சிரமமிருக்கவில்லை. இரைதேடும் பறவைகளைப் போல் அலைந்து திரிந்துவிட்டு நிறைவோடு அந்திவேளையில் கூடு திரும்பினோம்.

அடுத்த சிலநாட்களுக்கு நகரத்திலேயே படப்பிடிப்பை வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட காட்சிகளை எடுத்து முடிக்கலாம் என்று திட்டமிட்டோம். உள்ளூர் நண்பரின் முயற்சியால் அமைதியான காம்பவுண்டு வீடொண்ணு கிடைத்தது. நாங்கள் சுதந்திரமாக நடமாட இடம் போதவில்லையென்றாலும் பொறுமையுடன் பல காட்சிகளை அந்த வீட்டில் பட மாக்கினோம். ஒரு பாடலுக்குத் தேவையான காட்சிகளையும் எடுத்தோம். அந்தக் காம்பவுண்டு மக்களுக்கு மனசு விசாலமானது. அவர்களது ஒத்துழைப்பு மகத்தானது. அவ்வளவு நெருக்கமான இடத்திலும் அவர்கள் எங்களை ஒரு இடைஞ்சலாகவே கருதவில்லை. எங்களுடன் ரெண்டறக் கலந்துவிட்டார்கள்.

ஒரு காட்சியைப் படமாக்கும்போது பெண்கள் நடந்துகொண்ட விதம் மனசை உருக்கிவிட்டது. தீப்பெட்டியாலை மருந்தை சோற்றில் கலந்து சாப்பிட்டுவிட்டு மாண்டுகிடக்கும் இளம் பெண்ணைச் சுற்றி அமர்ந்து பிற பெண்கள் அழுவது காட்சி. இளம்பெண்ணும் ஒரு பாட்டியும் மட்டுமே நடிகைகள். மற்ற அனைவரும் காம்பவுண்டுப் பெண்கள். அவர்கள் அழுவதற்காக கிளிசரினைக் கொடுத்தோம். வாங்க மறுத்துவிட்டார்கள். இந்தப் பரிதாபத்தைப் பார்த்தால் இயல்பாகவே அழுகை வரும்போது மருந்து எதற்கு என்று ஒரு வயதான பெண் கேட்டார். என்ன பதில் சொல்லுவது. காட்சியில் அவர்கள் இயல்பாக அழுதார்கள். காட்சியும் இயல்பாக அமைந்தது.

அடுத்து தீப்பெட்டியாலைகளில் படமெடுக்கவேண்டிய காட்சிகளை முடிவுசெய்தோம். இரு ஆலைகளுக்கும் சொந்தக்காரர்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்கள். அதனால் அங்கே படப்பிடிப்பு நடத்துவதில் அதிகச் சிரமமிருக்க வில்லை. கிராமப் பெண்களை அழைத்து வந்து பயன்படுத்திக் கொண்டோம். ஆலைகளில் ஏற்கெனவே பணிபுரியும் பெண்கள் சிறிசிலிருந்து பெரிசுவரை முழு ஆர்வத்துடன் படப்பிடிப்பில் கலந்துகொண்டார்கள். ஆலைகளின் இயக்கத்தைப் பாதிக்காமலும்

வேறு சில பிரச்சனைகளுக்கு இடமளிக்காமலும் படப்பிடிப்பை விரைவாக முடித்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை. இருப்பினும் தேவையான காட்சிகள் அனைத்தையும் எடுத்து முடித்தோம்.

இதற்கிடையில் இரவுகளில் எனது கிராமத்திற்குச் சென்று பெண்களின் கும்மி ஒத்திகையைப் பார்வையிட்டு வந்தேன். பகல்முழுக்க தீப்பெட்டியாலைகளில் வேலை செய்துவிட்டு வரும் இளம்பெண்கள் இரவில் ஆர்வம் குறையாமல் ஒத்திகையில் ஈடுபட்டார்கள்.

அடுத்த கட்டப் படப்பிடிப்பு அந்தக் கிராமத்தில்தான். நான் சொல்லியபடி படப்பிடிப்பு நடத்தவேண்டிய வீட்டுக்கு முன்னால் இருந்த மண்வீடு இடிக்கப்பட்டு இடம் விசாலமாக இருந்தது. அப்போது ராதிகாவும் நாசரும் வந்துவிட்டார்கள். எனவே அவர்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படமாக்கினோம். இருவரும் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொண்டார்கள். பாத்திரங்களும் உரையாடல் களும் அவர்களுக்குப் புதுசு என்றாலும் விரைவிலேயே அவர்களால் ஒன்ற முடிந்தது.

கிராமத்தில் தினமும் திருவிழாக் கோலந்தான். சுற்றுக் கிராமங்களிலிருந்து நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டுவந்து படப்பிடிப்பைப் பார்த்தார்கள். எங்களது அன்பான வேண்டுகோள் அவர்களை ரெம்பவும் கட்டுப்படுத்தியது. அதனால் கூட்டம் எங்களுக்கு ஒரு இடைஞ்சலாகவே தெரியவில்லை. எனது பள்ளித் தோழர்கள் பலர் என்னைச் சந்தித்துப் பேசி பெருமைப்பட்டார்கள். அவ்வளவு அவசரத்திலும் என்னை மறந்து சிறிது நேரம் என் மனசு இளமை அனுபவங்களை அசைபோட்டு ஆனந்தப்பட்டது. உள்ளூர் மக்களும் அயலூர் மக்களும் கூச்சமில்லாமல் படப்பிடிப்பில் பாத்திரங்களாக நடித்தார்கள். அவர்களுடன் ஆடுமாடுகள், கோழி குஞ்சுகள், நாய்கள் என்று சகல தரப்பினரும் தங்கள் பங்குக்கு நடித்து உதவினார்கள்.

அப்பகுதியில் பருவமழை பொய்த்துவிட்ட வருத்தம் அனைவரது முகத்திலும் தெரிந்தது. ஒவ்வொரு நாளும் மழையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் நாங்கள் படும் கஷ்டங்களைப் பார்த்து மனமிரங்கி படப்பிடிப்பு முடிந்தபின் மழைவந்தால் நல்லது என்று வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். இரவெல்லாம் எங்களுடன் கண் முழித்திருந்து பலவிதத்தில் உதவினார்கள். புலிப்பால் கேட்டால்கூட கொடுக்கத் தயாராக இருந்தார்கள். நள்ளிரவில் படப்பிடிப்பை முடித்துவிட்டு மறுநாள்

அதிகாலையில் வந்துநிற்போம். அவர்கள் ஆச்சரியத்தில் எங்களைப் பார்த்து இவர்கள் எப்போதுதான் உறங்குவார்களோ என்று பாசத்துடன் பரிதாபப்பட்டார்கள்.

எங்கள்மீது அவர்களுக்கு அப்படியொரு அக்கறை ஏற்படக் காரணமென்ன. நான் அந்த ஊரில் பிறந்தவன் என்பதாலா. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அதைத் தாண்டி வேறு காரணங்கள் இருந்தன. எங்கள் குழுவினரின் நடவடிக்கைகள் அவர்களுக்குப் புதுசாகத் தெரிந்தது. நாங்கள் நடுத்தெருவில் நின்றுகொண்டும் நடந்துகொண்டும் சாப்பிட்டுவிட்டு கிடைக்கிற இடங்களில் ஓய்வெடுத்தோம். அவர்கள் கொடுத்த கம்மங்கஞ்சியையும் துவையலையும் விரும்பி உண்டோம். அவர்களது அதிகபட்ச எதிர்பார்ப்பு பரஸ்பர மரியாதைதான். அது போதும் அவர்களுக்கு. உயிரைக் கொடுத்தும் ஒத்துழைக்கத் தயாராக இருந்தார்கள்.

ஒரே ஒரு விஷயத்தில்மட்டும் அவர்கள் காட்டிய தயக்கம் எல்லாருக்கும் ஆச்சரியத்தையளித்தது. தற்கொலை செய்துகொண்ட ராதிகாவுக்கு மயானத்தில் சிதையெழுப்பி தகனம் செய்யணும். மயானம் சென்று சிதை தயாரிப்பதற்கு யாரும் தயாராக இல்லை. அவ்வாறு செய்வதை எல்லாருமே கெட்ட சகுனமாகக் கருதினார்கள். எங்களுக்கு வருத்தமில்லை. நிலைமையைப் புரிந்துகொண்டோம். எங்கள் குழுவினரே சிதையமைப்பதில் ஈடுபட்டார்கள். அந்தக் காட்சி உருக்கமாக அமைந்தது.

எனக்கு அவ்வப்போது பணம்பற்றிய எண்ணம் மனசில் உறுத்திக் கொண்டே இருந்தது. சென்னையிலிருந்து பணம் வருவதில் தடையேற்பட்டால் பல பிரச்சனைகள் உருவாகும். அப்புறம் படப்பிடிப்பு தடைப்படும். எனது கவலையைப் புரிந்துகொண்ட பரமேஸ்வரன் நீங்கள் பணத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் படத்தின் தரத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயல்படுங்கள் என்று கடிதம் எழுதியிருந்தார். அது மிகவும் தெம்பூட்டியது. அதற்குப் பிறகு பணக் கவலையையே விட்டுவிட்டேன். அந்த அளவுக்குத் தடையில்லாமல் கேட்கிற நேரமெல்லாம் அவர் பணம் அனுப்பி உதவினார். படத்தயாரிப்பில் அவரது மறைமுகமான பங்களிப்பு மகத்தானது என்றுதான் சொல்லணும்.

என் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலெல்லாம் படப்பிடிப்பு நடந்தது. எல்லா ஊர்களிலும் எனக்கு நண்பர்கள் இருந்ததால் அவர்களது உதவியுடன் வேலைகள் சுமூகமாக முடிந்தன. கோயில்

கொடை நடத்தி பெண்கள் கும்மியடிக்கும் காட்சிகளை இறுதியாக வைத்துக்கொண்டோம். ரெண்டு நாட்கள் இரவும் பகலுமாக படப்பிடிப்பு நடந்தது. மேளக்கச்சேரி அலங்கார விளக்குகள் வாழைத்தோரணம் என்று உண்மையிலேயே கொடை நடத்தினோம். கோயிலுக்கு முன்னால் நிறையப் பெண்கள் சர்க்கரைப் பொங்கல் வைத்தார்கள். ஏராளமான இளம்பெண்கள் மாவிளைக்கேந்தி தெருக்களில் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கங்கே வட்டமிட்டுக் கும்மியடித்தார்கள்.

இறுதிநாளில் நள்ளிரவுவரை படப்பிடிப்பு நடந்தது. கிராமத்துப் பெண்களின் கும்மியாட்டம் முடிந்து அணைந்த மாவிளக்குகளுடன் அவர்கள் வீடுதிரும்பும் போது முழுப்படப்பிடிப்பும் முடிந்துவிட்ட உற்சாகம் எங்கள் குழுவினரை ஆட்டுவித்தது. பிறகென்ன மேளக்கச்சேரிதான் அவர்களது களியாட்டந்தான். ஊரே ஆச்சரியத்தில் வேடிக்கை பார்த்து.

முப்பதுநாள் திட்டமிட்ட படப்பிடிப்பு இருபத்து மூன்றே நாளில் முடிந்துவிட்டது. தலையிலிருந்து பெரிய பாறையை இறக்கிவைத்த உணர்வு எனக்கு. குழுவினருடன் சந்தோசமாகப் புறப்பட்டேன். 4.10.96 அன்று இரவு நேரமாகிவிட்டாலும் எனக்கு நல்ல தூக்கம். அத்தனை நாளும் அயராது உழைத்த உழைப்பைப்பற்றி நினைக்கும் போது மலைப்பாக இருந்தது. அந்த மலைப்பே இன்னும் ஆழ்ந்த தூக்கத்தைக் கொடுத்தது.

மறுநாள் காலை ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்றார்கள். எத்தனையோ தடங்கல்கள் வந்தபோதும் என்னுடன் ஒத்துழைத்து படப்பிடிப்பைத் தடையின்றி முடித்துக் கொடுத்த அவர்களை நன்றியுடன் பார்த்தேன். நாங்கள் தக்கியிருந்த விடுதி காலையில் பறவைகளைப் பிரிந்த மரம் போல் வெறிச்சோடியிருந்தது. அந்தக் கணத்தில் நான் நொண்டிக்குருவியாக உணர்ந்தேன்.

பண விவகாரங்களை முன்னிட்டு நான் மேலும் ரெண்டு மூன்றுநாள் தங்கவேண்டிய நிலைமை. படப்பிடப்புக்கு உதவிய உள்ளூர் நண்பர்களைச் சந்தித்து நன்றி கூறினேன். ஒரு இரவு என் கிராமத்திற்குச் சென்று எல்லாருக்கும் நன்றி சொல்லிவிட்டு விடைபெற்றேன். நாங்கள் இல்லாமல் ஊரே களையிழந்துவிட்டதாக அவர்கள் ஆதங்கப்பட்டார்கள். உண்மைதான். எங்களால் என்னேரமும் கலகலப்பாக இருந்த ஊரின் அமைதி எனக்குள்ளும் உறுத்தியது.

நான் ஒரு கோட்டை அலுப்பைச் சுமந்துகொண்டு சென்னை வந்து சேர்ந்தேன். உடம்பெல்லாம் வலி. நாங்கள் படப்பிடிப்பு நடத்திய பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதாகச் சேதி வந்தது. மழை ஈரத்தில் நாங்கள் கிளப்பிய புழுதி அடங்கி அமுங்கியிருக்கும். எங்களை வறுத்தெடுத்த வெயில் உக்ரம் தணிந்திருக்கும். காற்றின் சீற்றமும் உறுமலும் சிரிப்பும் சீண்டலுமாக மாறியிருக்கும். கரிசல் நிலங்களில் தலைவிரி கோலத்தில் காட்சியளித்த கருவேல மரங்கள் தளிர்த்துத் தளதளப்பாக நிற்கும். மஞ்சள் மூக்குத்திபோல் அவற்றில் பூக்கள் சில்லெனப் பூத்துச் சிரிக்கும். அக்கோலத்தைக் கண்டு பூரித்துப் புல்லரிக்கணும்போல் ஆசையாக இருந்தது.

# கிட்டத்தில்

*உங்கள் படைப்புலகத்திற்கு உந்துசக்தியாய் அமைந்த இளமைக்கால அனுபவங்களைக் கூறமுடியுமா.*

அடேயப்பா வண்டிவண்டியாக உண்டு. பள்ளிப்பருவ அனுபவங்கள்தான் ரெம்ப. முக்கியமாக தீண்டாமையும் வறுமையும் என்னை அதிகம் பாதித்தவை.

ஒரு அனுபவத்தைச் சொல்லுகிறேன். கீழூர் முதலாளிக்குச் சொந்தக்காரரான இன்னொரு ஊர் முதலாளி தேர்தலுக்கு நின்றார். ஓட்டுக்கு விலையாக ஒருவேளைச் சாப்பாடு போட்டார்கள். எங்கள் ஊரே கீழூருக்குப் படையெடுத்தது. மந்தைக்களம்தான் சாப்பிடுமிடம். கழுதை, ஆடு, பன்றி, மாடு எல்லா மிருகங்களின் சாணிக்கும் நடுவில் இலை விரித்துச் சாப்பிட்டோம். நெல்லுச் சோறு ருசியாக இருந்தது. முதலாளி வீட்டு வேலைக்காரர் அண்டாவில் தண்ணீர் கோலி உயரத் தூக்கி ஊற்றினார். கையேந்திக் குடித்துவிட்டு ஏப்பம் போட்டபடி வீட்டுக்கு நடந்தோம். களத்தருகே புளியமரத்தடியில் கட்டிக் கிடந்த மாடுகள் எங்களை ஒருமாதிரியாகப் பார்த்து எக்காளத்தில் கனைத்தன.

தேர்தலுக்கு நின்றவர் மண்ணாகிவிட்டார் என நினைக்கிறேன். அவரை நாங்கள் ஒருமுறைகூட பார்த்ததில்லை. இந்த அனுபவத்தை இப்போது நினைத்தாலும் கோவங்கோவமாக வருகிறது.

வறுமையின் கொடுமையைப் பற்றிச் சொல்லவே வேணாம். பசி, பட்டினி, தானியக் கடன், வட்டிக்கடன் இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். பச்சைக் குருதவாலிச் சோறுதான் இட்லி. அவிச்ச குருதவாலிச் சோறு நெல்லுப் பருக்கை. சோளச்சோறு கம்மஞ்சோற்று ஆடை சூடான தோசை. அது கிடைப்பதே பெரிசு. நெல்லுச்சோற்றுக் கனவு நிறைவேறணுமென்றால் எப்படா நல்லகாரியம் வருமென்று வாயைப் பிளந்துகொண்டு ஏங்கிக் கிடக்கணும்.

படைப்பிலக்கியத் துறைக்கு நீங்கள் வந்த நோக்கம் என்ன.

தார்ப்பாய்ச்சிக் கொண்டு களமிறங்கும் பெரிய நோக்கம் எதுவும் கிடையாது. சின்னப்பிள்ளை தெல்லுத் தெறித்து விளையாடியாது போல் ஒரு ஆர்வத்தில் நடந்துவிட்டது. பிறகு பிறகுதான் அதுக்கொரு உயர்ந்த நோக்கமும் பொறுப்பும் அக்கறையும் இருப்பதை உணர்ந்தேன்.

உங்களது முதல்படைப்பு அனுபவம்பற்றிக் கூறுங்களேன்.

கல்லூரி மாணவனாக இருந்தபோது தத்தக்கா பித்தக்கா என்று ஒரு காதல் கவிதை எழுதி 'தீபம்' பத்திரிகைக்கு அனுப்பினேன். 'ஏனோ தெரியவில்லை' என்று தலைப்பு வைத்ததாக ஞாபகம். நா.பார்த்தசாரதி அதை அச்சேற்றிவிட்டார். சந்தோசத்துக்குச் சொல்லணுமா. நல்ல சந்தக்கவிதை என்று சொன்னார்கள். அதிலிருந்து ஒரு எழுத்தாளர் என்னை 'அரை டிக்கெட் கவிஞர்' என்று பாராட்ட ஆரம்பித்தார்.

உங்களுக்கு முன்னோடிகளாக, உங்களை மிகவும் உற்சாகப் படுத்தியவர்களாக யாரைக் குறிடுவீர்கள்.

முன்னோடி என்று பலரைச் சொல்லணும். முதலில் என் அம்மா. படிப்பறிவில்லாத அவள் சோகத்தையும் சந்தோசத்தையும் நம்பிக்கையையும் குழைத்து ஊட்டிய கதைகள் ஏராளம். அப்புறம் சி.கன்கசபாபதி, கி.ராஜநாராயணன், கேசவதேவ், சிங்கிஸ் ஐத்மாத்தவ், தகழி என்று ஒவ்வொரு விதத்திலும் பலரைச் சொல்லலாம். இன்னும் புதுமைப்பித்தன், மௌனி, லா.ச.ராமாமிருதம், கு.ப.ராஜகோபாலன், சி.சு.செல்லப்பா, கிருஷ்ணன் நம்பி, ஆ. மாதவன், கு.அழகிரிசாமி, சுந்தரராமசாமி என்று நிறையப்பேர் என்னை ரெம்பப் பாதித்திருக்கிறார்கள்.

எளிமை, சூழ்நிலைச் சித்தரிப்பு, களவிரிப்பு, பாத்திரப் படைப்பு, சொல் பிரயோகம், சிக்கனம், உரையாடல், உறங்காமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது நதியாக அசையும் கனவு நிலை... இப்படி எத்தனையோ காரணங்கள் உண்டு.

கல்லூரி நாட்களில் கவிதை எழுத ஆரம்பித்தபோது சி.கனகசபாபதி ரெம்ப உற்சாகப்படுத்தினார். அவர் எனக்கு வாத்தியார். வித்தியாசமான இலக்கியப் பிரதேசத்திற்குக் கூட்டிச் சென்றவர் அவர்தான். ரெம்ப காலத்துக்குப் பிறகு அவரைச் சந்தித்தபோது குழந்தையைப்போல் என் பையிலிருந்து பேனாவை எடுத்து செல்லமாகத் தடவியபடி இதுதான் கதையெழுதுகிற பேனாவா என்று கேட்டார். நீங்கள் காட்டிய வழிதான் என்று அவரது கையைப் பற்றிக் கொண்டேன். அதுக்குப்பிறகு அவரைப் பார்க்கமுடியவில்லை. இறந்துவிட்டதாக காற்றுவாக்கில் செய்திவந்தது. கண்கலங்கிவிட்டேன்.

கதைகள் எழுதியபோது கி.ராஜநாராயணன், தி.க.சிவசங்கரன், வல்லிக் கண்ணன் இன்னும் பல நண்பர்கள் உற்சாகப்படுத்தினார்கள். ஒரு பக்கமிருந்து பொன்னீலனின் கடிதம் வரும். ராஜபாளையத்திலிருந்து கோதண்டம், பலராமன், மாதவன், ஜகநாத ராஜா, கதைப்பித்தன், அழ.கிருஷ்ணர்த்தி எழுதுவார்கள். திருச்சியிலிருந்து கோ. ராஜாராம், நெல்லையிலிருந்து கல்யாணி (வண்ணதாசன்), ராமச்சந்திரன் (வண்ணநிலவன்) பாராட்டுவார்கள். புதுவையிலிருந்து பிரபஞ்சன், சேலத்திலிருந்து தமிழ்நாடன், மதுரையிலிருந்து தி.சு.நடராஜன், நவபாரதி, சந்திரபோஸ், கோவையிலிருந்து ரவீந்திரன், ராமச்சந்திரபுரத்திலிருந்து வீர.வேலுச்சாமி எல்லாரும் வந்து குமிந்துவிடுவார்கள். உற்சாகத்திற்குச் சொல்லணுமா... ம் அது ஒரு காலந்தான்.

**மாணவப் பருவத்தில் கவிதை பிறகு சிறுகதை, அதன் பிறகு நாவல் - இது உங்களது வளர்ச்சிப் படிக்கட்டுக்களா. இப்பபோது கவிதை, சிறுகதை எழுதுவதில்லையே ஏன்.**

எனக்குள் நிறைய அனுபவங்கள் முட்டைக்குஞ்சாகத் துடித்து முட்டிக்கொண்டிருந்தன. அவற்றைப் பகிர்ந்துகொள்ள கவிதை வடிவம் போதுமானதாக இல்லை. அதுபோல் அனுபவங்களின் குறிப்பிட்ட நிகழ்வுகளை மட்டுமே சிறுகதைகளில் சொல்ல முடிகிறது. பல்வேறு பாத்திரங்களை இயல்பாக நடமாடவிட்டு பன்முகப்பட்ட அனுபவங்களைச் சித்தரிப்பதற்கு நாவல் என்ற

வீச்சான வடிவம்தான் தோதாக இருக்கிறது. அதற்காக சிறுகதையை அறவே விட்டுவிட முடியாது. அவ்வப்போது சிறுகதை எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். நாவலுக்கு வந்துவிட்ட நிலையில் சிறுகதை வடிவம் சிரமமமாக இருக்கிறது. தோணும்போது கவிதைமாதிரி நாலுவரி எழுதுவதும் உண்டு.

கி.ராஜநாராயணனின் கதைகளைப் படித்த உந்துதலில் எழுதியதாகக் கூறுகிறீர்கள். எந்தமாதிரியான உந்துதல்.

கி. ராஜநாராயணன் உந்துசக்தியாக, ஆதர்சமாக, முன்னத்தி ஏராக இருந்தவர். பல விதங்களில் உந்துதல் அடைந்துள்ளேன்.

அவரது படைப்புக்களின் இன்னொரு பரிமாணமாக ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைப் பதிவுசெய்ய ஆரம்பித்தேன்.

'பிறகு', 'நைவேத்யம்' நாவல்களின் களம், பின்னணி பற்றிக் கூறுங்களேன்.

இருகளங்களுமே எனக்கு அணுக்கமானவை. அவற்றுடன் நேரடி அனுபவங்கள் நிறைய உண்டு.

சமூகத்தில் செருப்புக்களாக மிதிபடும் சக்கிலியத் தொழிலாளிகளின் வாழ்நிலைகளை, வாழ்முறைகளை எதார்த்தமாகச் சித்தரிக்கும் முயற்சி 'பிறகு'. கரிசல் பூமியின் ஒரு கடவோடிக் கிராமம் சுதந்திரத்திற்குப் பிறகு இருபத்தைந்து வருசங்களுக்கு மேலாக அடைந்துள்ள சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்களையும் மக்களின் உறவுகளையும் முரண்பாடுகளையும் ஒருசேரப் பரிசலிக்கும் படைப்பு. கிராமத்தின் மூலையில் சக்கிலியக்குடி. அதன் முனையில் கிளைகள் படர்ந்த ஒற்றைவேம்பு. அதனடியில் மனசார்ந்த உறவை மந்திரமாக உச்சரித்தபடி நம்பிக்கையின் தார்மீகப் பலத்தில் வாழ்க்கைத் தவம் புரியும் ஏழைச் சக்கிலியன். எத்தனையோ இழப்புக்கள். ஆனாலும் அவனது தவம் கலைய வில்லை. வழக்கம்போல் வெற்றிலையுடன் தன் சோகங்களையும் அசைபோட்டபடி செருப்புத் தைத்துக் கொண்டிருக்கிறான். அவனது மனவலிமைக்கு முன்னால் பிணி, மூப்பு எல்லாமே தோற்றுப் போகின்றன. காலம் தலைமுறை தலைமுறையாகத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது... அவனது நம்பிக்கை நாரில் அனுபவங்களைக் கோர்த்துப் பின்னுவது கஷ்டமான காரியமாக இருந்தாலும் சந்தோசமாக இருந்தது.

*பாந்தமான உறவுப் பிணைப்பில் சாந்தமாக வாழும் ஒரு கிராமத்து அக்ரஹாரம் பொருள் நெருக்கடியில் இருளடைந்து நொறுங்கிச் சிதறும் அவலத்தின் வெளிப்பாடுதான் 'நைவேத்யம்' கலாச்சார, மதிப்பீட்டு எல்லைகளுக்கப்பால் புதிதாகக் கிளைக்கும் புனிதமான உறவுகள் அதில் இழையோடுகின்றன. எனக்குள் இன்னும் செவ்வரளியாகப் பதியமிட்டிருக்கும் அந்த அக்ரஹாரம் எனது பள்ளிப்பருவத்தில் பரிச்சயமானது. மதியச் சோறு சாப்பிட தூக்குவாளியைச் சுமந்துகொண்டு அக்ராஹாரத் தெருவழியே நந்தவனத்திற்கு நடக்கும்போது கண்களில் பிரமிப்பின் கனம் உறுத்தும். நந்தவனத்தில் காவல்காரனின் வசவுகளுக்கிடையே மாங்காய் திருடித் தின்றவர்களில், சங்கரய்யரை கிண்டலடித்துப் பாடியவர்களில் நானும் ஒருத்தன். மாணவப் பருவத்தை யாரால்தான் கட்டுப்படுத்த முடியும்.*

*அந்த அக்ராஹாரத்தை மீண்டும் ஒருமுறை கண்குளிரப் பார்க்கணுமென்று மனசு துடித்தது. ஆவலாகப் போனேன். சங்கரய்யர் குடியிருந்த வீட்டில் எருமைகள் அசைபோட்டபடி படுத்திருந்தன. குழந்தைப் பாக்கியமில்லாத மீனா வசித்த வீட்டில் பெண் குழந்தைகள் தீப்பெட்டி ஒட்டிக்கொண்டிருந்தார்கள். கர்ப்பக் கிரகத்தில் சிலை திருடப்பட்டதால் கோயிலைச் சுற்றி முள்வேலி போடப்பபட்டிருந்தது. கம்பீரமான கோபுரம் அவமானத்தால் தலைகுனிந்திருந்தது. எனக்குக் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏன்தான் வந்தோம் என்ற கசப்பில் வேகமாகத் திரும்பிவிட்டேன்.*

***'வெக்கை' நாவல் படைக்கப்பட்ட பின்னணி என்ன.***

*'வெக்கை' எதார்த்தமாகப் பிறந்ததுதான். பெரிய பின்னணி எதுவும் கிடையாது. நானறிய நடந்த எதை. பசுமையான இலையை பூச்சி கொறித்தது போல் ஒரு சிறுவனுக்கு நேர்ந்த கொடுமையான அனுபவங்களைக் கோர்த்து அவனது மனவெக்கையுடன் சொல்லணுமென்று ரெம்ப நாளாக எனக்குள் ஒரு துடிப்பு. மலங்காடு, மயானம், கண்மாய், அய்யனார் கோயில் என்று நான் சுற்றித் திரிந்த எனது இளமைக்கால அனுபவங்களை கொலைச் சம்பவத்துடன் பொருத்திப் பார்த்தேன். ஆழ்ந்த ஈடுபாட்டுடன் எழுதமுடிந்தது. கொலை செய்தது சிதம்பரம். காட்டுக்குள் திரிந்து நான் .*

***உங்களது எழுத்துக்கள் உங்களுக்கு மனநிறைவைத் தரக்கூடிய வகையில் உள்ளதா.***

மனநிறைவைக் கொடுத்திருந்தால் எழுதுவதை எப்போதோ நிறுத்தியிருப்பேன். அதென்னமோ கடுங்கோடையில் தண்ணீர் குடித்தமாதிரி தீராத தாகந்தான்.

**உங்களது படைப்புக்களில் உங்களை மிகவும் கவர்ந்த, பாதித்த படைப்பு எது.**

சாவகாசமாகப் படித்துப் பார்க்கும்போது எனது எல்லாப் படைப்புக்களிலும் ஒரு பகுதியோ வரியோ இல்லை முழுசுமோ ஏதாவது ஒருவிதத்தில் பிடித்திருக்கும்.

**எழுத்தாளனின் வாழ்வியல் அவலங்களை சிறுகதையில் கூறுகிறீர்களே அது உங்களின் சொந்த அனுபவங்களா.**

கதையில் நான் படைத்துள்ள எழுத்தாளன் நானேதான்.

**ஒரு கதையில் காவலர்களின் வாழ்வியல் அவலங்களைச் சொல்லும் நீங்கள் இன்னொரு கதையில் அவர்களது வெறியாட்டங்களைச் சொல்லுகிறீர்கள். ஒரே சமயத்தில் எப்படி இருவிதமான பிரச்சனைகளைச் சொல்லமுடிகிறது.**

போலீஸ்காரர்களின் வாழ்க்கையில் அவலமும் உண்டு அடாவடியும் உண்டு. அவர்களுடன் நெருங்கிய உறவு வைத்திருப்பதால் எனக்கு காக்கிச் சட்டையின் இருபுறமும் தெரியும்.

**வர்க்கம் - வர்க்கப் போராட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன.**

தமிழ்நாட்டில் வர்க்கம் என்று துல்லியமான பிரிவு உள்ளதா என்ன. சாதியும் சாதிப் போராட்டமுந்தான் இன்று தலைவிரித்தாடுகின்றன.

**லஞ்சம் பற்றி எழுத்தாளனாக கதைகளில் வெளிப்படுத்தியிருக் கிறீர்கள். ஒரு அலுவலரின் பார்வையில் இதுபற்றி உங்கள் கருத்து என்ன.**

எந்த நிலையிலிருந்து அணுகினாலும் லஞ்சம் என்பது ஒரு புரையோடிய நோய்தான். அதை அறவே வெறுக்கிறவன் நான். இந்த விஷயத்தில் என் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் நடுவில் இம்மியளவுகூட இடைவெளி கிடையாது.

வேலை கிடைக்குமென்றால் குடும்பமே மதம் மாறத் தயார் என்ற சிந்தனையோட்டத்தை ஒரு சிறுகதையில் வெளிப் படுத்தியுள்ளீர்கள். மதமாற்றம் தீர்வாகுமா.

மதமாற்றம் பற்றி 'வயிறுகள்' கதையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. முக்கிய பிரச்சனை அதுவல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தின் உக்ரம்தான் பிரதானமானது. வேலைக்காக மதம் மாறியவர்கள் நிறையப்பேர் உண்டு. பணக்கஷ்டத்திலோ மனக்கஷ்டத்திலோ கைகொடுப்பதாக மனுசன் கருதிக் கொண்டிருப்பதுதானே மதம். மதமாற்றம் வேலையில்லாத நிலைமைக்கு நிரந்தரத் தீர்வாக முடியாது.

மதமாற்றத்திற்கு யார் காரணம்.

காரணம் நிச்சயமாக மதமில்லை. மதத்தைக் கையிலெடுத்துக் கொள்பவர்கள், சமூகம், அரசாங்கம், அறியாமைதான் முக்கியக் காரணங்கள்.

உங்கள் கதைகளில் அரசியல் தலைவர்கள், காவல்துறையினர் போன்றவர்களுக்கு எதிராக எழுதியிருக்கிறீர்கள். இதற்கு எதிர்வினை எப்படி இருந்தது.

அரசு எந்திரம், சமூகக் கொடுமைகளை முன்வைத்து எழுதியவர்களுக்கு ஆரம்பக் கட்டத்தில் இருந்த இடையூறுகள் எனக்கும் இருந்திருக்கின்றன.

உங்கள் எழுத்துக்களில் மனிதநேய உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்களே.

எளியமக்களின் மனித நேய உணர்வுகள் மிக உன்னதமானவை. அவற்றைப் பதிவுசெய்யவேண்டியது எழுத்தாளனின் பொறுப்பு. அப்போதுதானே நமது இழப்புக்களை மதிப்பிடமுடியும்.

சமூகத்தில் கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்துகிறார்களே சில எழுத்தாளர்கள்.

சமூக அக்கறையுடன் எழுதவேண்டிய பொறுப்பு எழுத்தாளனுக்கு உண்டு. இன்றைய வணிகச் சூழலில் கலாச்சாரச் சீரழிவை எழுத்தாளர்கள் மட்டுந்தானா ஏற்படுத்துகிறார்கள்.

*விமர்சனம் எவ்வாறு இருக்கணுமென்று எதிர்பார்க்கிறீர்கள்.*

இப்படி இருக்கணும் அப்படி இருக்கமென்னு கட்டம் கட்டியோ சட்டம் மாட்டியோ சொல்லத் தெரியாது. எந்த விமர்சனத்திலும் ஒரு பொது அக்கறை இருக்கணும். அதுபோதும். சொந்தக் கிணற்றில் தூர்வையெடுப்பதற்கும் ஊருணியில் தூர்வையெடுப்பதற்கும் வித்தியாசம் உண்டு. மற்றப்படி விமர்சகனின் சுதந்திரத்தில் தலையிட படைப்பாளிக்கு உரிமையில்லை.

*படைப்பாளி என்ற முறையில் விமர்சனங்களை எப்படி அணுகுகிறீர்கள்.*

விமர்சனங்களுக்காக படைப்பாளி மூலையில் உட்கார்ந்து முக்காடு போட்டு அழவும் தேவையில்லை தார்ப்பாய்ச்சிக்கொண்டு மல்லுக்கு நிற்கவும் வேண்டியதில்லை. அப்படி உணர்ச்சிவசப் படுகிற அளவுக்குப் பாதிக்க அனுமதிக்கிறவனுக்குப் பேனா எதுக்கு. எரவாரத்தில் எறிந்துவிட்டு வேறு வேலையைப் பார்க்கலாம்.

விமர்சனமென்றால் தாவணியில் புதுசாக வாங்கிவந்த காளைகளைப் பார்வையிட்டு மதிக்கிறதுபோல் நாலு நல்லதும் வரும் கெட்டதும் வரும். பொறுமையாகக் கேட்டுக்கொள்ள வேண்டியது தான். அடுத்த தடவை வாங்கும்போது கவனமாக இருக்கலாமே.

*உங்கள் படைப்புக்களைப்பற்றிய விமர்சனம், பாராட்டு எந்த சிறுபத்திரிகை விமர்சகரிடமிருந்து வந்தது. உங்களைச் சிந்திக்க வைத்த விமர்சனமாக எதைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்.*

பொதுவாக விமர்சனம் என்பதை நான் உன்னிப்பாகக் கவனிப்பதில்லை. விமர்சனத்தைப் புறக்கணிப்பதாக அதுக்கு அர்த்தமில்லை. அப்படியா சமாச்சாரம் என்று மனசில் போட்டுக் கொள்வேன்.

என் எழுத்துக்களை சரியாக உள்வாங்கி விமர்சித்தவர்களில் ராஜ்கௌதமனைக் குறிப்பிடணும். 'பூமணி சஞ்சரிக்கும் உலகம்' என்று அக்கறையான விமர்சனம் எழுதியுள்ளார். அப்புறம் 'வெக்கை' நாவல் பற்றி ஒரு விமர்சனம். எனது அனுபவங்களை என்னுடனேயே பகிர்ந்து கொள்வதுபோல் இருந்தது. ரெண்டுமே சிறு பத்திரிகைகளில் வெளிவந்தவை.

*உங்கள் படைப்புக்களில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரங்கள் யார்.*

'பிறகு' நாவலில் வரும் கந்தையா, அழகிரி. கந்தையா மேல்சாதிக்காரர் அழகிரி கீழ்ச்சாதி. சாதியைத்தூக்கி குப்பையில் போடு என்பதுபோல் அவர்களது உறவு. அப்புறம் 'நைவேத்யம்' நாவலில் சங்கரய்யர், சீதை. இவர்களது உறவு உன்னதமானது.

*படைப்பாளிக்கும் வசகனுக்கும் இடையே உள்ள தொடர்பு எப்படிப்பட்டது.*

படைப்பாளி உள்வாங்கி, உணர்ந்து, பகிர்ந்துகொள்ள நினைக்கிற அனுபவம் வாசகனின் உணர்வுகளைக் கிளரச் செய்யும் ரசாயன மாற்றமே இருவருக்கும் இடையிலான தொடர்பு என்று சொல்லத் தோணுகிறது. உணர்த்துவது, உணர்ந்துகொள்வது ஆகியவற்றைப் பொறுத்து மாற்றத்தின் தன்மை வேறுபடலாம். அந்த உறவில் ஒரு சகஜமும் அன்னியோன்னியமும் நிரவியிருக்கும்போது அது அர்த்தமுள்ளதாகிறது.

இப்படியும் சொல்லலாம். மேய்ச்சல் தரையில் ஊன்றிய முளைக்குச்சுடன் கயிற்றால் பிணைக்கப்பட்ட காளையோ பசுவோ மேய்கிறது. கயிற்றின் வீச்சு, மாட்டின் பசி, ஈடுபாட்டிற்கேற்ப மேய்ச்சல் தளத்தின் பரப்பு அமைகிறது.

*வட்டார இலக்கியம் என்ற பாகுபாடு உங்களுக்கு உடன்பாடுதானா.*

வட்டார இலக்கியம் என்ற பார்வை இலக்கியத்தை மாவட்டம், வட்டம், பஞ்சாயத்து என்று குறுக்கிவிடுமோ என்ற பயம் எனக்கு எப்போதுமே உண்டு. மொழி, வாழ்வியல்முறைகள், இயற்கைச் சூழல் என்ற அளவில்மட்டும் இலக்கியத்தைப் பாகுபடுத்திவிட முடியுமென்று தோணவில்லை. பிரச்சனைகள் எல்லாருக்கும் பொதுவானவைதானே.

*வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுகிறீர்கள். இச்சொற்களுக்கான முக்கியத்துவம் தமிழ்ச்சூழலில் எந்த அளவுக்கு உணரப்பட்டிருக்கிறது.*

மொழி என்பதை பொதுவான வசதியான, கருவியாகக் கொள்ள முடியாது. வாழ்க்கையின் சகல தளங்களிலும் மொழி பின்னிப் பிணைந்துள்ளது. வாழ்க்கையிலிருந்து அதை அன்னியப்படுத்துவது

*சரியல்ல. மொழி ஒவ்வொரு வருக்குமிடையே வேறுபடும். எனக்கும் என் குழந்தைக்கும் பொது மொழி இல்லை. ஆனாலும் நாங்கள் பிணைக்கப்பட்டிருக்கிறோம். எனவே மொழியை அதன் பன்முகத் தன்மையுடன், வாழ்க்கை இயல்புகளுடன் இணைத்து உணர்ந்து கொள்ளணும். ஜெயகாந்தன், சண்முகசுந்தரம், டேனியல் எழுத்துக்களை எப்படி வாசிக்கமுடிந்தது.*

*மொழியை குறுகிய எல்லைக்குள் முடக்கிவிடக்கூடாது. எந்த மக்களைப்பற்றிச் சொல்லுகிறோமோ அந்த மக்களின் மொழியை அப்படியே சகஜமாக வாசகனிடம் கொண்டு சேர்க்கணும். அது எழுத்தாளனின் பொறுப்பு. இரவல் மொழியைப் பயன்படுத்துவதால் எழுதுகிறவனும் எழுதப்படுகிறவனும் அன்னியப்பட்டு விடுவார்கள்.*

***பிற மொழிகளில் பெயர்க்கப்படும்போது வட்டாரச் சொற்கள் அவற்றிற்கான அர்த்தத்தில் வெளிப்படுவதில் சிரமம் இருக்கிறதல்லவா.***

*மொழிபெயர்ப்பு என்று வருகிறபோது சில சொற்களின் சுயத்தன்மைகளை அப்படியே கொண்டுவர முடியாதுதான். இது எல்லா மொழிப் படைப்புக்களுக்கும் பொருந்தும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அர்த்தம் மாறாமல் பார்த்துக்கொள்ளணும்.*

***தங்களது படைப்புக்கள் அனைத்தும் கரிசல் மணத்துடன் திகழ்கின்றன. இது எதேச்சையாக நிகழ்கிறதா அல்லது கரிசல் மண்ணின் சொந்தக்காரன் என்ற முறையில் கரிசல் எழுத்தாளர் வரிசையில் நின்று எழுதுகிறீர்களா.***

*என்னை கரிசல் எழுத்தாளன் என்றோ எனது படைப்புக்களை கரிசல் இலக்கியம் என்றோ வகைப்படுத்திக் காட்ட விரும்பவில்லை. அதுக்காக நான் கரிசக்காட்டுக்காரன் இல்லை என்று அர்த்தமில்லை. எனது களம், எனது மக்களின் மொழி, வாழ்க்கையைச் சொல்லுகிறேன். அதுக்குப் போய் ஏன் பெரிய பெரிய பேர் சூட்டணும்.*

***கி. ராஜநாராயணனின் 'கோபல்ல கிராமம்' நாவலில் பூட்டி மங்கத்தாயார் என்ற முதிய பெண் நாயக்கர் சமூகத்தினர் ஆந்திரத்திலிருந்து தமிழ்நாட்டில் குடியேறிய கதையைச் சொல்லுகிறாள். அதைப்போன்று உங்களது 'பிறகு' நாவலில்***

*சக்கணக்கிழவன் சக்கிலியச் சமூகத்தினர் மணலூத்தில் குடியேறிய கதையைக் கூறுகிறான். இது 'கோபல்ல கிராமம்' நாவலின் பாதிப்பா.*

கதைசொல்லுதல் என்பது பல சமூகங்களிலும் கைமாறி வருகிற மரபுப் பாங்குதான். அம்மா, பாட்டி, தாத்தாவிடமிருந்தும் பலதரப்பு மக்களிடமிருந்தும் ஏராளமான கதைகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றில் ஊர் முளைத்த கதைகளும் சமூகங்கள் தழைத்த கதைகளும் உண்டு. மரபுக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஆழக்கிணற்றுக்குள் முங்கி தொலைந்ததைத் தேடுகிற எந்தப் படைப்பாளியின் இலக்கியத்திலும் இந்தமாதிரி கதைசொல்லும் பாங்கின் வெளிப்பாடு தவிர்க்க முடியாதது.

*உங்களது படைப்புக்கள் முழுக்க முழுக்க நடப்பியலானதா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட, பாகுபாடுசெய்த கற்பனை கலந்ததா.*

நடப்பியலை அப்படியே முழுக்க முழுக்க பிரதியெடுப்பதை எப்படி படைப்பிலக்கியம் என்றும் சொல்லமுடியும்.

*கோயில்பட்டி வட்டாரத்தை மட்டும் பின்னணியாகக் கொண்டு நாவல் களைப் படைப்பது ஏன்.*

நான் வாழ்ந்த, உருண்டு புரண்ட களத்தைத்தானே சொல்ல முடியும். அந்தப் பிணைப்பில்தான் நாலுவரி நன்றாக எழுதமுடிகிறது.

*கிராமியச் சூழல் நாவல்களை எழுதும் எண்ணம் எவ்வாறு வந்தது.*

நான் கிராமத்தில்தானே பிறந்து வளர்ந்தவன். அங்குள்ள மக்களின் வாழ்க்கையை நகரச் சூழலிலா எழுதமுடியும்.

*உங்கள் நாவல்கள் சமூக நாவல்களா அரசியல் நாவல்களா அல்லது கிரமிய நாவல்களா.*

மூனுவிதமான குப்பிகளுக்குள்ளும் அடைத்து அடையாளம் காட்ட விரும்பவில்லை. அவை நாவல்கள்தானா என்பது வேறு விஷயம்.

*விருதுகளைப் பற்றி குறிப்பாக சாகித்ய அகாடமி விருதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்.*

விருதுகள் என்னை அவ்வளவாகப் பாதித்ததில்லை. வெயிலில் நடக்கும்போது மரநிழல் கிடைத்தால் சற்று ஒதுங்கித் தவிப்பாறுவதில்லையா. குளம்குட்டை தட்டுப்பட்டால் தாகம் தணித்து முகங்கழுவி தெளுச்சியாவதில்லையா. அப்படி நினைத்துக் கொள்ளவேண்டியதுதான்.

சாகித்ய அகாடமிபற்றி எனக்கு உயர்வான கருத்தும் கிடையாது தாழ்வான கருத்தும் கிடையாது. எல்லா நிறுவனங்களுமே நல்ல நோக்கத்திற்காகத்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. அவற்றை ஆக்ரமித்துக் கொள்பவர்கள்தான் விவகாரம் பண்ணிவிடுகிறார்கள். ஒரு நிறுவனம் அதிலும் அரசு நிறுவனம் என்றாலே இந்தச் சள்ளைதான். தகுதியற்றவர்கள் தகுதியுள்ளவர்களுக்குப் பரிசு வழங்குவதும் தகுதியுள்ளவர்கள் தகுதியற்றவர்களுக்கு வழங்குவதுமான கூத்து எல்லா இடத்திலும் நடக்கத்தான் செய்கிறது. ஒருவேளை விருதுக்குப் பணமதிப்பு இல்லாமல் போனால் தவளைக் கூச்சலும் வாத்து முணுமுணுப்பும் அடங்கி உருப்படியான காரியங்கள் நடக்கலாம்.

*நீங்கள் வெகுஜனப் பத்திரிகைகளில் எழுதுவதில்லையே ஏன்.*

என் படைப்புக்கள் பெரும்பாலும் சிற்றிதழ்களிலேயே வெளிவந்துள்ளன. என் விருப்பம்போல சுதந்திரமாக எழுதவும் எழுதியதை அப்படியே வெளியிடவும் சிறுபத்திரிகைகள்தான் இணக்கமாக உள்ளன.

*பொன்விழா கொண்டடாடுகிற இந்தக் காலகட்டத்திலும் தீண்டாமை கிராமங்களில் தலைவிரித்தாடுவது பற்றி எழுத்தாளன் சமூகப் பொறுப்புள்ளவன் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன.*

தீண்டாமை தலைவிரித்தாடுவதற்கு காந்திமுதல் கருணாநிதிவரை எல்லாருமேதான் காரணம். இந்திய மக்கள் இன்னும் உண்மையான சுதந்திரம் அடையவில்லை என்பதுதானே உண்மை. இந்த உண்மையை எழுத்தாளன் தனது படைப்புக்களில் எடுத்துரைக்காமல் பொறுப்பைத் தட்டிக்கழிக்கமுடியாது.

*அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா.*

ஒரு எழுத்தாளன் முழுச்சுதந்திரத்துடன் ஈடுபடக்கூடிய அரசியல் இயக்கம் இங்கே இருப்பதாகத் தெரியவில்லை. அவன் ஏதாவதொருஅரசியல் இயக்கத்தைத் தொற்றிக்கொண்டுதான் எழுதணும் என்று கட்டாயமா என்ன.

*நாவல் வடிவத்தை எப்படி உருவாக்குகிறீர்கள்.*

மனசுக்குள் ஜல்லியரைக்கும் சமாச்சாரம் அது. மட்டம் தட்டி, குச்சை பார்த்து அளவாக வடிவமைக்கும் வேலையில்லை. தரையில் திரளும் தண்ணீரைப்போல் அனுபவங்கள் தானாக வாய்க்காலிட்டு வடிவெடுக்கும் நிகழ்வு அது.

*பொதுவுடைமைச் சித்தாந்தம்பற்றி உங்கள் கருத்து என்ன.*

பொதுவுடைமைத் தத்துவம் அதன் செயல்பாட்டை வைத்து அணுகப்படுகிறது. விமர்சிக்கவும் படுகிறது. அது என்றும் வாழ்கிற தத்துவம். ஒட்டுமாஞ் செடிபோல் காலத்திற்கேற்ப வளர்த்தெடுக்கப்பட்டால் மேலும் மேலும் செழுமைப்படும். படைப்பாளிக்கு அது அணையாவிளக்கு.

*ஒரு கட்டத்தில் உங்களை திராவிட இயக்க எழுத்தாளராக அடையாளம் காட்ட முயலுவதாகத் தெரிகிறதே. உண்மையில் உங்களுக்கு திராவிட இயக்கத்தின் பால் ஈடுபாடு உண்டா.*

எனது சமகால எழுத்தாளர்களில் திராவிட இயக்கத்தின் பாதிப்பு இல்லாதவர்கள் சொற்பமாகத்தான் இருப்பார்கள். கருணாநிதியின் கரகரப்பான கவிதைக் குரலுக்கும் நெடுஞ்செழியனின் நாடக நையாண்டிக்கும் ஏங்கிக் காத்துக் கிடந்து உறக்கமிழந்த இரவுகள் பல உண்டு. நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவன். அனால் எப்போதுமே திராவிட இயக்க எழுத்தாளன் அல்ல. மொழிப் பிரச்சனை எல்லாருக்கும் பொதுவானதுதானே.

*இந்திமொழிமீது உங்களுக்குக் கோபம் அதிகமாக உள்ளதே.*

அதன்மீது எனக்குக் கோவமோ வெறுப்போ கிடையாது. அதைக் கட்டாயமாகத் திணிப்பதில்தான் கோளாறு. சொல்லப்போனால் நான் இந்தியை ஓரளவுக்குக் கற்றவன்.

*மொழிக்கொள்கை பற்றி உங்கள் கருத்து என்ன.*

ஆட்சிமொழிக் கொள்கையைத்தானே குறிப்பிடுகிறீர்கள். தமிழ் நமது ஆட்சிமொழியாகி ஒரு தலைமுறைக் காலம் கடந்துவிட்டது. தமிழ் வளர்ச்சிக்கென்று ஒரு துறையும் உள்ளது. ஆனால் நிலைமை என்ன. பெயருக்கு முன்னால் தகப்பனை ஆங்கிலத்தில் அடையாளம்

காட்டுகிற அவலந்தான். தமிழன் தகப்பனைத் தொலைத்து நெடுநாளாயிற்று. இந்த லட்சணத்தில் மொழிக் கொள்கை ஒரு கேடா. டெல்லியில் எல்லா மொழிகளுமே ஆட்சிமொழிகளாக்கப் பட்டாலுங்கூட தமிழன் தகப்பனைத் தேடிக் கண்டுபிடித்துவிடுவானா என்பது சந்தேகந்தான்.

*'பிறகு' நாவலின் மொழிநடை 'வெக்கை' நைவேத்யம்' 'வரப்புகள்' முதலிய நாவல்களின் நடையைவிட வேறுபடுவது ஏன்.*

படைக்கப்படுகிறவனை படைப்பவனிடமிருந்து படிப்பவனுக்குள் அசலாகக் கடத்திச் செல்லும் பயணத்தில் மொழியின் பங்கு மகத்தானது. அந்தந்தச் சூழலுக்கேற்ப, வாழ்முறைக்கேற்ப மொழியின் வெளிப்பாடு வேறுபடத்தான் செய்யும்.

*'வரப்புகள்' நாவலில் ஆங்கிலச் சொற்கள் அதிகம் வருவது ஏன்.*

வாத்தியார்களுக்கென்று ஒரு வாழ்க்கைச் சூழலும் பேச்சுவழக்கும் உண்டு. அவர்களை வாசகனிடமிருந்து அன்னியப்படுத்திவிடக் கூடாதே.

*'வரப்புகள்' நாவலில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிக் கூறியுள்ளீர்கள். நாவலின் காலப் பின்னணி இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் உருவானதா.*

அந்த நாவலின் கதை இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் கருக்கொண்டது. அது எனது பள்ளிப்பருவம். கல்லூரிப் பருவத்தில் போராட்டம் வெடித்தது.

*புதிய தலைமுறை எழுத்தாளர்களைப் பற்றி...*

எழுத்தாளர்களை கோடு கீச்சி தலைமுறைதலைமுறையாகப் பிரித்துப்பார்க்கமுடியுமா என்று தெரியவில்லை. இளைஞர்கள் நல்ல கதைகளை எழுதுகிறார்கள். சில கதைகள் வீரியத்துடனும் வீச்சுடனும் இருக்கின்றன. சிலர் பம்மாத்தில்லாமல் அசலாக எழுதுகிறார்கள். அவர்களது உழைப்பும் அர்ப்பணிப்பும் பிடித்திருக்கிறது. மேம்போக்காக புதுக்கவிதை எழுதிக் கொண்டிருக்காமல் நாவல் எழுதுகிற அளவுக்குக் கடுமையாக உழைக்கிறார்கள். இவர்களிடமிருந்து இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு நல்ல அறுவடை கிடைக்கும்.

*தெக்கத்தி மண்ணுக்கான விஷயங்களை பா. செயப்பிரகாசம் சிறப்பாகப் பதிவுசெய்திருக்கிறார் அல்லவா.*

அவர் நல்ல எழுத்தாளர். கவிஞர் என்பதால் கவிதை மொழியில் சிறுகதைகள் எழுதியுள்ளார். குறிப்பிட்ட பகுதி மக்களின் வாழ்க்கையைப் பதிவுசெய்திருப்பதில் அவருக்குக் கணிசமான பங்கு உண்டு.

*கோணங்கியின் முந்திய படைப்புக்களிலும் தற்போதைய படைப்புக்களிலும் காணப்படும் விஷயங்கள்பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்.*

கோணங்கி நானறிய வளர்ந்த பிள்ளை. அவரது முந்திய படைப்புக்களைப் படித்துவிட்டு சிலிர்த்துப் போயிருக்கிறேன். தற்போதைய படைப்புக்களை தெளிவாகப் படித்து உணர்வதற்கான பக்குவமும் மனமுதிர்ச்சியும் எனக்கில்லையோ என்று தோணுகிறது. அவர் பயணம் செய்யும் மன ஆழத்திற்கு ஈடு கொடுக்க முடியாத இயலாமை என்று கூடச் சொல்லாம். மாற்றத்திற்கு அவர் நியாயமான காரணங்கள் வைத்திருக்கக்கூடும்.

*இருபத்தைந்து வருசமாக சென்னை நகரில் வாழ்கிறீர்கள். அந்த வாழ்க்கையைப் பதிவுசெய்யவில்லையே ஏன்.*

கிராமத்து அனுபவங்களைச் சொல்லுவதற்கே இன்னும் நிறைய இருக்கிறது. அந்த மனோபாவத்திலிருந்து இன்னும் விடுபட வில்லை. தவிரவும் நகர வாழ்க்கையோடு என்னால் முற்றிலும் ஒன்ற முடியவில்லை. இருந்தாலும் நகர்ப்புற வாழ்க்கையை சில கதைகளில் பதிவு செய்திருக்கிறேன். ஓய்வு பெற்றபின் நகர அனுபவங்களைப்பற்றி எழுதக்கூடும். பொதுவாக படைப்பு என்பது கொஞ்சம் ஒதுங்கியிருக்கும்போதுதான் உருவாகிறது இல்லையா.

*தற்கால ஆய்வாளர்கள், ஆய்வுப் போக்குகள் எப்படி.*

ஆய்வாளர்களைக் கண்டாலே எனக்குக் கொஞ்சம் ‘இது’ தான். சில சட்ட திட்டங்களுக்குள் இருந்துகொண்டு இவர்களால் எப்படி அறிவுத்தளத்தில் சர்க்கஸ் விளையாட முடிகிறது என்று மலைப்பாக இருக்கும். ஆய்வுப் போக்குகள் முந்திக்கு இப்போது தரையில் கால் பாவ ஆரம்பித்துள்ளன. இது நல்ல விஷயம்.

*நீங்கள் எழுத்துத்துறைக்கு வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலகட்டத்தில் முத்திரை பதிக்கும்படியான நிகழ்ச்சி எதுவும் நடந்ததா.*

எனது இலக்கியப் பயணத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய அளவுக்கு முக்கியமான நிகழ்ச்சி எதுவும் நடந்துவிடவில்லை.

*உங்கள் வசகர்கள் எப்படிப்பட்டவர்கள். உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்.*

எனக்கென்று தனியாக வாசகர்வட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட சிலர்தானே இங்கே எழுதுவதும் படிப்பதுமாகப் பிணையலடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆரவாரமில்லாமல் எழுதுவதாக என்னைப் படித்தவர்கள் சொல்லுவார்கள். 'நல்ல' தமிழில் எழுதலாமே என்று சிலர் ஆதங்கப்படுவார்கள். செழுமையான மொழிநடை என்று இன்னும் சிலர் பாராட்டுவார்கள். எல்லாவற்றையும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

*உங்கள் நாவல்களில் நடுத்தர, ஏழைக்குடும்ப உறவுநிலை பற்றியே கூறியுள்ளீர்கள். பணக்காரக் குடும்பங்களைப்பற்றி ஏன் கூறவில்லை.*

என்ன செய்வது பணக்காரக் குடும்ப உறவுகளுடன் எனக்கு அவ்வளவு பரிச்சயமும் அணுக்கமும் கிடையாதே.

*'தலித் இலக்கியம்' என்ற போக்கு இன்று பரவலாகப் பேசப்படுகிறதே.*

அதென்ன பானிபூரி, பகளாபாத் மாதிரி புதுசாக 'தலித்' என்ற பிரயோகம். எனக்கு அன்னியமானது. அந்த வார்த்தைக்கு 'ஒடுக்கப்பட்டவன்' என்று அர்த்தமிருப்பதாகக் கேள்விப்பட்டிருக் கிறேன். எந்தச் சாதியில்தான் ஒடுக்கப்பட்டவன் இல்லை. எல்லாச் சாதியிலும் ஒடுக்கிறவனும் ஒடுக்கப்படுகிறவனும் உண்டு. ஆனால் அந்த வார்த்தை குறிப்பிட்டட சாதிகளுக்கான ஒட்டுமொத்தக் குறியீடாக முன்வைக்கப்படுகிறது. இதில் ஒரு அசிங்கமான உள்நோக்கம் இருப்பதை உணரமுடியும்.

அன்றைக்கு சூத்திரனுக்குக் கீழே வைக்கப்பட்டிருந்தவன் பிறகு ஒரு புண்ணியவாளனின் கருணையால்அரிசனன் ஆனான். அப்புறம் பட்டியல் சாதிக்காரன், தாழ்த்தப்பட்டவன், ஆதிதிராவிடன் என்று மாறினான். இப்போது 'தலித்'கூட்டில் அடைத்திருக்கிறார்கள். ஆக தூரத்தில் நின்று சுட்டிக்காட்டுவதற்கு ஒரு நிரந்தர அடையாளம் வேண்டியிருக்கிறது. இந்த லட்சணத்தில் சமபந்தி போஜனம், சமத்துவபுரம் என்று எல்லா இழவும் உண்டு.

சௌக்கியமா என்று வழக்கமாகக் குசலம் விசாரிப்பதுபோல் தலித் இலக்கியம்பற்றி எல்லாரும் விசாரிக்கிறார்கள். முற்பட்ட, பிற்பட்ட, அட்டவணைச்சாதி என்று இலக்கியத்தைத் தரம் பிரிக்கமுடியாது. அனுபவங்களும் உணர்வுகளும் எந்தச் சாதிக்காரரால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன என்பதைவிட அவை என்ன என்பதுதான் முக்கியம். என்னைப் பொறுத்தமட்டில் அழகிரிப்பகடை, சங்கரய்யர் இருவரது உணர்வுகளுக்கும் சாதியில்லை.

கிடையாடுகளை துண்டந்துண்டமாகப் பிரித்து வேலிகளுக்குள் அடைப்பதுபோல் இலக்கியத்தைச் சாதி வேலிகளுக்குள் அடைத்து அதன் நோக்கங்களைக் குறுக்கிவிடக்கூடாது. எழுத்தாளனின் விரல்களுக்கு விலங்கிடமுடியாது. சாதி அடையாளத்துடன் இனக்காட்டப்படும் தலித் இலக்கியம் எனக்கு உனடன்பாடில்லை. அந்த இரவல் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் இலக்கியம் இருந்தால் அது வரவேற்கப்படவேண்டியதே.

**ஒரு தலித்தைப் பற்றி, அவனது வாழ்முறைகளைப்பற்றி இன்னொரு தலித்தால்தான் புரிந்து கொள்ளமுடியும் என்ற கருத்து நிலவுகிறதே.**

முதலில் 'தலித்' என்ற வார்த்தையைக் கொண்டுபோய்உடைப்பில் போடுங்கள். அதை சாதியநோக்கில் பிரயோகிக்கிறீர்கள் என நினைக்கிறேன். தெரிந்தோ தெரியாமலோ அந்த நோக்கு உங்களுக்குள் பதிவாகியுள்ளது. அதன் அடிப்படையிலேயே விஷயங்களை அணுகுகிறீர்கள்.

மொழி, சமூக உறவுகள், வாழ்முறைகள் என்று பல அம்சங்கள் பூகோள ரீதியாக வேறுபடுகின்றன. வெவ்வேறு பகுதிகளில் வசிக்கும் ஒரே சாதி மக்களிடையேகூட இந்த வேறுபாடுகள் உண்டு. ஒரு சாதியைச் சேர்ந்த எழுத்தாளனால் அயல் பகுதியில் வசிக்கும் அதே சாதியினரின் பரிச்சயமில்லாத மாறுபட்ட வாழ்முறைகளை முழுமையாகப் புரிந்து உள்வாங்கி எழுதமுடியுமென்று நினைக்கிறீர்களா. நிச்சயமாக முடியாது.

அட்டவணைச் சாதியினரை பொத்தாம் பொதுவாக தலித்துக்கள் என்று குறிப்பிடுகிறீர்கள். அப்படித்தானே. அட்டவணைச்சாதிகளில் எத்தனை வகை உண்டு தெரியுமா. ஒவ்வொண்ணுக்கும் மாறுபட்ட வாழ்முறைகள் உண்டு. மாறுபட்ட கலாச்சாரம் உண்டு. சில அம்சங்கள் பொதுவாக இருக்கலாம். மாறுபட்ட அம்சங்களைச் சித்தரிப்பதற்கு நீங்கள் முத்திரை குத்தும் 'தலித்' எழுத்தாளன் அந்தந்தச் சாதியிலா பிறக்கமுடியும். ஒரு ஜெயகாந்தன் பூணூல் போட்டுக்கொண்டுதான் பிராமணர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டினாரா என்ன. ஒரு வண்ணநிலவன் சிவனைப்போல் மீனவ சமூகத்தில் பிறந்து திருவிளையாடல் பண்ணியா 'கடல்புறத்தில்' என்ற அருமையான நாவலை எழுதினார். ஆக 'புரிதல்' என்பது நீங்கள் முன்வைக்கும் அபத்தமான கருத்துக்கு அப்பாற்பட்டது. அய்யா அதன் எல்லையே வேறு. அது 'அறிவாளி'களின் பேரறிவுக்கு எட்டாதது.

**தலித்துக்களின் வாழ்வியல் அவலங்களைப் படம்பிடிக்கும் நீங்கள் பிறவியிலேயே தலித்தாகப் பிறந்ததன் மூலம்தான் இதைச் செய்யமுடிகிறதா.**

என்னை 'தலித்' என்று கூறிக்கொள்ள விரும்பவில்லை. அந்த கடன்வாங்கிய 'பட்டம்' எனக்குத் தேவையுமில்லை. எழுத்தாளனை இப்படி சிறு கூண்டுக்குள் அடைத்து நிறுத்திவைப்பது இலக்கியத்திற்குச் செய்யும் பெரிய துரோகமாகும். இதுதான் தொடர்ந்து நடக்கிறது.

'தலித்' என்ற வார்த்தை இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்பே நான் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களைப்பற்றி எழுதியவன். என்னை இன்ன சாதிக்காரன் என்று சொல்லிக்கொள்வதில் கூச்சமோ தயக்கமோ கிடையாது. அதற்காக நான் வேறு எந்த இனத்தினரைப் பற்றியும் எழுதக்கூடாது என்று தடைவிதிப்பதற்கு எந்தக் கொம்பனுக்கும் உரிமையில்லை. ஏனெனில் அடிப்படையில் நான் ஒரு மனுசன். அழகிரிப் பகடையும் கந்தையா நாயக்கரும் தலையாரித் தேவரும் கருப்பக் கோனாரும் சங்கரலிங்கம் பிள்ளையும் சுப்பையனாசாரியும் எனக்குச் சொந்தக்காரர்கள். அவர்களது வாழ்வியல் அவலங்கள், சந்தோசங்களுடன் எனக்கு அணுக்கமான உறவு உண்டு. அவர்களைப்பற்றி எழுதுவதற்காக நான் ஒவ்வொரு இனத்திலும் உடல்ரீதியாகப் பிறவியெடுக்கமுடியாது.

பிறவியிலேயே நான் 'தலித்' என்று கூறுவதற்குப் பின்னால் ஆதிக்கச் சாதி மனப்பான்மை ஒளிந்திருப்பது தெரிகிறது. இலக்கியத்தைச் சாதிபிரித்துப் பார்க்கும் கேவலத்தின் காரணமாகவே இந்த ஆதிக்கமும் ஆணவமும் வெளிப்படுகின்றன.

ஏதாவது ஒரு வகையில் அடக்கி ஒடுக்கப்படும் எந்தச் சமூகமும் தன்னை விடுவித்துக்கொள்வதற்காகப் போராடுவது வரலாறு. சூழ்நிலைகளுக்கேற்ப அப்போராட்டத்தில் அது பல்வேறு வடிவங்களைக் கையிலெடுத்துக்கொள்கிறது. கருத்துப் போராட்டம் அவற்றில் ஒண்ணு. ஒரு காலத்தில் தீண்டத்தகாததாக மதிக்கப்பட்டு வந்த நாடார் சமூகம் ஒண்ணரை நூற்றாண்டுக்கும் மேலாகப் போராடி நூற்றுக் கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து விடுதலை பெற்ற வரலாறு சரியான உதாரணம்.

# ஏலேய்

அம்மாவை நினைத்தால் ஆற்றுமணலில் ஊற்றுத் தோண்டிய மாதிரி மனசில் நாலாபக்கமும் கசிகிறது. அவளது தாலாட்டும் ஒப்பாரியும், கோவமும் சிரிப்பும், சின்னச்சின்னக் கதைகளுமாக ஊறிப் பெருகுகிறது. கசிவின் தெளிவில் கண்ணாடிபோல் அவள் முகமே நிறைந்திருக்கிறது.

அவனுக்கு தன் தொட்டிலிலிருந்து தன் குழந்தையின் தொட்டில்வரை எல்லாமே அம்மாதான். அவனுக்குள் எங்கும் வியாபித்திருக்கும் அம்மா. அய்யா அப்படியில்லை. அவன் கணக்கைத் தொடங்கும்போது அவர் முடித்துக்கொண்டார்.

அய்யாவின் முகம் நினைவில் அரிச்சலாகத் தெரிகிறது. அவனை மடியில் வைத்துக்கொண்டு பூத்துப் புல்லரித்த வேம்புக்குள் குழலூதிப் பழகும் கொண்டைக்குருவியை அவர் மூச்சிரைப்பில் வேடிக்கை காட்டியபோது ஓரமாகப் பார்த்த நோய்முகம். மூச்சை நிறுத்திவிட்டபிறகு அவரை கட்டிலில் கிடத்தி சுற்றியிருந்து அழுதபோது கண்ணீர்த் திரைவழியே கண்ட கடைசிமுகம். எல்லாம் உடம்பில் சிற்றெறும்பாய் ஊர்ந்து செல்லும் சிலிர்ப்பு அனுபவங்கள்.

அமாவாசைப் பிறைபோல் அவர் முகம் துல்லியப்படவில்லை. படத்திலிருந்து எடுத்த உருவமும் நெஞ்சில் பதியவில்லை. ஆனால் படத்தில் இல்லாத அம்மா அங்கே படமாகத் தொங்குகிறாள்.

அய்யாவும் அம்மாவும் நடந்துவந்த பாதையின் ஓரத்தில் முளைத்தது ஆறு செடி. நாலு அக்கா, ஒரு அண்ணன். அவன் கடைக்குட்டிக் கன்று. அதனால் எல்லாரும் பாசத்தை ஊற்றி அவனை வளர்த்தார்கள். அவன் வெயிலிலும் பசுமையாக வளர்ந்தான்.

அய்யா குலதெய்வத்துக்கு நூற்றியெட்டுத் தேங்காய் விடலை எறிந்து விமரிசையாகக் கொண்டாடி பிள்ளைகளுக்கு தெய்வப் பேர்களை விளம்பினார்கள். ஆனால் துலங்கியதென்னமோ அத்தையின் கணவர் வைத்த பேர்கள்தான். அவர் வேதக்கார வாத்தியார். நல்ல வைத்தியர். அய்யாவுக்குச் சிநேகிதர்.அவரை பிள்ளைகள் அத்தையா என்றுதான் கூப்பிடுவார்கள்.

அய்யாவுக்குக்கூட சின்ன வயசில் வைத்த வேதப் பேர் ஒண்ணு உண்டு. ஊருக்கு நடுவே வேதக்கோயில் முளைத்த காலம் அது. மேலூர் வாத்தியார் முயற்சியில் கட்டினார்கள். கொஞ்ச வருசத்துக்குப் பிறகு கோயில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. ஆனாலும் அய்யாவுக்கு ரெண்டு பேரும் துலங்கியது.

அவன் மேலூர் வேதப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது கூட பால்குடி மறக்கவில்லை. அம்மாவை வெள்ளரியாக உரித் தெடுப்பான். பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் அவள் மடியில் உட்காரணும். உள்மூச்சைக் கேட்டுக்கொண்டே வாய்வலிக்கக் குடிக்கணும். அவள் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும் நிறுத்திவிட்டு மடியை விரிக்கணும். முற்றம் பெருக்கினால்கூட விளக்கமாற்றை எறிந்துவிட்டு பெருக்கிய இடத்தில் உட்காரணும். இல்லையென்றால் பைக்கட்டு பறக்கும். அழுகை அலறும்.

தெருவில் போகும் பெண்கள் ''கோழிப்பீ'' என்று கிண்டல் பண்ணுவார்கள். அவன் ஊமைச்சிரிப்பில் பாலைக் கொப்புளித்துக் குடிப்பான். அவனது கை அம்மாவின் வெறுங்கழுத்தை வருடும். இன்னும் சில பெண்கள் கிட்ட வந்து நக்கலாகச் சொல்லுவார்கள்.

''சோறு தண்ணியில்லாமக் கெடந்தாலும் கெடப்பான் அம்மாவோட பாலு உள்ள எறங்காம ஒறக்கம் வராது.''

''அங்க என்ன கொடங்கொடமா கெட்டியா கெடக்குது. குருவிப்பாலு குடிச்சு எளவட்டமாகவா

''வத்துப் பாலு ருசியில அய்யா சொக்குறதப் பாரு.

''இந்த மனுசிக்கு எங்கருந்துதான் [illegible] ஊறுமோ.

இத்தனைக்கும் அம்மாவின் முகத்தில் சிரிப்புத்தான். அவளது கவுந்த பார்வையிலும் கனிவான சிரிப்பிலும் அவன் கிறங்கிப் போவான். கைவிரல்கள் மாராப்பை இறுகப் பற்றும். அவன் சுதாரிப்பு மருந்து குடித்து முடித்ததும் துள்ளி ஓடும் சித்திரத்தை அம்மா பார்த்துக் கொண்டேயிருப்பாள்.

பால்குடியை மறக்காட்டினால்தான் அவன் வயிறு நிறையச் சாப்பிட்டு திடப்படுவான் என்று ஒருத்தி யோசனை சொன்னாள். அம்மாவுக்கு அது சரியென்று பட்டது. ஒருநாள் கரியபவளத்தைத் தடவி வைத்தாள். ஆசையாகப் பால்குடித்த அவன் கற்றாழைக் கசப்பில் குமட்டிய குமட்டலையும் ஓங்கரிப்பையும் பார்த்து அவளுக்குக் கண்கள் கசிந்துவிட்டன. அதுக்குப் பிறகு முடிவு செய்துவிட்டாள்.

''குடிக்கட்டும் குடிக்கட்டும். குடிக்கமட்டும் குடிக்கட்டும். இனி எந்தப் புள்ளைக்குக் குடுக்கப்போறொம். வெலைக்கா வாங்குறொம்.''

அவன் ஏழெட்டு வயசுவரை தொட்டிலில்தான் படுத்தான். அரண்மனைப் பிள்ளைகள்கூட அவ்வளவு நாள் ஊஞ்சலில் படுத்திருக்க மாட்டார்கள். அம்மா அயராமல் உறக்காட்டுவாள். சிலநாள் உறக்காட்டியபடியே கந்தூங்கி விடுவாள்.

மற்ற பிள்ளைகளுக்கெல்லாம் உறக்காட்டுக்கு அர்த்தம் தெரியாது. பாட்டு ராகம் பச்சைக் கொழுந்தாக நீவும் சொகத்தில் உறங்கிப் போவார்கள். அவன் கதை அப்படியில்லை. நிறைய வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியும்.

அடடா அம்மா எங்கெல்லாம் கூட்டிப்போவாள் தெரியுமா. வனாந்தரம், வண்டாடும் சோலை, மாரியம்மா கோயில், திருச்செந்தூர் சமுத்திரம் இப்படி எத்தனையோ இடங்கள். மாமன்மார் தோரணையாக வேட்டைக்குக் கிளம்புவார்கள்.

பாச்சக் கயறுகளாம் - என் கண்ணே

பலநாயும் சங்கிலியாம்

வேட்டைக்கோ போறாங்க - என் கண்ணே

வீரபுலி ஒம்மாங்க.

வேட்டையில் சிங்கமும் புலியும் கரடியும் புள்ளிமானும் அகப்படும். அப்புறம் மாமன்மார் அவனை பூச்செண்டால் செல்லமாக அடிக்க அவன் அழுவான். அம்மா சமாதானப் படுத்துவாள்.

பிறகு வள்ளிக்கும் தெய்வானைக்கும் சக்களத்திச் சண்டை நடக்கும். முருகன் விலகிவிடுவார்.

வள்ளிக்கும் தெய்வானைக்கும் - என் கண்ணே

மயிர்புடிச் சண்டைகளாம்

வள்ளிமேல் குத்தமில்ல - என் கண்ணே

மயித்த வுடு தெய்வான.

அவன் தொட்டில் விளிம்பை வளைத்துப் பிடித்தபடி சொகமாகக் கேட்டுக் கொண்டே கண்ணயர்வான். இதைப் பார்த்து பெண்கள் வாய் சும்மா இருக்காது.

''ஒம்புள்ளைய எலி பூனையா தூக்கிட்டுப் போயிரும்.''

அம்மா தயாராகப் பதில் வைத்திருப்பாள்.

''இனிமே பேரன் பேத்தி எடுத்தாத்தான வீட்ல தொட்லு ஆடும்.''

''இவனுக்குப் புள்ள பெறக்கிறவரைக்கும் ஆட்டீட்டே இரு தாயி.''

அம்மாவின் குரல் கம்மிவிடும்.

''தகப்பனத்தான் அனியாயமா தூக்கிக் குடுத்தாச்சு. புள்ளீகளாச்சும் சொகமா பெழச்சுக் கெடக்கட்டுமே. நமக்கு அதுகள வச்ச தெம்புதான.''

ரெண்டு பேரும் கண்ணைத் துடைத்து முந்தானையை நனைத்துக் கொள்வார்கள்.

அவன் தொட்டிலுக்குள் மல்லாக்க முழித்துக் கிடக்கும்போது கண்ணுக்கு என்னென்னமோ தட்டுப்படும். கூரை எரவாரத்தில் தொணதொணத்துக் கொண்டு வெயிலுக்குத் தவிப்பாறும் ஊர்க்குருவிகள். சுவர் விளிம்பில் மண்டையை மட்டும் நீட்டி முறைத்துப் பார்க்கும் கரட்டான். அதைக்கண்டு பொறுக்காத குருவிகளின் நொடிப்பு சொல்ல முடியாது. கண்மாயில் குளிக்கும் பொட்டப் பிள்ளைகளை கரையில் ஒளிந்து எட்டிப்பார்க்கும் பயலுக்குக் கிடைக்குமே அப்பேர்ப்பட்ட வசவு.

முகட்டோரம் கூரைத் தட்டையைக் கொறித்துக் கொறித்து உதிர்க்கும் வீட்டெலிகள் வரிச்சிக் கம்புகளில் மறுக்கி ஓடி கிளித்தட்டு விளையாடும். அதுகளுக்கு அங்கேயேதான் குடியிருப்பு. கூரையில் பொந்து குடைந்து உள்ளே பருத்தியை மெதுமெதுவென்று

பரத்தி சொகமாகப் படுத்துக்கொள்ளும். மீசைக்குள் முணுமுணுக்கும் மூஞ்சி கொஞ்நேரம் சும்மா இருக்கணுமே. வெயிலும் மழையும் கிட்ட அண்டாதபடி சந்தோசமாகக் குடும்பம் நடத்தும்.

ஒரு வரிச்சியில் அதுபாட்டுக்குக் கூடுகட்டிக்கொண்டிருக்கும் செங்குளவிகளுக்கு எலிகள் கூட்டைத் தாண்டும்போது எக்கச்சக்கமாகக் கோவம் வரும். சுற்றி மொய்த்து பாடாய்ப் படுத்திவிடும். இன்னொரு பக்கம் மரவளையைத் துளைக்க அண்டம்போடும் தும்பியின் இரைச்சல் கேட்கும். தொட்டிலில் ஒருச்சாய்த்துப் புரண்டால் சுவர்மூலையில் பானையோட்டுக்குள் பத்திரமாக அடைகாக்கும் கோழி விட்டுவிட்டு விக்கிக் கொண்டிருக்கும்.

ஒருநாள் அடுப்புக் கூடத்தோரம் புளியம்பிஞ்சுபோல் ஏதோ கிடந்தது. எடுத்துப் பார்த்தால் இத்தினிக்காணும் எலிக்குட்டி. மிளகுக் கண்கள் இன்னும் திறக்கவில்லை. மயிர்முளைக்காத மேனி. அரளிப்பூச் சிவப்பில் அடிவயிறு. சோம்பல் முறித்து நெளிர்விட்ட மாதிரி ஒரு விறைப்புடன் ஆயுசை முடித்துக் கொண்டது. அவனுக்கு வருத்தம். சிறு துணியில் அதை மூடி கொட்டாரத்தில் குழிதோண்டி அடக்கம் செய்தான். அன்றைக்கு மனசே சரியில்லை.

கட்டாந்தரிசில் கருகிப்போன புல்லைக் கரும்பி வயிறு நிரப்பும் பசுவின் பிழைப்புதான் அம்மாவுக்கு லவித்தது. என்ன செய்வது அப்பாவின் குடும்ப நிலைமை அப்படி. அப்பச்சி சொத்துச் சேர்ப்பதற்குப் பதிலாக பிள்ளைகளைப் பெற்றுச் சேர்த்தார். அஞ்சு பொம்பளை, ரெண்டு ஆம்பளை. ஆடுமாடு மேய்த்து அத்தக் கூலி வாங்கி அதுகளைக் காப்பாற்றவே சரியாக இருந்தது.

அப்பச்சி பிறந்த குடும்பமும் அப்படித்தான். அஞ்சு ஆம்பளை. ஒரே பொம்பளை. அண்ணன்மார் தங்கச்சியை செல்லமாக வளர்த்தார்கள். கருமலையிலிருக்கும் அருசுகமான பொருளை அவள் கேட்டாலும் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

மூத்தவர் ஆட்டுக்காரப்பச்சி. குழந்தைகுட்டி கிடையாது. சுற்றுப்பட்டியெல்லாம் பயப்படுகிற சண்டீர். அவர் பேரைச் சொல்லி உறங்க வைக்கிற அளவுக்குப் பயம். அடிதடி கலகம் அத்தனையும் அவருக்கு அத்துபடி. வெளியாட்கள் யாரும் ஊரில் விரல் வைக்க முடியாது. தீவட்டிக் கொள்ளைக்குப் பயந்து பணத்தையும் நகையையும் தலைக்கடியில் வைத்துப் படுக்கவேண்டிய கவலையில்லை. எதிரிகளின் தூண்டுதலில் உள்ளூருக்குள்ளேயே

நாலுபேர் கூடி கமுக்கமாகத் திட்டம் போட்டு நயவஞ்சமாக அவரைக் கவுத்தி விறகைப்போல் துண்டுதுண்டாக நறுக்கி பொட்டணம் கட்டிவிட்டார்கள். அது ஒரு துயரக் கதை.

ஆட்டுக்காரப்பச்சியின் பட்டத்தை அய்யா எடுத்துக் கொண்டார். அவர் கம்புக்காரர்தான் என்றாலும் வம்புக்காரரில்லை. அவர் இறங்கும் சண்டையிலும் சரி பேசி முடிக்கும் வழக்கிலும் சரி ஒரு நியாயமிருக்கும். களவுசோலி, பொய்புரட்டு, சண்டிவழக்கு இப்படிக் காரியங்களுக்கும் அவருக்கும் தூரம். ஒரு சங்கதி மனசுக்குப் பிடிக்கவில்லையென்றால் சொந்தக்காரன் என்று கூடப் பார்க்க மாட்டார். படக்கென்று கைநீட்டிவிடுவார். அவரிடம் ரெம்பப் பேர் அடி வாங்கியிருக்கிறார்கள். மலையோரம் கள்ளுக் கடையில் நடந்த சண்டையில் மண்டை உடைந்து கட்டிலில் சுமந்து வந்து கிடத்திய சம்பவமெல்லாம் உண்டு. ஏதாவது ஒரு காரியத்திற்காக வெளியூரைச் சேர்ந்த வெவ்வேறு சாதிச் சண்டீயர்கள் அவரைத் தேடி வந்துகொண்டேயிருப்பார்கள். அப்படிப்பட்ட சேகாரம் ரெம்ப.

கம்புக்கார மனுசனுக்குக் கழுத்தை நீட்டிவிட்டோமே என்று அம்மாவுக்கு ஒருபுறம் வருத்தந்தான். இருந்தாலும் கிட்டத்துச் சொந்தமாயிற்றே. தாய்மாமன் மகன். ஒண்ணுக்குள் ஒண்ணாக நுழைந்துவிட்ட பிறகு அனுசரித்துத்தான் போகணும். எது எப்படியிருந்தாலும் அய்யாவின் நேர்மையும் நியாயமும் அவளுக்குப் பிடித்திருந்தது.அவளைப் போலவே அவரும் பிள்ளைகள் மேல் வைத்திருந்த பாசத்தை அவள் மதித்தாள். இடவனும் வலவனும் அவ்வப்போது முரண்டுபிடித்து உழத்தினாலும் வண்டி ஓடிக்கொண்டுதானிருந்தது.

அப்பச்சிமாருடன் பிறந்த ஒரே பெண்ணடியாள்தான் அம்மாவைப் பெற்ற பேத்தி. பேத்தியைப்போலவே அம்மாவும் அவள் வீட்டுக்கு ஒரே பெண். பேத்திக்குத் தெற்கே வடக்கே தெரியாது. சூதுவாது கிடையாது. மாட்டுக்கு அஞ்சுகால் என்றால் அப்படியாம்மா என்று உடனே நம்பிவிடுகிற கொதக்கு. வெள்ளந்தியான மனுசி. அதனால் நல்லது கெட்டது எதுவானாலும் அம்மாவிடம்தான் யோசனை கேட்பார்கள்.

அம்மாவின் குடும்பம் ஏல்க்கையானது. தோட்டம் துரவு என்று நல்ல விவசாயம். குலுக்கை குலுக்கையாக தவசம் நிற்கும். அடுத்த வெள்ளாமை வீடுவந்து சேரும்வரைகூட குலுக்கையைத் திறக்க மாட்டார்கள். ஊருக்குள் இன்னார் குடும்பம் என்றால் கொஞ்சம் ஒசத்திதான். அம்மாவும் அவளுக்கு அப்பச்சியும் குலுக்கைத்

தவசத்தை அள்ளி அள்ளி கடையில் கொட்டி பண்டம் வாங்கித் தின்றே காலி பண்ணிய கதையை பேத்தி பெருமையாகச் சொல்லுவாள். அப்பேர்ப்பட்ட செல்ல மகள் கஷ்டத்தில் துவளுவதை நினைத்து கொஞ்சம் கண்ணீரும் சிந்திக்கொள்வாள். இருந்தாலும் உயிருக்குயிரான ஆட்டுக்கார அண்ணனை மருமகனின் உருவத்தில் பார்த்துப் பார்த்து அவள் மனசு பூரிக்கும். மறுநாள் மருமகனுக்குத் தெரியாமல் தவசம், பயறு பச்சை என்று மகளுக்கு அனுப்பிவைப்பாள்.

எப்படியாவது பிழைப்பு ஓடணுமே. வெள்ளாமை வரவாசியும் கிடையாது. மம்பட்டி தூக்கி வேலைக்குப் போய் கொத்துக் கூலி கொண்டு வரவும் ஆளில்லை. அம்மாவும் அய்யாவும் கலந்துபேசி முடிவெடுத்து கடை ஆரம்பித்தார்கள். அய்யா மற்ற விவகாரங்களைக் குறைத்துக்கொண்டு கடைக்குச் சாமான்கள் வாங்கிப்போடுவதில் அக்கறை காட்டினார். அஞ்சாறு மைல் கோயில்பட்டிக்கு நடந்தே போய்த் திரும்புவார். சாக்கு நிறைய சரக்கு வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு தேக்கு மரமாக நடந்துவருவார். கடையை முழுக்க முழுக்க அம்மா கவனித்துக் கொண்டாள்.

கடை நல்ல முறையில் நடந்தது. கையில் நாலு துட்டுப் புரண்டது. அம்மா மணப்பலகைக் கடியிலும் சுவரிலும் உண்டியல் கலயத்தைப் புதைத்து வைத்து சிறுவாடு சேர்த்தாள். கீழூர் முதலாளியிடம் கொஞ்சம் தோட்டத்தை விலைக்கு வாங்கினார்கள். பிறகு மேலக்காட்டில் ஏழு குருக்கம் கரிசல் வாங்கினார்கள். வீட்டுக்கு வெள்ளாமை வரத் தொடங்கியது. குடும்பத்தில் தெம்பு குடியேறியது.

அய்யா கோவத்தைக் குறைத்து நிதானப்பட்டிருந்தார். முடிந்தவரை வழக்குகளை வீட்டில் வைத்தே பேசி முடித்தார். சேட்டை பண்ணுகிறவர்களுக்குப் புத்திமதி சொன்னார். இதையெல்லாம் பார்க்கும்போது அம்மாவுக்குச் சந்தோசமாக இருந்தது.

நாட்டில் சண்டை மும்முரமாக நடந்துகொண்டிருந்த நேரம் அது. பட்டாளத்துக்கு நிறைய ஆளெடுத்தார்கள். அய்யாவுக்கு மனசில் என்ன தோணியதோ தெரியவில்லை பட்டாளக் கிறுக்கு அவரைத் தொற்றிக் கொண்டது. அங்கே போனால் பணம் சம்பாதிக்கலாமென்றோ பழைய கைவரிசையைக் காட்டலாமென்றோ நினைத்திருக்கலாம். விளையாட்டுப்போல் போய் நின்றிருக்கிறார். சேர்த்துக் கொண்டார்கள். ஒரு வெருச்சியில் போய்விட்டார். எல்லாரும் அழுகையும் கண்ணீருமாக தவித்துப்போனார்கள்.

அம்மா மனசு தளரவில்லை. வைராக்கியமாகக் கடையை நடத்தி பிள்ளைகளைக் காப்பாற்றினாள். அய்யா பட்டாளத்து உடுப்பில் போட்டோ அனுப்பி வைத்தார். அப்போதுதான் எல்லாருக்கும் ஆறுதல்.

பட்டாளத்துக்குப் போன மனுசனுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. உடல் ஒருபக்கமும் மனசு ஒரு பக்கமுமாக உளைந்து கொண்டிருந்தார். ஒரு நாள் காட்டில் ஒளிந்து உட்கார்ந்தபடி கந்தூங்கும்போது ஒரு பிள்ளை பின்புறமாக வந்து கழுத்தைக் கட்டிய மாதிரி இருந்தது. திடுக்கென்று முழித்துப் பார்த்தால் சுற்றிலும் ஒரே காடு. சே... கூறுகெட்ட காரியம் பண்ணிவிட்டோமே பெண்டாட்டி பிள்ளைகள் என்ன செய்கிறார்களோ ஏது செய்கிறார்களோ என்று மனசு கிடந்து அடித்துக் கொண்டது. அவ்வளவுதான். சொல்லாமல் பெட்டி சட்டியுடன் வீட்டுக்கு வந்துவிட்டார்.

வந்தும் நிம்மதியில்லை. ஆளைக் காணுமே என்று ஊருக்குத் தேடி வந்துவிட்டார்கள். சமாளிப்பதற்குள் பெரும்பாடாய்ப் போயிற்று. முதல் காரியமாக அய்யா பட்டாளத்துச் சாமான்களை மச்சு வீட்டுக்குள் குழிவெட்டிப் புதைத்து விட்டார். அப்படியும் தொறட்டு அமுங்கவில்லை. மறுபடியும் தேடிவந்தார்கள். அன்றைக்கு அய்யா வீட்டுக்குள் இருந்தார். காரியம் கெட்டுப்போச்சே என்று அம்மா பதறித் துடித்தாள். ஆனால் அய்யா அசரவில்லை. அருவமில்லாமல் மச்சில் ஏறி பின்புறமாக கூரையைப் பிரித்து தக்கென்று கீழே குதித்து கையில் ரெண்டு கல்லெடுத்துக்கொண்டு தெற்காமல் கண்மாயைப் பார்த்துக் கெலித்துவிட்டார். பிறகு வெற்று வீட்டில் சோதனை போட்டு என்ன செய்ய. அம்மாவுக்கு அப்போதுதான் நிம்மதி வந்தது.

இதில் ஒரு வெட்டு விலக்கு இருந்தது. அய்யா பட்டாளத்தில் சேரும்போது வேதப்பேர் கொடுத்திருக்கிறார். ஆனால் ஊரிலோ பெரும்பாலும் இந்துப் பேர் சொல்லித்தான் பழக்கம். யோசித்துப் பார்த்தார்கள். ஒரு வழி கிடைத்தது. வேதப் பேரில் அப்படியொரு ஆளே கிடையாது என்று அடித்துச் சொல்லி விட்டார்கள். அதுக்குப்பிறகு யாரும் தேடி வரவில்லை. அதோடு சள்ளை முடிந்தது.

ஆனால் வேறொரு சஞ்சலம் வந்து சேர்ந்தது. நோஞ்ச மாட்டை ஈ கடித்த மாதிரி அய்யாவை கடுமையான சீக்கு பற்றிக் கொண்டது. ஓயாத இருமல். கபம் கட்டி நெஞ்செல்லாம் பனஞ்சில்லாடையாக அரித்துவிட்டது. என்னேரமும் உட்கார்ந்திருக்க வேண்டிய கட்டாயம். அதுவே அவருக்குப் பெரிய வேதனையாக இருந்தது. இப்போதும் அவரைத் தேடி நிறையப் பேர் வந்தார்கள். காரணந்தான் வேறு.

அவருக்காக ஒரு மாடு வாங்கி நிதமும் பசும்பால் கொடுத்தார்கள். யார் யாரோ விதவிதமான மருந்துக்கறி சம்பாரித்துக் கொண்டு வந்தார்கள். எதிலும் சீக்கு அடிபடவில்லை. கடைக்குச் சாமான் சுமந்து சுமந்து நெஞ்சுத்தகை வந்துவிட்டதாகச் சொன்னார்கள். வேண்டாதவர்கள் செய்வினை செய்துவிட்டதாகவும் பேசிக் கொண்டார்கள். அதுக்குப் பரிகாரமாக கம்பளத்துக்குப் போய் மந்திரித்து தாயத்து வாங்கிவந்து கட்டினார்கள்.

அந்தக் காலத்தில் காசத்திற்குச் சொன்னங்கமான மருந்து ஆஸ்பத்திரியில் கூட கிடையாது என்று சொன்னார்கள். ஒருவேளை மதுரை பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோனால் தாவலையாகலாம் என்று சிலர் நம்பிக்கை கொடுத்தார்கள். அப்படியாவது அய்யா சொகமாகி பழையபடி நடமாட மாட்டாரா என்று சொல்லி அம்மா கண்ணீருகுத்தாள்.

பெரியாஸ்பத்திரியில் வேலைபார்த்த பெருமாள் பகடையைச் சிபாரிசு பிடித்து அய்யாவைப் படுக்கையில் சேர்த்தார்கள். அம்மா கூட இருந்து கவனித்துக்கொண்டாள். அப்போது அவன் சின்னப்பிள்ளை. வீட்டில் விட்டு வரமுடியாது. அம்மா மதுரைக்குக் கொண்டுவந்துவிட்டாள்.

ராத்திரி நேரம் அவள் ஆஸ்பத்திரியில் தங்க முடியாது. ''வெள்ளரிப்பழம்போல புள்ளையப் பெத்து வச்சிருக்கயே, இந்தப் பொல்லாற சீக்கு பச்ச மண்ணுக்கும் பத்திக்கிட்டா என்ன செய்வ பாதகத்தி'' என்று அங்கிருந்த பெண்கள் சொன்னார்கள். அய்யாவுக்கும் அந்தப் பயம் இருந்தது.

அம்மா பகல் முழுக்க அவனை ஆஸ்பத்திரியில் வைத்துக் கொண்டு அய்யாவுக்குத் துணையாக இருப்பாள். அவன் அழுது அச்சலத்தி பண்ணினால் மீனாட்சி கோயிலுக்குக் கொண்டுபோய் பஞ்சவர்ணக் கிளிகளை வேடிக்கை காட்டுவாள். அய்யா அவனை தூரத்திலிருந்து பார்த்துக் கொள்வதுடன் சரி. ராத்திரிக்கு அம்மா பெருமாள் வீட்டில் முடக்கிக் கொள்வாள். பெருமாள் பெண்டாட்டி பேச்சி நல்ல மனுசி. நஞ்சாணியுங் குஞ்சாணியுமாய் பிள்ளைகள். அந்த வீட்டில் ஒருநாள் நடந்த கதையை அம்மா அழுகையையும் சிரிப்பையும் குழைத்துச் சொல்லுவாள்.

''அண்ணைக்கு பேச்சி வீட்ல மாட்டுக்கறி எடுத்துருக்காகாக. புள்ளீகளுக்கின்னா கொண்டாட்டம் சொல்ல முடியாது. சட்டியில கறி சலசலன்னு வேகுது. அந்த மணத்துல அதுக சொக்கிப்போயி

பூனக்குட்டிக மாதிரி அடுப்புக் கூடத்தச் சுத்திச் சுத்தி வருதுக. எங்க எம்புள்ள மாட்டுக்கறி கேட்ருவானோன்னு எனக்குக் கொடலு பெயறவிக்குது. இவனத் தூக்கீட்டு வெளிய போயிட்டென். இருட்டுனப் பெறகுதான் திரும்பி வந்தென். அதுக்குள்ள எல்லாம் முடிஞ்சிருச்சு. புள்ளீக வகுறு நெறஞ்சு அததுபாட்டுக்கு தலமாடும் கால்மாடுமா படுத்து உருண்டுருச்சுக. நானும் இவன பக்கத்துல போட்டுக்கிட்டு அதுகளோட மொடக்கீட்டென்.

நடுச் சாமமிருக்கும். தலையில என்னமோ குளுந்து கெடந்துச்சு. நான் பேச்சிய எழுப்பி புள்ளீக ஏதோ ஒறக்கத்துல மோண்டுருச்சு போலருக்குன்னு சொன்னென். அவ பதறியடிச்சு எந்திரிச்சு வெளக்கப் பொருத்துனா. எனக்கு நனஞ்சுபோன வெளக்கமாரு மாதிரி தலமுடியெல்லாம் கனமாத் தெரியிது. முதுகுல வேற ஈரந்தட்டுது. வேற ஒண்ணுமில்ல. சின்னப்புள்ள ஒண்ணு கறிய திங்கறியாமத் தின்னுட்டு வகுத்துல புடிக்காம அப்படியே கத்தலுங்கதக்கலுமா பீச்சித் தள்ளீருச்சு. கமலத்தண்ணி பாஞ்சதுபோல என் ஒடம்பெல்லாம் நனஞ்சு போச்சு. பேச்சிக்கு வருத்தம்னா வருத்தம். கையும் ஓடல காலும் ஓடல. இப்படி யாயிருச்சே தாயி கொஞ்சம் பொறுத்துக்கங்கன்னு சொல்லி ஒடனே வென்னி வச்சுக்குடுத்து சோப்புப் போட்டு தலைக்கு ஊத்திவுட்டா. சோப்பு மணத்துல கறிக்கவுச்சியெல்லாம் மறந்துருச்சு. மாத்தி உடுத்திக்கிறதுக்கு புதுச்சீல குடுத்தா. என் சீலைய அப்பயே தொவச்சுக் காயப்போட்டா. எம் புள்ளைக்கு மாந்தம் புடிச்சுக்கிருமோன்னு எனக்கு ஒரு பக்கம் பயம். என்ன செய்றது ஒரு கையி இவனத் தட்டிக் குடுக்க ஒரு கையி தலைய ஒணத்த ரெண்டு பேரும் உக்காந்து விடிய விடிய பேச்சுப்பழக்கம் போட்டுக்கிட்ருந்தொம். சும்மா சொல்லப்புடாது. பேச்சி புண்ணியவாட்டி.''

அதுக்குப் பிறகு அய்யா ஆஸ்பத்திரியில் இருப்புக் கொள்ளவில்லை. முள் கவைக்குமேல் படுத்துக் கிடந்ததுபோல் உழத்தினார். வீட்டில் மற்ற பிள்ளைகள் வேறு கசங்கிக் கொண்டிருந்தார்கள். என்னேரமும் அவர் குடும்பத்தைப் பற்றியே பேசினார். சீக்கும் கட்டுப்பட்ட பாடில்லை. வரவர நம்பிக்கை குறைந்து கொண்டிருந்தது. ஒரே மனசாக வீடு திரும்பி விட்டார்கள்.

வீட்டில் அய்யா இருந்தும் இல்லாத நிலைமைதான். ஆள் ரெம்ப ஒடுங்கிப் போனார். ஒரு காலத்தில் அவர் அரட்டலைக் கேட்டு நடுங்காத ஆளில்லை. இப்போது இருமித் துப்புவதற்குக் கூடத் தெம்பில்லாமல் காலொடிந்த புலியாகக் கிடந்தார்.

அம்மா மேலூர் ஜோசியம் பிள்ளையிடம் நடையாக நடந்தாள். அவர் கிரக லட்சணங்களையெல்லாம் அலசிப் பார்த்து அய்யாவுக்குக் கெடுவைத்துவிட்டார். இன்ன கிழமைக்குள் ஆளை அடித்துவிடும், அந்தக் கண்டம் தப்பினால் மண்டையில் கல்லைத் தூக்கிப் போட்டால் கூட சாவில்லை என்று உறுதியாகச் சொன்னார். அய்யாவுக்குச் சாவதைப் பற்றிப் பயமில்லை. வேதனையெல்லாம் ஒரு பிள்ளையைக்கூட கரையேற்றாமல் போகிறோமே என்றுதான்.

ஜோசியம் பிள்ளை சொன்னது பலித்துவிட்டது. எல்லாரையும் விட்டுவிட்டு அய்யா கண்ணை மூடிவிட்டார். ஊரில் திருவிழா மாதிரி சனக்கூட்டம். எங்கிருந்தெல்லாமோ வந்திருந்தார்கள். அவரை மாப்பிள்ளையாகக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

அய்யா துணையில்லாமல் அம்மா பிள்ளைகளை வைத்துக் கொண்டு நல்லதங்காளைவிட மோசமாகக் கஷ்டப்பட்டாள். கடையை மூடியாயிற்று. தோட்டத்தை வாரத்துக்கு விட்டு அந்த வருமானம் வயிற்றுப் பாட்டுக்கு உதவியது. மேலக் கரிசலில் பயறு பச்சை, பருத்தி, தானியம் என்று கொஞ்சம் வந்தது. கொட்டாரத்தில் என்னேரமும் நாலஞ்சு மொய் ஆடு நிற்கும். அதை மேய்ப்பதற்கு ஒரு சம்பளகாரன் வீட்டோடு இருந்தான். கிடைத் தவசமும் பணமும் குடும்பத்துக்கு ஏந்தலாக இருந்தது.

ஏற்கெனவே பேத்தியை மேலே அனுப்பிவிட்ட அப்பச்சி அய்யாவுக்குப் பிறகும் கிடந்து அழுந்தினார். கம்பை என்னேரமும் துணைக்கு வைத்துக்கொண்டார். ''மகனத் தூக்கிக் குடுத்துட்டு கல்லுக் குத்தி மாதிரி இருக்கிறதப்பாரு, பூமிக்குப் பாரமா, நாசமாப்போற கடவுளு இந்த உசிர எடுத்துக்கிட்டு அந்த உசிர வுட்டு வச்சிருக்கப்புடாதா'' என்று அவர் காதுப்படவே சொன்னார்கள். அவர் விதியை நொந்தபடி விரல் மொளியைக் கடித்துக் காய்க்க வைத்துக் கொண்டிருந்தார். ஆடுமாடுகளுக்குக் கயிறு திரித்தும் பக்கத்துவீட்டுப் பங்காளிகளுடன் சதா தகராறு பண்ணியும் அவர் காலம் தள்ளாடியது.

வற்றிய குளத்தில் துள்ளும் மீன்களைப்போல் பிள்ளைகள் அலை மோதினார்கள். தரையில் படுத்தால் மண் சுடும். மேலே வந்தால் நீர் சுடும். அம்மா தாய்க்கோழியாக பிள்ளைகளுக்கு இரைதேடிக் கொடுத்தாள். அந்த நிலைமையிலும் அவனையும் அண்ணனையும் படிக்க வைத்தாள். செலவைப் பற்றிக் கவலைப்படவில்லை. கால்

தேய மேலூருக்கும் கீழூருக்கும் சளைக்காமல் நடந்து கொண்டிருப்பாள். யாரையாவது கெஞ்சி கடன் வாங்கி வந்து விடுவாள். யாரும் இல்லையென்று கையை விரித்ததில்லை.

அவன் இப்போது அண்ணனுடன் வடக்கூர் பள்ளிக்கூடத்தில் படித்தான். ரெண்டு மைல் நடக்கணும். கூட ஏழெட்டுப் பிள்ளைகள் படித்தார்கள். வழிநெடுக விளையாட்டும் வேடிக்கையுந்தான். அதனால் நடை தோணாது.

தூக்குவாளியில் சுடுசோறு வைத்துக் கொடுக்காமல் அம்மாவுக்கு மனசு ஆறாது. இதுக்காகவே விடியக்காலம் எழுந்து சோளச்சோறு காய்ச்சிக் கவுத்தியிருப்பாள். காலையில் சுடச்சுட சாப்பிட்டால் பிசினாக இருக்கும். முதலில் சோற்றுக்கு மேல் தோசையாகப் படர்ந்திருக்கும் ஆடையைத் தின்றுவிட்டுத்தான் மறு வேலை. தூக்குவாளிச் சோற்றுக்குள் ரெண்டு சர்க்கரைக் கட்டியைப் புதைத்துவிட்டால் இளஞ்சூட்டில் இளகி மதியம் சாப்பிட இனிப்புப் பொங்கல் மாதிரி ருசியாக இருக்கும்.

ஊரில் நல்ல காரியம் நடக்கும்போது பந்தியில் நெல்லுச் சோறும் குழம்பும் தனியாக எடுத்துவைத்து சோற்றில் தண்ணீர் ஊற்றி பக்குவப்படுத்துவாள் அம்மா. காலையில் அரித்தெடுத்து தூக்குவாளியில் போட்டு சுட வைத்த புளிக்குழம்பையும் ரசத்தையும் ஊற்றிவிடுவாள். அவன் வகுப்பில் இருந்தாலும் மனசு தூக்குவாளியைச் சுற்றிவரும். மதியம் ஒரு கை பார்க்கும் வரை ஆசை அடங்காது.

சோற்றுக்கும் வெஞ்சனத்துக்கும் பொருத்தமாக ருசி சேர்ப்பதில் அம்மா மன்னச்சி. வீட்டில் நவதானியங்களும் நடமாடும். அவள் வைக்கும் வெஞ்சன வகைகளை எண்ணி முடியாது. அதேபோல் அவள் செய்யும் தின்பண்டங்களுக்குக் கணக்கில்லை. அதெல்லாம் கடையில் கிடைக்காத சமாச்சாரங்கள்.

அம்மாவுக்கு சிரிப்பதைப் போலவே அழவும் பிடிக்கும். யார் வீட்டில் சாவு விழுந்தாலும் முதல் ஆளாகப் போய் உட்கார்ந்து அழுகை தொடுப்பாள். அய்யாவை நினைத்து நினைத்து ஒப்பாரி மழை வெள்ளமாக வந்து கொண்டேயிருக்கும்.

பட்டுத் துணியுடுத்தி - நான்
பாதவழி போனாலும்
எனக்கு வாச்ச மந்திரியே - நீ
இல்லாற நாளையில
பட்ட வெலமதிப்பார் - என்
பாதரவ ஆரறிவார்.

ஈனாத எருமையிட்ட - நான்
எஞ்சோகம் சொன்னமின்னா
எஞ்சாமி எந்தொரையே
எனக்கு வாச்ச மந்திரியே
ஈனாத எருமகூட
எடுத்த புல்லக் கீழபோடும்.

*மதியம் பசிக்கிறதென்று அவன்அம்மாவைத் தேடிப்போனால் அவளுடைய ஒற்றைக்குரல் மட்டும் கதறிக்கொண்டிருக்கும். அழுகை வடியும்வரை அமர்த்தாமல் மற்றவர்கள் ஈரக்கண்களுடன் அவளையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவனும் ஒப்பாரி ராகத்தில் பசிமறந்து நிற்பான்.*

*அம்மா அவனை கண்ணுக்குள்ளேயே வைத்து பொத்திப் பொத்தி வளர்த்தாள். அவனுக்கு என்னமும் ஏதுமென்றால் பதறித் துடித்துப்போவாள். ஒருதடவை அக்கா கஞ்சிப் பானையை வறண்டிக் கழுவிக்கொண்டிருக்கும்போது தேங்காய்ச் சில்லைப்போல் கரிப்பத்தலை வாங்கி அப்படியே வாயில் போட்டுக் குதப்பிவிட்டான். அந்த ருசியில் நிதானமாக மெல்ல முடியவில்லை. அது வசமாகத் தொண்டையில் மாட்டிக் கொண்டது. அவன் கண்ணைச் சொருகிச் சொருகி முழித்தான். பேச்செழும்பவில்லை. அக்கா ஓடிவந்து அவன் வாய்க்குள் கையைவிட்டு தொண்டைக் குழியில் ரத்தம் வரத் தோண்டியெடுத்தாள். அன்றைக்கு அவளுக்கு அம்மா கொடுத்த கொடையும் அடியும் சொல்ல முடியாது. அதோடு அந்தக் கூத்து முடியவில்லை. கரிப்பத்தலுக்காக அவன் பலநாள் அக்காவைச் சுற்றி வந்திருக்கிறான். அம்மாவின் வசவு வரும்.*

*''சவங்கப் பெய காக்கா மாதிரி அண்டம் போடுறதப் பாரு.''*

ஒருநாள் இன்னும் பெரிய கூத்து நடந்தது. பிராமணக்குடிப் பெண் ஒருத்தி அவனுடன் படித்தாள். கிராம முன்சீப்புக்கு மதினியார் வயிற்றுப் பேத்தி. தாத்தா வீட்டிலிருந்துகொண்டு படித்தாள். பணக்காரக் குடும்பம். நிறைய பிராமணர்களுக்கு அவனுடைய ஊரில் நஞ்சைகள் உண்டு. எல்லாவற்றையும் பொறுப்புக்கு விட்டு நெல்லைக் கொண்டுபோவார்கள். கிராம முன்சீப்பை பெரிய வீட்டய்யர் என்று சொல்லுவார்கள். அவரை தூரத்தில் பார்த்தாலே ஓரத்தில் விலகி எல்லாரும் தோள் துண்டை கொடுங்கைக்கு இறக்கி கும்பிடு போடுவார்கள்.

பெரிய வீட்டய்யர் பேத்திக்கும் அவனுக்கும் நல்ல சிநேகம். அன்னியோன்னியமாகப் பழகுவார்கள். அவள் அவனுக்குத் திண்பண்டங்கள் கொடுப்பாள். நிறைய பாடுபழமை பேசுவார்கள். ஒருநாள் அவள் அவனை ''எங்க ஆத்துக்கு வரயா'' என்று கூப்பிட அவனும் ஆர்வத்துடன் பின்னால் போய்விட்டான். ரெம்பப் பெரிய வீடு. நிறையத் தூண்கள். முன்புறம் கம்பி அளிப் பாய்ச்சியிருந்தது. முன்வாசலிலிருந்து புறவாசலுக்குப் போகும் வழி ஒரு தெரு மாதிரி இருந்தது. நல்ல வேளை அய்யர் இல்லை. அய்யரம்மா அடுத்த வீட்டுக்குப் போயிருந்தது. அவன் அவளுடன் தூணைச் சுற்றி ஆசை தீர விளையாடினான். சந்தோசம் ததும்ப துள்ளிக்கொண்டு பள்ளிக்கூடம் திரும்பினார்கள்.

நடந்த கதையை அன்று சாயங்காலம் அவன் அம்மாவிடம் திக்கிச் திக்கிச் சொன்னபோது அவள் முகம் பேயறைந்தமாதிரி ஆகிவிட்டது. மார்பில் அடிக்காத குறையாகப் புலம்பிக் கொண்டு அவனுடைய உச்சிமுடியைப் பிடித்து அரட்டினாள்.

''அடப்பாவி மகனே என்ன காரியம் பண்ணீட்ட. நான் இந்த ஊருல குடியிருக்க முடியாதே. இத ஆருட்டயும் சொன்ன கொன்னு குழியத் தோண்டி வச்சிருவென்.''

ஒவ்வொரு நாளும் அவள் மனசு பதறிய கருமாயத்தைச் சொல்ல முடியாது. பெரிய வீட்டய்யர் எப்போது கூப்பிடுவாரோ என்ன நடக்குமோ என்று இலையும் குலையுமாக இருந்தாள். நல்ல வேளைக்கு விவகாரம் அவர்களுடனேயே அமுங்கிவிட்டது. அம்மா நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.

பிறகெல்லாம் அய்யர் வீட்டுப் பெண்ணைக் கொஞ்சம் அன்னியமாகவே பார்த்தான். அவள் வீட்டுக்குக் கூப்பிட்டால் கஷ்டப்பட்டு மறுத்துவிடுவான். அவள் முகம் வாடிவிடும். அவன் எப்படியாவது சந்தோசப்படுத்துவான்.

இனியொரு அய்யர் கதை வேடிக்கையானது. அவருக்கு அளவுக்கு மீறி மூட்டுப்பருத்த உடம்பு. வேட்டி துண்டு அவருக்கென்று தனியாகத்தான் நெய்யணும். பூணூலுக்கு ஒரு கண்டு காணாது. பருத்தி மருகைக்குக் கால் முளைத்த மாதிரி அசைந்து அசைந்து நடந்து வருவார். எல்லாரும் பொதி அய்யர் என்று சொல்லுவார்கள். அப்பிராணி மனுசன்.

வயக்காட்டிலிருந்து திரும்பும் வழியில் காளியம்மா கோயில் ஓடையைக் கடக்கும்போது வகைதொகையில்லாமல் பாதைமாறி கால் வைத்துவிட்டார். தொடைவரை சேற்றில் புதைந்து அடுத்த எட்டு வைக்க முடியாமல் அப்படியே சப்பென்று உட்கார்ந்து விட்டார்.

ரெண்டுங்கெட்ட நேரம். சுற்றிலும் ஒரு சுடுகுஞ்சிகூட தட்டுப்படவில்லை. பையை கக்கத்தில் இடுக்கிக்கொண்டு பயந்துபோய் பேந்தப் பேந்த முழித்துக் கொண்டிருந்தார். தலையில் புல்லுக் கடகத்துடன் அந்த வழியாக வந்த அம்மாவுக்கு அவரை இந்தக் கோலத்தில் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது. எட்டத்தில் நின்றபடி கேட்டாள்.

''மேற்க கொஞ்சம் வெலகி வந்துருக்கப்புடாதா சாமி.''

அவர் கஷ்டப்பட்டு பின்புறம் திரும்பிப் பார்த்து தலையிலடித்துக் கொண்டார்.

''புத்தி கெட்டுப்போச்சு.''

''ஊருக்குப்போயி ஆளுகள அனுப்பி வைக்கட்டுமா சாமி.''

''வேண்டாம் தேனி. நீ கொஞ்சம் கைகொடுத்தா போதும்.''

அம்மாவுக்கு உள்ளுக்குள் உதறலெடுத்தது.

'அட கொடுமையே. நான் என்ன செய்யட்டும். இதும் சோதனையா. எட்ட நின்னாலே தீட்டுனு ஓடுற சனங்களாச்சே. தொட்டுத் தூக்கீட்டு அந்தப் பாவத்த எங்க கொண்டுபோயித் தொலைக்கிறது. இத்தப்பெரிய மனுசன எப்படிக் கௌப்புறது.'

அவர் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். அம்மாவுக்கு மனசு இளகிவிட்டது. ஆபத்துக்குப் பாவமில்லை என்று திடப்படுத்திக் கொண்டாள்.

''அப்படியே இருங்க சாமி இந்தா வந்துறென்.''

அவள் புல்லுக்கடகத்தை இறக்கிவைத்துவிட்டு சேலையை வரிந்து கட்டினாள்.துணிந்து ஓடைக்குள் இறங்கி அய்யரிடம் பையை வாங்கி அந்தப் பக்கம் விட்டெறிந்தாள். அதுக்குள்ளிருந்த காய்கறிகள் வெளியே வந்து வேடிக்கை பார்த்தன. அவள் அய்யர் கையைப் பிடித்து ஒரே மூச்சில் தரதரவென்று இழுத்துக்கொண்டு வந்து கரைசேர்த்துவிட்டாள். அவர் அழாததுதான் குறை. முகத்தில் அப்படியொரு கனத்த பார்வை. ''நீ நல்லாருக்கணும்'' என்பதுபோல் கையை உயர்த்தினார். அம்மாவுக்கு வருத்தமாக இருந்தது.

கொஞ்ச தூரம் வந்து திரும்பிப் பார்த்தாள். அய்யர் ஓடைத் தண்ணீரில் உடம்புச் சேற்றுடன் தீட்டுப்பாவத்தையும் கழுவிக் கொண்டிருந்தார். அவள் வீட்டுக்கு வந்த முதல் வேலையாக தலைமுழுகிக் குளித்து அய்யரைத் தொட்ட பாவத்தைக் கழுவினாள். பிறகு பிறகு அவள் இந்தக் கதையைச் சொல்லும்போது சிரிப்பில் நனைந்திருக்கும் முகம் வருத்தத்தில் வறண்டுவிடும்.

அவன் வீடு ரெண்டு தடவை தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிட்டது. வரிசைக்கு அஞ்சாறு வீடு மொட்டையாகிப் போனது. முதல் தடவை கூரைக்கு வேண்டிய சாமான்களைச் சம்பாரித்து மேய்வதற்குள் பெரும்பாடாய்ப் போயிற்று. சர்க்காரிலிருந்து கொஞ்சம் பணமும் ஒரு சேலையும் கொடுத்தார்கள். அம்மா சேலையை பிரியமாக உடுத்திக் கொண்டாள். அதை வல்லம்பட்டிச் சேலை என்று சொல்லுவாள். அது வெளுத்து வந்த நேரம் அவன் ராத்திரிக்கு மூடிப்படுத்துக் கொள்வான். கதகதப்பாக இருக்கும்.

ரெண்டாவது தடவை கஷ்டப்பட்டு கூரை மேய அம்மாவுக்கு மனசில்லை. ஓடியாடி பணம் புரட்டி ரெண்டு பத்திக்கும் தகரம் வாங்கி வந்து கவுத்திவிட்டாள். பயமில்லை என்றாலும் தகரம் போட்ட பிறகு வரிசைக்குக் கல் பாரமேற்றிய மூளிக்கோலத்தில் வீடு அந்துசு கெட்டுப்போனது. என்னருந்தாலும் கோபுரம் மாதிரி கூரைக்காகுமா. குளிர்நேரம் கதகதப்பாகவும் வெயில்நேரம் குளிர்ச்சியாகவும் இருக்கும். அந்தச் சொகத்துக்கு ஈடாகாது.

வெயிலடித்தால் தகரக் கணகணப்பில் வீட்டுக்குள் கொஞ்ச நேரம் தங்க முடியாது. தகரத்தின் சிறு சிறு துவாரங்கள் வழியே வீட்டுக்குள் வெயில் முத்து முத்தாகச் சிந்திக் கிடக்கும். அம்மாவால் பெருக்கித் தள்ள முடியாது.

மேலே தகரத்தில் என்ன கதை நடக்கிறதென்று உள்ளே இருந்தபடி கண்டுபிடித்துவிடலாம். காக்காய்க் கால்களின் நடமாட்டத்திற்கும் குருவிகளின் குதிப்புக்கும் வித்தியாசம் தெரியும். ஆசையாக ஏறிவரும் அணில் சூடுதாங்காமல் துள்ளி ஓடும். அதுகளை விரட்டிச் சலித்து ஏமாற்றத்தில் இறங்கிவரும் பூனை சுடுபாதத்தை நாக்கால் தடவிக்கொண்டே அம்மாவிடம் பிராது சொல்லும்.

ராத்திரி வேளையில் மழைபிடித்தால் உறக்கம் கெட்டது. தகரத்தில் மேளக்கச்சேரி தடபுடலாக நடக்கும். காற்றடித்தால் கச்சேரி களை கட்டும். தகரத் துவாரங்களில் மழைத் தண்ணீர் அரும்புகட்டி உதிரும். அக்காமார் ஆளுக்கொரு சட்டியேந்தி ஒழுகும் இடங்களில் வைத்துக் காவலிருப்பார்கள். விளக்கைப் பிடித்தபடி சட்டிகளில் நிறையும் தண்ணீரை வாளியில் வாங்கி வெளியே ஊற்ற வேண்டியது அம்மாவின் வேலை. அவனும் அண்ணனும் பள்ளிக்கூடப் பைக்கட்டுகளை மச்சுவீட்டுக்குள் பத்திரப்படுத்திவிட்டு திருணையில் குக்கிப்போய் உட்கார்ந்திருப்பார்கள். கீழே கோழி மடத்திற்குள் கோழிகள் குர்குர் என்று என்னமோ முணுமுணுத்துக் கொண்டிருக்கும்.

காற்று வீசியடிக்கும்போதெல்லாம் தகரம் எழும்பி எழும்பி அமுங்கும். ''ஒரு தேரம் புடிச்சொம் ஒரு தேரம் வெறிச்சம்னு இல்லாம மழ மனுசர பாடாப் படுத்துதே'' என்று அம்மா அலுத்துக் கொள்வாள். ஒரு தடவை காற்றின் இம்சை தாங்காமல் நாலு தகரம் கல்பாரத்தைப் புரட்டித் தள்ளிவிட்டு பிய்த்துக் கொண்டு பறந்துபோய் கொல்லைப்புறக் கிடங்கில் விழுந்து கிடந்தது. விடிந்த பிறகுதான் அதுகளைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்து வந்து கவுத்தினார்கள். இந்தத் தடவை எழும்பாத படிக்கு பெரிய கல்லாக ஏற்றி வைத்தார்கள்.

அவனுக்குக் கூரைவீட்டுடன் இருந்த அன்னியோன்னியம் தகர வீட்டில் இல்லை. அடிக்கடி வெளியே விளையாடப் போய்விடுவான். ''காலு வீட்ல தருகமாட்டங்குதே'' என்று அம்மா வைதாலும் சட்டை செய்யமாட்டான். அடுப்புக் கூடத்தில் சொகமாக முடக்கிக் கிடக்கும் பூனைகூட வீட்டில் அதிகம் தங்குவதில்லை. படப்படியிலோ மரத்தடியிலோ பகலைக் கழித்துவிட்டு ராத்திரிக்கு வீடு திரும்பி சோற்றுக்காக அம்மாவைச் சுணங்கும்.

எங்காவது ரோடு போடும் சமயத்தில் அவன் மெனக்கிட்டு தார் எடுத்து வந்து தகரத் துவாரங்களை அடைத்து வைப்பான். அது வெயிலுக்கு உருகி மூடிக்கொள்ளும். அதுவும் கொஞ்ச நாள்தான் தாக்குப்பிடிக்கும்.

ஆலமரம்போல் அம்மா பலருக்கும் தாப்பான மனுசி. ''நீ இப்படிப் போ நீ அப்படிப் போ'' என்று நல்லது கெட்டது சொல்லுவாள். ஆம்பளையானாலும் சரி போக்குப் பிடிக்கவில்லை யென்றால் நாற வசவு வைவாள்.

''என்னலே நீ போற போக்குச் சரியில்ல. பொண்டாட்டி புள்ளையக் கவனிச்சு ஒழுங்கா காலந்தள்ளப்போறயா இல்ல வெளக்க மாத்தடி வாங்கப்போறயா. சாணிச் சட்டியில முக்கி ஓம் பொண்டாட்டிய வுட்டே சாத்த வுடுவென் தெரிஞ்சுக்கோ.''

வசவு வாங்கிக் கட்டியவன் சத்தங்காட்டாமல் நழுவிவிடுவான். அதென்னமோ அவள் வார்த்தைக்கு அப்படியொரு மரியாதை.

அவள் ஏராளமான குழந்தைகளுக்குச் சோறூட்டியிருக்கிறாள். தாய் வந்து காலையில் தகவல் சொல்லிவிடணும். அவள் மெனக்கிட்டு ஆழாக்கரிசி பொங்கி உறைப்பில்லாமல் பருப்பு வைத்து குளித்து முழுகி சாமி கும்பிட்டு செல்லமாகச் சோறூட்டுவாள். பெண் குழந்தையென்றால் வசவு ஒரு தினுசாக இருக்கும்.

''அடி என் கள்ளச் சிறுக்கி சிரிச்சு மயக்காமத் தின்னு. மாராயம் பண்ணுன கொமட்டுல குத்தீருவென். கண்ணச் சிமிட்டுறதப் பாரு. எந்தப் புருசங்கிட்டப் போயி இழுபடப்போறயோ''

பிள்ளைகளுக்கு நோய்நொடி வந்துவிட்டால் அவளிடம்தான் கொண்டு வருவார்கள். ஒண்ணொண்ணுக்கும் ஒரு கைப்பக்குவம் வைத்திருப்பாள். கருவக்கொழுந்து, ஆவரம்பூ அரிசி, கொழுஞ்சி வேர், ஆதாளம் பால், வேப்பங்கொழுந்து, சுக்கு, மிளகு, சீரகம், பெருங்காயம், விளக்கெண்ணெய் எத்தனையோ மருந்து வகைகள். குழந்தைகள் வயிற்றில் அவள் குடல் தட்டி விடும்போதும் கண்ணாம்பட்டையைப் பிதுக்கி சூட்டை எடுக்கும்போதும் நாக்கில் கெந்ததாலியை வளிக்கும்போதும் பார்க்கணும். பயமாக இருக்கும். குழந்தை அழுது கிறங்கிவிடும். பெரிய பிள்ளைக்குப் பல் வலியென்றால் இழுத்துப் பிடித்து கண்டங்கத்திரி விதையைப் புகைய வைத்து நாழிநிறையத் தண்ணீரூற்றி வாயைத் திறக்க வைத்து புழுத்தட்டி விடுவாள். சின்னச் சின்னப் புழுவாக தண்ணீரில் செத்து மிதக்கும்.

அம்மாவைப்போல் அவன் கோழிக் குஞ்சுகளுக்கு வைத்தியம் செய்வான். கொக்கரை கிழிந்துவிட்டால் நூல் தையல் போட்டுப் பிழைக்க வைத்துவிடுவான். காலொடிந்தால் ஈரத்துணி வைத்துக் கட்டுவான். கொஞ்ச நாளில் எலும்பு கூடி விடும். அம்மா சந்தோசப் படுவாள். மற்றவர்கள் கோழியானால் அவள் பெருமையாகச் சொல்லிக்காட்டுவாள்.

''எம்புள்ள பக்கும் பாக்கலன்னா ஒங்கோழி இத்தன குஞ்சியக் கூட்டீட்டு அலையும் பாரு.''

ஊருக்குள் சின்ன வியாபாரம் எது வந்தாலும் அம்மாதான் கூட இருந்து விலை வைக்கணும். தொளதொளவென்று முக்கால் கைச் சட்டையைப் போட்டுக்கொண்டு துலுக்கப் பெண்கள் ''சோப்பு சீப்பு கண்ணாடி பூசுபொடி'' என்று கூவுவார்கள். ''ஏ பேரா ஏ பேத்தி'' என்று சிரித்த முகத்துடன் அவர்கள் ஏகட்டுக்கு முறைவைத்துக் கூப்பிடுவதைக் கேட்டாலே பண்டம் வாங்கவேண்டும்போல் தோணும். குமருகள் கூடிக் குசுகுசுத்து கொஞ்ச நேரத்தில் அவர்களை ஏமாற்றி பண்டங்களைக் கடத்திவிடுவார்கள். அந்த ஏமாற்று வேலையெல்லாம் அம்மாவிடம் நடக்காது. வளவிச் செட்டியிடமும் இந்தக் கூத்துத்தான். அம்மா கண்களாலேயே அரட்டிவிடுவாள்.

அவ்வப்போது பானைசட்டி கொண்டுவரும் கோப்பம்மாளின் பாடு இருக்கிறதே அது இன்னும் மோசம். பானைகளை கயிற்றில் கண்டமானக்கி முறுக்கிச் சுற்றி வேனா வெயிலில் நாக்குத்தள்ள சுமந்துவரும். கொத்தாகப் பிடுங்கிய நிலக்கடலைச்செடி தலைகீழாக நடந்து வருவது போலிருக்கும். அம்மா ஓடிப்போய் எதம்பத்தரமாக வேப்ப மரத்தடியில் இறக்கிவைப்பாள். உடனே பெண்கள் மொய்த்து ஆளாளுக்கு ஒரு பானையை எடுத்து கொட்டிப்பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள். அந்தச் சத்தத்தில் எதைக் கவனிப்பது என்று கோப்பம்மாளுக்குக் குழப்பமாக இருக்கும். குடல் பதறும். பானைகள் உடைந்துவிடும் பயம் ஒருபக்கம். முழித்திருக்கும்போதே மாயமாக மறைந்துவிடும் கவலை இன்னொரு பக்கம். ''தேனா வெலவச்சுத் தீத்து வுடுத்தா'' என்று அம்மாவிடம் கெஞ்சும். அம்மா ஒவ்வொண்ணாக உள்ளங்கையில் சுற்றவைத்து கொட்டிப்பார்த்து விலை வைப்பாள். கொஞ்ச நேரத்தில் கோப்பமாளுக்கு தவசமும் துட்டும் குமிந்துவிடும். விற்றுத் தீரும்வரை அம்மா கூடவே இருப்பாள். சில பெண்கள் அவளை மனசுக்குள் வைது தீர்ப்பார்கள். கோப்பம்மா வெற்றிலைச் சக்குப்போட்டுத் தாகந்தணித்து தானியத்தை சந்தோசமாகச் சுமந்து கொண்டு போகும்.

அம்மாவை மற்றவர்கள்அவரவர் தரத்துக்குத் தக்க சாதிக்குத் தக்க தேனா, தேனி, தேனம்மா,தேனாத்தா, தேனம்மாக்கா என்று பல மாதிரியாகக் கூப்பிடுவார்கள். மேகலக் குடிக்காரர்கள் தேனம்மா என்று கூப்பிட்டதே இல்லை. 'அம்மா' அவர்கள் வாய்க்குப் பிடிக்காது. பிறந்த வீட்டில் மட்டும் அவள் பேர் வீரம்மா.

அவளுக்குக் கட்டுக்கொடிபோல் காதுத் தண்டுகள் ஆடும். அதில் எப்போதோ பாம்படம் மாம்பழமாகப் பழுத்துத் தொங்கிய நினைவு. அதை விற்று நாளாகிவிட்டது. சொருகு கொண்டை. கொசுவச் சேலை. சட்டை போட்டதில்லை. பித்துக்கால் செருப்பைவிட்டு இறங்காது. அடுப்படிவரை செருப்புத்தான். ஈர நேரங்களில் பித்து ஊறி குமுறலெடுக்கும். சின்னப்பிள்ளை மாதிரி அவனிடம் சிணுங்குவாள். அவன் ஆயுதம் சம்பாரித்து ஆழமாக அறுத்து விடுவான். கொஞ்சநாளுக்கு வலி குறைந்திருக்கும்.

பெண்களில் குமரி, கிழவி என்று உண்டு. அவன் அம்மாவை இளங்கிழவி என்று சொல்லுவான். அதைக்கேட்டு அவள் மகிழ்ந்து போவாள். மற்ற பெண்களிடம் மகன் வைத்த பேரைச் சொல்லி மாளாது.

அவனுக்காக அம்மா போட்ட ரேகைகள் ஏராளம். பேனா மையென்றால் அழுத்தமாக விழாதென்று வண்டி மையை ஓலையில் எடுத்து வந்து கொடுக்கணும். அவள் அழுத்திப் போட்டுவிட்டுக் கேட்பாள்.

''நல்லா வுழுந்துருக்கா இல்ல இன்னியும் அமுக்கிப் போடணுமா.''

கோயில்பட்டிச் சந்தைக்குப் போய் துணிமணி எடுத்துவந்து அவனுக்கும் அண்ணனுக்கும் போட்டு அழகு பார்ப்பாள். அவன் உல்லாசப் பிரயாணம் போவதற்கு கஷ்டப்பட்டு பணம்புரட்டிக் கொடுத்தனுப்புவாள். ''இல்லன்னா புள்ள ஏங்கிப் போயிருவானே'' என்று ஒரு நியாயம் வைத்திருப்பாள். அவன் துணிகளுக்குச் சோப்புப் போட்டுத் துவைத்து வட்டிலில் கங்குபரத்தி சூடாகத் தேய்த்து மடித்து தலைக்குள் வைத்துப் படுத்துக்கொள்வான். மறுநாள் எடுத்துப் போட்டுக் கொண்டால் மடிப்பு கத்திபோல் தெரியும். கடையில் தேய்த்த துணி தோற்றுப்போகும். அப்போது அம்மாவின் முகத்தில் என்னென்னமோ பொங்கி வடியும்.

அவன் அம்மாவிடம் துட்டு வாங்கிக்கொண்டு சொவட்டுப் பயல்களுடன் சினிமாவுக்குப்போவான். கோயில்பட்டிக்குப் பொடிநடையாக நடந்தால் ரெண்டாவது ஆட்டத்துக்குப் போய்விடலாம். சினிமா விட்டுத் திரும்பும்போது ஆளுக்கொரு பொட்டணம் சேவு வாங்கிக்கொள்வார்கள். அவர்கள் சேவுப் பொட்டணத்தைப் பிரிக்கவும் வண்டிக்காரர் தெம்மாங்கை எடுத்துவிடவும் சரியாக இருக்கும்.

உச்சி எடுத்துக்கிட்டு

ஊரோரம் போற புள்ள

உச்சி அழகக் கண்டு

உழுக மனம் கூடலயே.

*சேவுடன் பாட்டுராகத்தையும் மென்றுகொண்டே உறக்கம் தோணாமல் வீடுவந்து சேருவார்கள்.*

*பக்கத்து ஊர்களில் வில்லுப்பாட்டு, பாவைக்கூத்து, நரிக்குறத்தியாட்டம், நாடகம் என்ன வேடிக்கை நடந்தாலும் அவன் சேக்காளிகளுடன் பார்க்கக் கிளம்பி விடுவான். திரும்பும்போது பொலபொலவென்று விடிந்துவிடும். ஊருக்குள் யாராவது திருச்செந்தூர் முருகனுக்குக் காவடியும் திருவண்ணாமலைப் பெருமாளுக்குத் திரியும் எடுத்தால் ஊர் விளையாடும்போது பாட்டுக்காரனையும் கூட்டிப்போவார்கள். அவன் கணீரென்று காவடிச் சிந்தைப் பாட ஆரம்பித்தால் சனங்கள் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.*

சண்முகம் சன்னதியலங் காரம் - செந்தூர்

சமுத்திரக் கரையது ஓரம்

கந்தனத் தேடிமனம் நாடும் - அங்க

கடலலைபோல சனம் கூடும்.

*பெருமாளைப் பற்றிய பாடலென்றால் அதுக்கொரு ராகம் உண்டு.*

நாடு செழிக்கவேணும் ராமக்கோவிந்தா

நல்ல மழை பேயவேணும் ராமக்கோவிந்தா

பட்டி பெருகவேணும் ராமக்கோவிந்தா

பால்பான பொங்கவேணும் ராமக்கோவிந்தா.

*பல ராகங்களின் சொகத்துக்காவே அவனும் கூட்டத்துடன் சேர்ந்து ஊர்களுக்குப் போவான். அம்மாவைச் சமாளிப்பதொண்ணும் பெரிய காரியமில்லை.*

*அம்மா கோயில் குளத்திற்குப் போய்வரும்போது தின்பண்டங் களுடன் அவனுக்காக பம்பரம், தெல்லுக்காய் என்று விளையாட்டுச் சாமான்களும் வாங்கிவருவாள். அவன் விளாம்பழத்தைக் குடைந்து மூங்கில் குச்சு ஆணி சொருகி அதையும் பம்பாரமாக்கி விடுவான்.*

திருவண்ணாமலைக் கோயிலானாலும் மகாலிங்கம் கோயிலானாலும் அம்மா கட்டுச்சோறு கட்டிக்கொண்டு ஊர்ச்சனங்களுடன் நடந்தே போவாள். ஒரு வருசம் திருவண்ணாமலையில் நடந்த சம்பவத்தைச் சொல்லிப் பெருமைப்பட்டாள்.

''அந்த வருசம் கோயில்ல கூட்டம் ஏராளம். மல முழுக்க தேங்கொளவி மொச்ச மாதிரி சனங்க. எள்ளுப்போட்டா கீழ வுழுகாது. நாங்க வரிவச்சு சாமான் சட்டுமுட்டு வாங்கி சோறு பொங்கி முடிக்கிறதுக்குள்ள பொழுது சாஞ்சிருச்சு. கோணகிரியில குளிச்சு முழுகி கோயிந்தனக் கும்புட்டுட்டு வந்து வெரதம் வுடணும். நம்மூருச் சனங்க எல்லாரும் என்னமட்டும் துணிமணிக்குக் காவலு வச்சிட்டு குளிக்க எறங்கீட்டாக. அவுக வந்தப்பெறகு நான் குளிக்கணும்.''

காவலுருக்கனா. என்னச் சுத்தி காலுகாலா நடந்துபோகுது. அந்தரத்துல சந்தனம் பூசுன மொட்டத் தலையா லாந்துது. நான் அங்கயும் இங்கயுமா வேடிக்க பாத்துட்ருக்கென். பக்கத்துல ஒரு பொட்டணம் காலுமிதிக்குத் தப்பிச்சுக்கிட்டே கெடக்குது. அது என்னன்னு பாத்துறணும்னு எனக்கு நெனப்பு. துணிமணிக மேல ஒரு கண்ணு வச்சுக்கிட்டே அத எடுத்துட்டு வந்தென். தூக்கிப் பாத்தா கனமா இருக்குது. குலுக்குனா சிலுக்குச் சிலுக்குங்குது. ஆரும் பாத்துறாம மறவா மடியில வச்சு அவுத்துப் பாக்கென். அத்தனையும் தங்கச் சாமாங்க. சங்கிலி சரப்புளி காசுமாலன்னு கணக்கில்ல. எனக்குக் கையி ரெண்டும் நடுங்குது.

பெருமாளப்பா மாயாவுதாரா நானே தகப்பன் இல்லாற புள்ளீகள வச்சுக்கிட்டு லொம்பலப்படுறென். அதுகள நல்ல மொறையில காப்பாத்துறதுக்கு வழிகேட்டு ஒன் சன்னதிக்கு வந்தென். நீயே இப்படிச் செஞ்சா எங்க போவென். ஒனக்கு என்ன கொற வச்சென். இந்த நகைகளப் பறிகுடுத்த மகராசி மனசு என்ன பாடுபடுதோ. எப்படிக் கஸ்டப்பட்டு இதுகள வாங்குனாளோ அப்படின்னு எனக்குள்ளயே பொலம்பிக்கிட்டு களவாணி மாதிரி பரக்கப் பரக்கப் பாத்துக்கிட்ருக்கென். அழுக அழுகையா வருது. பொலு பொலுன்னு கண்ணீரு சிந்துது.

நம்மூரு ஆளுக குளிச்சு முடிச்சிட்டு பாறையேறி வாறாக. கிட்ட நெருங்க நெருங்க எனக்கு ஈரக்கொல பதறுது. அவசரமா கண்ணத் தொடச்சுக்கிட்டு நகைகள மூடிக்கிட்டென். எல்லாரும் வந்து துணிமணிகள மாத்துறாக. நான் மட்டும் குளிக்காமக் கொள்ளாம அப்படியே உக்காந்துருக்கென். கீழத்தெருவுக் கெழடன் என்னக்

கவனிச்சிட்டான். என்னம்மா சாவாசமா உக்காந்துட்ட குளிக்கலையான்னு கேட்டான். இங்க வான்னு அவனக் கையலச்சுக் கூப்பிட்டு வெசயத்தச் சொன்னென். நகைகள ஒடையதாரியிட்ட ஒப்படைக்காம நான் ஒரெட்டு நகரப்போறதில்ல, கோயிந்தன் சன்னதிக்குப் போகமாட்டன்னு புடிவாதம் புடிச்சென். அவனுக்கு வந்ததே கோவம். சிறுக்கி மகளே ஒனக்கு இது கொழுப்புத்தான, நீ கஸ்டப்படுறதப் பாத்து கிட்ணன் மனசு எரங்கிக் குடுத்துருக்கான், அத வேணாமிங்கயே, ஒனக்கு அறிவிருக்கா, களவாண்டாத்தான் குத்தம்னு என்னப்புடிச்சு வெரசுறான். கோயிந்தன் எனக்கு நகையக் குடுக்கல,என்னச் சோதிச்சுப் பாக்கான், எத்தன காலத்துக்குத்தான் சோதிப்பான், எவ்வளவோ சோதனையக் குடுத்துட்டான், இதென்ன பெரிசுன்னு நான் பதிலுக் கத போடுறென்.

அதுக்குள்ள எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. என்னது என்னதுன்னு கேட்டு என்னச்சுத்தி வளைச்சுக்கிட்டாக. நான் அவுக கண்ணுலயே காட்டல. கெழடன் கெடந்து குதிக்கான். ஒனக்கு கோட்டிபுடிச்சு சீலையைக் கிழிச்சிட்டுத்தான் அலையப் போறன்னு கண்ணத் துருத்திக்கிட்டு அருமுறுக்குறான். நான் கிறுங்கல.

அந்த நேரம் ஒரு பொம்பளையோட அழுகச் சத்தம் கேக்குது. பாத்தா ஒரு வயசான ஆம்பளையும் பொம்பளையும் அலறியடிச்சுக்கிட்டு வாறாக. நான் கஸ்டப்பட்டுத் தேடுன நகையெல்லாம் போச்சே இதுக்குத்தானா ஒன் சன்னதிக்கு வந்தன்னு அந்தப் பொம்பள அடிவகுத்துல அடிச்சு அடிச்சு அழுது பொலம்புறா. அப்பத்தான் எனக்கு உசிரே வந்துச்சு. அவளக் கூப்புட்டென். மொதல்ல அழுகைய நிறுத்தும்மான்னு சொல்லி கிட்டத்துல உக்கார வச்சென். நகப்பொட்டணத்தக் குடுத்து சரிபாக்கச்சொன்னென். அவ ஆவலா வாங்கி ஒவ்வொண்ணா எடுத்துப்பாத்தா. எல்லாம் சரியாயிருந்துச்சு. அவ மொகத்துல அப்படியொரு கள. எல்லாரும் வேடிக்க பாக்காக. கீழத் தெருவுக் கெழடனுக்குக் கையில அருவாமட்டும் கெடச்சதுன்னா அந்த எடத்துலயே என்னக் கெடாவெட்டிப் பொங்கலு வச்சிருப்பான்.

நகைகள வாங்கிக்கிட்டு புருசனும் பொண்டாட்டியும் என்னவே பாக்காக. கண்ணெல்லாம் கலங்குது.ரெண்டுபேரும் நெடுஞ்சாங் கெடையா எனக்கு முன்னால வுழுந்து கும்புடுறாக. நீ நல்லாருப்ப தாயி, ஒம் புள்ளீக நல்லாருக்கணும்,பெருமாளப்பா ஒன்ன கண்குளிரப் பாத்துட்டன்னு பெரிய மனுசி அழுதுகிட்டே சொல்றா.

அதுகள வழியனுப்பி வச்சிட்டு நான் கோணகிரியில முங்கி முங்கிக் குளிச்சென். ஈரத் தலையோட கோயிந்தன் சன்னதிக்கு மலையேறயில மனசு பெடச்செடுத்த மாதிரி இருந்துச்சு. கூட வந்த கீழத் தெருவுக் கெழடனுக்குக் கோவம் ஆறிப்போச்சு. என்ன ஒரு மாதிரியாப் பாத்து கோட்டிச் சிறுக்கிமக கொணத்த ஆராலயும் மாத்த முடியாதுன்னு சொல்லிச் சிரிச்சான். அந்த மனுசி மனசாரச் சொல்லீட்டுப் போனாளே நாலு வார்த்த அதுதான் எனக்குக் கெடச்ச நகநட்டுன்னு நானும் சொல்லிச் சிரிச்சுக்கிட்டென். பெறகு பெருமாளப்பன் சன்னதிக்குப் போயி நீ எனக்குச் சொத்துச் சொகம் குடுக்கவேணாம் எம்புள்ளீகளுக்கு நல்ல சொகத்தக் குடுத்தாப் போதும்னு கும்புட்டுக் கேட்டுக்கிட்டன்னு வையி.''

அவன் அம்மாவை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது அவள் காதுகளில் பாம்படம், தண்டட்டி, முடிச்சு மூணும் கொத்தாகத் தொங்கியது. மேல் காதில் விளக்குச் சரம்போல் வரிசைக்கு தங்கச் சாமான்கள். மூக்கின் இருபுறமும் துத்திப்பூவாக பேசிறி மூக்குத்தி. கழுத்துப் பிடிக்காமல் சங்கிலிகள். இன்ன வகைதான் என்றில்லை. நகைக் கனத்தில் கொஞ்சம் கொணங்கியிருந்தாள். கோயிலுக்குள்ளிருக்கும் தெய்வம்போல் அவன் கண்களுக்குத் தெரிந்தாள்.

மச்சுவீட்டுச்சுவரில் ராமர் பட்டாபிஷேகப் போட்டோ தொங்கும். கிளிப்பச்சைச் சேலையுடுத்தி சீதை ராமர் மடியில் உட்கார்ந்திருப்பாள். பின்னால் பரதன், லட்சுமணன், சத்ருக்கன் நிற்பார்கள். அடிபணிந்து தண்டனிட்ட கோலத்தில் அனுமார். போட்டோ சட்டத்தைத் துளைத்துக்கொண்டு அவரது வால். மூலையில் சொருவிய பத்திக்குச்சு மிச்சத்தில் தலைவணங்கி யிருக்கும் சாம்பலை சீதை கடைவாய்ச் சிரிப்பில் பார்த்துக் கொண்டிருப்பாள்.

அதுக்குப் பக்கத்தில் அய்யா போட்டோ இருக்கும். வெள்ளை உடுப்பு தொப்பியில் தோரணையாக நிற்பார். கையில் சிறு கம்பு வைத்திருப்பார். இருபுறமும் ரெண்டு பேர். அம்மா அய்யாவின் கையிலிருக்கும் கம்பையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருப்பாள். 'அங்க போயும் கம்பெடுக்கிற புத்தி போகல பாரு' என்று சொல்லுவது போலிருக்கும் அந்தப் பார்வை.

அன்றைக்கு அய்யா ஞாபகம் ரெம்ப வந்துவிட்டதால் மச்சுவீட்டுக்குள் புதைத்திருக்கும் பட்டாளத்துச் சாமான்களைத் தோண்டிப் பார்க்கணும் என்று அம்மா சொன்னாள். வெளிவாசலைப் பூட்டிவிட்டு எல்லாரும் சேர்ந்து தோண்ட ஆரம்பித்தார்கள். அவன்

விளக்குப் பிடித்தான். சாமான்கள் இருந்த முரட்டுப் பை கொலுக்கொலுவாக மக்கிப்போய்விட்டது. உள்ளே கிடந்த துணிமணிகளும் அப்படித்தான். பெரியபெரிய பித்தான்கள் மட்டுமே மிஞ்சியிருந்தன. ஒரு தட்டும் தண்ணீர்ப் போத்தலும்தான் மக்கிப்போகாத பண்டங்கள்.

தொடையில் ஒட்டிக்கொள்கிற மாதிரி வளைவாக இருந்த போத்தலில் தண்ணீர் ஊற்றி அவன் தோளில்போட்டுக்கொண்டு திரிந்தான். தட்டில் சோறு போட்டு பிரியமாகச் சாப்பிட்டான். இதையெல்லாம் பார்த்து அம்மா சந்தோசப்பட்டாள். பிறகு அந்தத் தட்டு நாய்க்குப் பயன்பட்டது.

மச்சுவீட்டுக்குள் கீழச் சுவரோரம் அடுக்குப் பானைகள் வரிசையாக உட்கார்ந்திருக்கும். பனங்காய்களை அடுக்கிவைத்த மாதிரி. அம்மா வயக்காட்டில் தப்புக்கடலை வெட்டி ஒரு பானைக்குள் சேர்த்து வைத்திருப்பாள். கரிசக்காட்டில் அழிவுபருத்தி எடுத்து வாங்கிய கருப்பட்டி வட்டுக்கள் இன்னொரு பானைக்குள் கிடக்கும். மழை நேரத்துக்குத் தோதான பண்டங்கள். வறுத்த கடலைப் பருப்பும் கருப்பட்டியும் கலந்து வயிற்றுக்குள் இறங்கும்போது குளிரே தெரியாது.

ஒருநாள் அவன் பள்ளிக்கூடத்துக்குப் புறப்படும்போது மதியம் தின்பண்டம் வாங்குவதற்குத் துட்டுக் கேட்டு அம்மாவிடம் தலையைச் சொறிந்தான். அவள் சேலை முந்தியைத் தடவிப் பார்த்தாள். அஞ்சறைப்பெட்டியை உருட்டினாள். சல்லிக் காசுகூட இல்லை. பருத்தி இருந்தால் கொடுத்தனுப்பலாம். உள்ளூரென்றால் ஆழாக்குத் தவசம் கொடுத்துச் சமாளித்துவிடலாம். நிலைமையைச் சொன்ன பிறகும் அவன் அடம்பிடித்தான். அவள் அடிக்காத குறையாக அரட்டி அனுப்பிவிட்டாள்.

சாயந்தரம்வரை அவனுக்கு அம்மாமேல் கோவம் குறைய வில்லை. வீட்டுக்கு வந்து வையணும்போலிருந்தது. தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. பைக்கட்டைப் போட்டுவிட்டு விறைப்பாக வெளியே கிளம்பிவிட்டான். பொழுதடையும் வரை விளையாடிக்கொண்டிருந்தான்.

அதுக்குள் அம்மா ''ஏலேய் மாணிக்கம்... ஏலேய் மாணிக்கம்'' என்று தேடிவந்துவிட்டாள். அயலூர்க் காட்டுக்குக் கூலிவேலைக்குப் போயிருந்ததாகச் சொன்னாள். முந்தி முடிச்சிலிருந்து துட்டுக் கொடுத்தாள். அவன் சந்தோசத்தில் துள்ளிக்கொண்டு கடைக்கு ஓடினான்.

கைக்கு மெய்க்குக் காசு இருந்தால் நல்லதென்று அம்மா அவனை ஒரு லீவு நாளன்று கூலிவேலைக்குக் கூட்டிப் போனாள். கைக்களையெடுப்பு அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அவன் தவங்கும்போதெல்லாம் அம்மா அவன் நிரையையும் சேர்த்துச் சமாளித்தாள். அப்படியும் அவன் கையில் நாலஞ்சு கொப்புளம் பழுத்துவிட்டது. அம்மாவின் முகத்தில் கண்ணீர்க் கொப்புளங்கள் உருண்டன. அழுகைக்கு முந்தி வார்த்தைகள் வந்தன.

''புள்ளீகள இப்படி வளக்கனே... என்ன செய்யப் போகுதுகளோ...''

காலம் சூறாவளிச் சுழிப்பாக ஒரு சொடக்கில் எத்தனையோ வருசங்களை அடித்துப்போய்விட்டது. அப்பச்சியும் அம்மாவைப் பெற்ற பேத்தியும் கண்ணை மூடிவிட்டார்கள். அக்காமார் எல்லாரும் தத்தளித்துக் கரையேறி தனித்தனியாகப் போய்விட்டார்கள். அண்ணனுக்கும் அவனுக்கும் வேலையுடன் அப்பா பதவியும் கிடைத்துவிட்டது. தலைமுறையைத் தாண்டிய தெம்பு அம்மாவின் பித்துக் கால்களில் தெரிந்தது.

அவன் நகரவாசியாகி விட்டான். கோயில்பட்டியிலிருந்து மாதம் ரெண்டு மூணு தடவை அம்மாவைப் போய்ப் பார்க்க முடிந்தது. அவளுக்கு அவன் போட்ட முதல் நிபந்தனை இனிமேல் கடன் வாங்கக்கூடாது. அவள் பலமாகத் தலையாட்டினாள்.

வீட்டுத் தகரத்திடமிருந்து அம்மாவுக்கு விடுதலை கொடுத்தாகணும் என்று அவன் நினைத்தான். ''நீங்க வீடு கட்டி நல்லாருந்தாப் போதும். நான் இதுலயே காலத்த முடிச்சுக்கிறென்'' என்று அவள் சொன்னாள். அவன் கேட்கவில்லை. பரம்பரையாக விரிசல்களைப் பூசி மறைத்தும் பனங்கட்டையால் முட்டுக் கொடுத்தும் பாதுகாத்து வந்த மண்சுவர்களை இடிக்கச் சொன்னான். இருந்தாலும் மனராஜ்யத்தின் அரண்மனையாக இருந்த வீடு மண்மேடாகி குறுகிப்போனதில் இனம் புரியாத வருத்தம். அவளுக்குக்கூட பேச்சுத் திக்கியது. கனத்த நினைவுகளுடன் திரும்பினான்.

அடுத்த வாரம் ராத்திரி. அவன் சலூனில் தலைகுனிந்தபடி முடியைச் சிந்திக் கொண்டிருந்தான். இழந்ததை உதறி இருப்பதைச் சரி பார்த்துக்கொண்டு வெளியே வந்தபோது ஊர்க்காரர் காத்திருந்தார். அப்படியென்ன அவசரம்.

''வீட்டுக்குப் போயிட்டு வாறென். ஒண்ணுமில்ல அம்மாவுக்குச் சொகமில்ல. ஒங்களப் பாக்கணும்னு சொல்லுது.''

''போன வாரம் போயிருந்தனே. நல்லாருந்தாளே.''

''திடீர்னுதான். காச்சலு. அண்ணனுக்குத் தந்தி குடுத்துறலாம்.''

தந்தி கொடுக்கும்போது அவர் சொன்னார்.

''உசிரு இல்லன்னே சொல்லீருங்க.''

அவனுக்குள் குப்பென்று அடைத்து அழுகை முட்டியது. அடக்கிக் கொண்டான்.

ராத்திரியே ஊருக்குப் புறப்பட்டார்கள். போய்ச் சேர சாமமாகி விட்டது. ''நீ சொன்ன வார்த்தையக் காப்பாத்தலயே. நான் ஒன்னப் பாக்கமாட்டென்'' என்பதுபோல் அம்மா குப்புறப் படுத்துக் கிடந்தாள். வடக்கூர் பாட்டுக்காரன் மனசுருகப் பாரதம் படித்துக் கொண்டிருந்தான். அவளைச் சுற்றி நிறையப் பேர் பேச்சற்று உட்கார்ந்திருந்தார்கள்.

உண்மையில் அம்மாவுக்குக் காய்ச்சலில்லை. ரத்த வாந்தி எடுக்கும் போது தொண்டைக்குள் கட்டி மாட்டிக்கொண்டு மூச்சுமுட்டிக் கிறுவாணம் சுற்றி விழுந்து அக்கா மகள் மடியில் உயிர் போயிருக்கிறது. என்னென்னமோ சொல்லத் துடித்திருக்கிறாள். முடியவில்லை. அக்கா மகள் சொல்லிச் சொல்லி அழுதாள்.

அம்மா அவ்வப்போது ரத்த வாந்தி எடுப்பதுண்டு. ரெண்டு மூணு நாளுக்கு முந்தியே அந்த அறிகுறி தெரிந்துவிடும். உடம்பு பூரித்திருக்கும். ரத்தக் கவுச்சியடிப்பதாகச் சொல்லி வெற்றிலையால் குமட்டலை அடக்குவாள். ஒருவழியாக வாந்தியெடுத்து முடித்துவிட்டால் பிறகு செழிம்பாக இருப்பாள்.

எவ்வளவோ சொல்லியும் ஆஸ்பத்திரிக்கு வரமாட்டேன் என்று தலையைக் குலுக்கிவிட்டாள். மாத்திரை வாங்கிக் கொடுத்தால் ''குப்பப் புழுவப்போல இருக்குதே இத ஆரு விழுங்கக் கெடக்கு'' என்று சொல்லி மறைவாக மடியில் சொருவி வைத்திருந்து குப்பையில் போட்டுவிடுவாள். அவளுக்கு மதுரை ஆஸ்பத்திரிக் குமட்டல் மனசுக்குள் இன்னும் மண்டியிருந்தது. ''ஒங்கய்யா குடுத்த சீதனம் என்னோட இருந்துட்டுப் போகட்டும், நோயக் கொணமாக்கி இனிமே நான் பொண்ணுக்கா இருக்கப்போறென்'' என்று சாதாரணமாக ஒதுக்கிவிடுவாள்.

மறுநாள் அண்ணன் வந்து சேர்ந்தார். அம்மாவைக் கரை சேர்க்க ஊரில் இன்னொரு தடவை திருவிழாக் கூட்டம் கூடியது. எப்பேர்ப்பட்ட மனுசி என்று எல்லாரும் பேசிக்கொண்டார்கள்.

அம்மாவை பிறந்த வீட்டில் அலங்கரித்துச் சாத்தி வைத்திருந்தார்கள். கழுத்து நிறைய சங்கிலி போட்டிருந்தாள். காதில் கனமான பாம்படம். மஞ்சள் குளித்து சந்தனம் பூசி நெற்றியில் துட்டுப்பொட்டுடன் புது அம்மாவாகக் கால் நீட்டி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு நகைபோட்டுப் பார்க்கணுமென்று அவன் எவ்வளவோ ஆசைப்பட்டான். கடைசிவரை அது நிறைவேறவில்லை. இப்போதுதான் அந்தக் கோலத்தில் பார்க்கக் கொடுத்து வைத்தது. பல அழுகைக் குரல்களுக்கு நடுவே ஒரு அக்காவின் ஒப்பாரி ஓங்கிக் கேட்டது.

முருக்கு திருக்கு மரம்
முட்டாசு காய்க்கும் மரம்
முட்டாசு தின்ன மக்க
என்னப் பெத்த அம்மா - இப்ப
மொகம் வாடி நிக்கிறமே.


அண்ணனும் அவனும் சிறுவர்களாக இருந்தபோது தகப்பனுக்காக மொட்டையடித்தார்கள். இப்போது தகப்பனாகிவிட்ட பிறகு தாய்க்காக மொட்டையடித்தார்கள். ஊரிலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்ட மரம்போல் அவன் உணர்ந்தான். அழுகையழுகையாக வந்தது.


அம்மா நாலெழுத்துப் படித்திருந்தால் அவனுக்குள் மெல்லிய உணர்வுகள் வளர்ந்து கனிந்து பேனாவில் கசிந்திருக்கமுடியுமா என்று தெரியவில்லை. அய்யா இருந்திருந்தால்கூட அவனால் கானகத்தில் வாடும் சீதையை எண்ணிக் கலங்க முடியுமா என்பது சந்தேகமே.

அவனுக்கு அம்மா கொடுத்த சீதனம் ஒண்ணு உண்டு. ஊன்றி மிதிக்கிற முன்பாதத்தில் ஒரே ஒரு பித்து. அது ஈரத்தில் பொருமி வலிக்கும்போதெல்லாம் மனசும் வலிக்கிறது.

மகன் மீன்பிடிக்கப் போனால் அவன் மேல் நம்பிக்கை வைத்து முந்தியே மசாலறைத்துக் காத்திருக்க அம்மா இல்லை. அவனது கால் புண்ணை முந்திச் சேலையால் மூடிப் பாதுகாத்து அக்காவின் ஊருக்குக் கூட்டிப்போய் விடிய விடிய பாவைக்கூத்து காட்ட அம்மா வேணும். சுரைவிதைபோல் முன்னால் செல்லமாகத் தேத்திய இடைப்பல் தெரிய அம்மா கூப்பிடுகிறாள்.

''ஏலேய்....''


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா


ஏலேய்...
பூமணி